அகஸ்தியர்

இரண வைத்தியம்

தாமரை நூலகம், சென்னை - 26.

அகஸ்தியர்

இரண வைத்தியம்

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்:		194
முதல் பதிப்பு	:	ஆகஸ்டு 1997
இரண்டாம் பதிப்பு	:	ஜுலை 2000
மூன்றாம் பதிப்பு	:	அக்டோபர் 2014
நான்காம் பதிப்பு:		**ஜனவரி : 2022**

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர்	: அகஸ்தியர் இரண வைத்தியம்
பதிப்பாசிரியர்	: ஆர்.சி மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் சென்னை-26
பதிப்பு ஆண்டு	: **ஜனவரி : 2022**
உரிமை	: பதிப்பகத்துக்கு
நூல் வடிவம்	: 21 க்கு 14 செ.மீ
அச்சுத்தாள்	: 16கி மேப் லித்தோ
மொத்த பக்கங்கள்	: 104
விலை	: **ரூ. 50**
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை-34

பதிப்புரை

அகஸ்தியர் ரண வைத்தியம் என்ற நூல் நெடு நாளைக்கு முன் வெளியிடப்பட்டு யாருக்கும் கிடைப்பதற்கு அரிதாகி மறைந்து கொண்டிருந்தது. இந்த நூல் என் கையில் கிடைத்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இப்படிப்பட்ட ஒரு நூல் அடியோடு அழிந்து விடக் கூடாது என்ற எண்ணத்தாலேயே உடனே இதனை வெளியிட ஏற்பாடு செய்தேன்.

ரண வைத்தியம் என்பது சாதாரணமான விஷயமல்ல. சொரி, சிரங்கு, படை முதல் அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை, கருங்கிரந்தி, அருவெறுப்பாக, நீர் கசியும் அழி கிரந்தி, இன்னும் கட்டிகள், பிளவைகள், ராஜபிளவை முதலான நோய்களுக்கு சரியான மருந்துவம் மேல் நாட்டு மருத்துவத்தில் கிடையாது.

சித்த மருத்துவத்தால் இந்நோய்களை குணப்படுத்த முடியும். நான் நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு துணிச்சலாக அம்மாதிரி மருத்துவம் செய்பவர்கள் இருக்கிறார்களா? என்பது எனக்கு தெரியவில்லை!

ஏனென்றால் ரண வைத்தியம் முழுவதுமே பாஷாண சரக்குகளை அடிப்படையாகக் கொண்டவை. மிகவும் ஜாக்கிரதையாக கையாளா விட்டால் வாய் வெந்து, குடல் வெந்து நோயாளி மரணம் அடையும் படியாக நேர்ந்துவிடலாம். இந்த நூலைப் படிப்பவர்கள் தக்க அனுபவசாலிகளான பெரிய மருத்துவர்களின் துணை இல்லாமல் எந்த மருந்தையும் செய்யவோ பயன் படுத்தவோக் கூடாது, என்று எச்சரிப்பதற்காகவே இதைக் கூறுகிறோம்.

இந்த நூல் மருத்துவ உலகிற்கு இன்னும் ஒருகளஞ்சியமாகும். இதனை தமிழ் மருத்துவ உலகிற்கு சமர்பிப்பதில் பெருமையடைகிறோம்.

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்.

அகஸ்தியர் ரண வைத்தியத்தின்

வி ஷய சூசிகை.

அட்டவணை

91/4

எச்சரிக்கை

இந்நூலில் கூறபட்டுள்ள மருந்துகள்யாவும் மிகவும் எளிமையானவை நாமே செய்துவிடலாமே என்று நினைத்து தாங்களே, செய்து கொள்ளவோ பிறருக்கு கொடுக்கவோ கூடாது. தக்க அனுபவசாலிகளின் துணையுடனேயே செய்ய வேண்டும்.

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்.

முகவுரை

ஆயுர்வேத சித்த வைத்தியமென்னும் நமது வைத்தியம் தொன்றுதொட்டுக் குரு சிஷ்யக் கிரமத்திலேயே நடந்து வருகிறது. அநுபவ முதிர்ந்தவரை யடுத்துப் பலகால் அவர்களோடு பழகித் தேர்ந்த பின்பே இத்தொழிலில் ஒருவன் முன் வருவது வழக்கம். ஆகையினால் கல்வி, ஒழுக்கம் இவ்விரண்டினுள் கல்வி கற்பதினும், ஒழுக்கம் பழகுவதினும் மேம்படுவது போல வைத்தியம் பழக்கத்தில் அபிவிர்த்தி யடைவதாகிறது. ஒருவரிடத்திலிருந்து ஒன்றைப் பழகுவதெனில் பழக வந்தவன் எவ்வளவோ பணிவும் உபசரணையு முடையவனாயிருந்தாலன்றிக் காரியங் கைகூடாதாகையினால், நமது தேசத்தில் விளங்கிய நல்ல வைத்தியர்களெல்லாம் பண்பட்டவர்களாகவே யிருந்து நோயாளிகளிடத்து இரக்கம் மிகக்கொண்டு பழி பாவங்கட்குப் பயந்து வைத்தியஞ் செய்து வந்தார்கள். அந்த வைத்தியம் தவறாமல் பலித்து வந்தது. வைத்தியரும் அரசன் பிரமுகர் ஊரார் இவர்கள் ஆதரவையடைந்து மான்ய முதலியன பெற்றுச் சுகமாயிருந்து, வைத்திய முறைகளை ஆராய்ச்சி செய்வதும் தம்மை வந்து அடுத்தவர்கட்குப் போதிப்பதுமாயிருந்து வந்தார்கள்.

ஒரு வித்தையோ ஒரு தொழிலோ மேன்மையடைவது ஆதரவிலும், தாழ்மையடைவது அநாதரவிலுமாம். ஆதலால் நமது வைத்தியத்திற்கும் வைத்தியர்க்கும் ஆதரவு குறைந்த காலந்தொடங்கித் தாழ்வேற்பட்டு விட்டமையினால், வைத்தியர் தான்றோன்றிகளாய் முன் வரவும் வைத்தியமுறை பிறழவும் இகழ்ச்சி உலகத்தில் மேலிடவும் காலமாய்விட்டது. இந்நுட்பமுணராதார் சிறிதும் ஆலோசனையின்றி நமது வைத்தியத்தை யொழிந்துவிட முயன்றுவருகின்றனர். இது நோயினால் வலியிழந்த தாயை அவள் தம் நோயை யொழித்துக் காக்க வழிதேடாமல் அவளையே யொழித்துவிட முயலும் பேதையச் செயல்போல்வதாம். யார் எந்தத் தீமையை நமக்குத் தேடினும் அது பலித்து விடுமென்பதில்லையல்லவா? அது தன்வினை தன்னையே சுடும் என்பதுபோல் முடிதலுமுண்டு ஆதலின் நமது வைத்தியத்திற்குச் சூழுங்கேடு பலிக்குமென்று அஞ்சி நாம் இதனைக் குறிப்பிடவில்லை. நம்மவருடைய மதியின் போக்கை விளக்குதற்கேயாம்.

இப்படிக்கிடக்கும் நமது வைத்தியத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து ஒரு ரிபோர்ட்டுத் தமக்கனுப்பும்படி கவர்ன்மெண்டார் டாக்டர் கோமன்

அவர்களை நியமித்தார்கள். டாக்டர் கோமன் அவர்கள் பேர்போன ஆங்கில வைத்தியர். இவர் விசாரிக்கத் தொடங்கி அங்கு மிங்குமாக சிலரை விசாரித்துப் பின், ஒருவாறாகத் தமது கருத்தை வெளியிட்டார். அது மருமகளைப்பற்றி மாமி அபிப்பிராயஞ் சொல்வதுபோலாயிற்று. ஆகவே அவர், தமது ரிபோர்ட்டில் ஆயுர்வேத சித்த வைத்தியத்தில் இரண சிகிச்சையே இல்லையென்று தாம் காண்பதாகக் கூறிவிட்டார்.

இந்த ரிபோர்ட்டைப் படித்த நாள் தொடங்கி நமக்கு மனதில் சங்கடமுண்டாய் வந்தது. டாக்டரவர்களுடைய விசாரணைக் குறைவையும் காலப்போக்கையும், எண்ணிப் பெரிதும் விசனித்தேன். இப்படியிருக்கையில், 16-7-21 ச் தேதியில் சென்னை, தென் இந்திய வைத்திய சங்கத்தார் மைலாப்பூர் கோவில் முன் மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடினர். அதற்கு நீதிபதி பிரஹ்மஸ்ரீ ஸர்.டி. சதாசிவ ஐயர் அவர்கள் தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த எனது நண்பர் வரகவி திரு. அ. சுப்பரமண்யபாரதியவர்கள், அநுதாப மேலிட்டு வைத்தியத்தைப் பற்றிப் பேச முன் வந்து நமது வைத்தியம் சீர்திருத்தமடைதற் கேற்பன சில சொல்லி வருகையில் அவற்றுள் வெளி வராமல் மறைந்து கிடக்கும் நமது வைத்திய நூலை வெளியிடுவது மொன்றாகக் குறிப்பிட்டனர். இதனைத் தாங்கி அக்ராசனாதிபதியவர்களும் பேசினர். எமக்கும் இந்த எண்ணம் வெகு நாட்களாக உண்டு. ஒரு சமயம் தேரையாகரிசல் என்ற நூலைச் சீர்திருத்தி வெளியிட்டிருக்கின்றோம், இப்பொழுது இவர்களுடைய பேச்சும் டாக்டர் கோமன் அவர்களுடைய ரிபோர்ட்டும் இப்புஸ்தகத்தை வெளிக்குக் கொண்டு வரும்படி தூண்டியவைகளாகும். ஆயினும் இதற்கு முக்கியமான காரணபூதர் டாக்டர் கோமனவர்களே! ஆதலின் அவர்கள் நமது வைத்தியத்திற்கு நல்லது செய்யவே வெளிவந்தார். அவர் நம்மைத் தட்டி யெழுப்பித் தூங்காதீர்கள்! விழித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

ஆங்கில வைத்தியங் கற்றுக்கொள்ளச் சௌகர்யங்களிருப்பதுபோல் நமது வைத்தியங் கற்றுக்கொள்ள விரும்பும் ஒருவனுக்கு நல்ல சௌகர்யங்கள் ஒருவகையானும் இல்லையென்பது யாவரும் அறிந்த விஷயம். இது இவ்வாறிருப்பதற்கேற்ப, இதனைக் கற்க முன்னே வருவாருங் காணோம். ஏதோ சிலர் முன்வரினும் இந்த வித்தையை யுணர்ந்த அநுபோகஸ்தரைத் தேடிக் கற்கப் பிரயாசைப் படுவதில்லை. இப்படிப்பட்ட நிலையினதாகிய இதனை நாம் கற்றுக்கொள்ள விரும்பியதற்கும் கற்றுக்கொண்டதற்கும் எமக்கு எமது பரம்பரை வாசனையே காரணமாயிற்று. இதனைப் கற்றுக்கொள்ள யாமடைந்த

சிரமம் பல. அது எமது நண்பர் சிலர்க்கும் எமது மனத்திற்கும் எங்கும் நிறைந்த கடவுளுக்குந்தான் தெரியும். ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொருவரைத் தேடிப் பல இடங்கட்கும் போய்ப் பரஸ்தலவாஸச் சங்கடங்களைப் பொறுத்திருந்து கற்கவேண்டியதாயிற்று. அப்படிக் கற்றுக்கொண்டன பலவும், இப்பொழுது, “தொடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கும். மடங்கொன்றறிவ கற்றுங் கல்வி“ என்று கூறியுள்ளபடி, நாம், எதை விரும்பினும் அதற்குரிய சாதகங்களை எமது ஆசானைப் போல் விளக்கி எமக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்து வருகின்றன. உழைப்புக்குப் பயனும் வேலைக்குக் கூலியுமில்லாமற் போமா? யாவும் ஈசன் செயலேயாம்.

நிற்க, இந்நூல் அகஸ்தியர் செய்தது. தமிழில் நூறு பாடல்களாக அமைந்தது. இதில் பிளவை, கண்டமாலை, குழிப்புண், ஆறாத இரணங்கள், அரையாப்பு, பவுத்திரம், விப்புருதி, மூலம் முதலிய சகல இரணங்களையும் விவரித்திருப்பது மட்டுமல்லாமல், அவைகளைக் கத்திகொண்டறுக்காமல் சிகித்ஸை செய்தற்கேற்ற முறைகளையும் விவரித்துள்ளார். இது எமக்கும் எமது பரம்பரைக்கும் அநுபவமானது. இத்துடன் அகஸ்தியர் புகைபதினாறு என்ற நூலையும் சேர்த்திருக்கின்றேன். இவையிரண்டிலும், வைத்தியரேயன்றி ஏனையரும் படித்துப் பயன் பெறத் தக்கபடி செய்யுட்குரிய உரையும் முறையும் விவரித்திருகின்றேன். கடைசியில் இரணங்களின் இலக்ஷணங்களின்னின் வென்றும் அவை இத்தனை வகையானவை யென்றும் எடுத்து எழுதியிருக்கின்றேன். இந்நூல் ஒருவர் கையிலிருப்பின் அவர்கள் இதனைப் பார்த்து ஆஸ்பத்திரியையும் வைத்தியரையும் தேடிப்போவதற்குமுன் வேண்டிய சிகித்ஸைகளைத் தான் செய்துகொள்வது கூடும்.

இதனை அச்சிடுங்கால், எமக்கு இதனைப் பரிசோதிப்பதில் தமது சிரமங் கருதாமல் உதவி புரிந்த வித்வான், ம. இரா. கோபால பிள்ளை யவர்கட்கும் எமது நன்றி செலுத்தக கடமைபட்டவனாகின்றேன்.

இதிற் பிழைகள் காணின் பொறுத்துக் குணங்களைக் கொண்டு, காணும் அப்பிழைகளை எனக்கறிவித்து எனக்கு இப்படிப்பட்ட முயற்சியில் இன்னும் ஊக்கமுண்டாகும்படி செய்யும் புண்யம் பெறுமாறு வேண்டுகின்றேன்.

-வெ. ரா. சுந்தரம்.

உ
ஸ்ரீ கௌரி சகாயம்.

அகஸ்தியர் இரண வைத்தியம்

தேவிஸ்துதி

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந்
தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவந் தரும் நெஞ்சில்
வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தருமன்ப
ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபிராமி
கடைக்கண்களே.

நூல்

சர்வ ரணங்கட்கு முலாம்

துரிசு சாம்பி ராணியொடு
துத்தங் கருத்த குங்கிலியம்
விரைந்து வகைகள் தூள்கழஞ்சி
விளங்கும் பச்சை வெட்டுடனே
அறைந்த பலமுந் தானொன்றாம்
அறிவாய்க் கல்வ மீதிட்டுத்
திறந்த காட்சி யெள்ளெண்ணெய்
திரமா யரைத்துத் தண்ணிவிட்டே. (1)

விட்டே கழுவி மேல்வழித்து
வேணுஞ் சீலை தனிலூட்டி
திட்டே ரணங்கள் சிங்கிதனைத்
தீரா ரோகம் நீர்சிங்கி
கட்டா யசுவ மழற்சிங்கிக்
கல்லுப் பரங்கி கால்புற்று
மட்டார் குழலே மடமானே
மாண்டு விழுந்து போய்விடுமே. (2)

சாம்பிராணி	*விராகனெடை*	*1¼*	*துருசு*	*விராகனெடை*	*1¼*
பால் துத்தம்	*"*	*"*	*கருங்குங்கிலியம்*	*"*	*"*
வெள்ளைக் குங்கிலியம்	*பலம்*	*1*			

இந்த ஐந்து சரக்குகளையும் நன்றாய்ப் பொடித்து, வஸ்திரகாயஞ் செய்து, கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் செல்லு மளவும் விட்டு நன்றாய் அரைத்துக் குளிர்ந்த ஜலம்விட்டு ஐந்துதரம் அலம்பி ஜலத்தை வடித்துவிட்டு முலானை ஒரு பீங்கான் அல்லது கண்ணாடி டப்பியில் மூடி வைக்கவும். இதனை வெள்ளைத் துணியில் தடவி ரணங்களின்மேல் போட்டுவர எவ்வித ரணமும் ஆறிவிடும்.

பச்சை எருவை

போமே மருந்து வெள்ளையுடன்
பொருந்துந் தாரங் காசொன்று
ஆமே துரிசு மீரிரண்டு
அறிவாய் சுண்ணந் தானிரண்டு
தாமே சிவந்த குங்கிலியம்
தரித்தவிது நாலுடன்கூட்டி
வாமே அரைப்பீ ரெள்ளெண்ணெய்
மதிக்கத் தண்ணீர் தனில்கழுவே. (3)

கழுவி எடுத்துத் துணியிலிட்டுக்
கரையா வழிப்புண் மீதிடவே
வளமாய் வளர்ந்த சதைமுளையும்
மாறாப் புண்ணும் அழுகிரந்தி
தழும்பாம் சிங்கி திமிர்கிரந்தி
தசமாஞ் சூலை வெடிநாசம்
பழமாஞ் செண்டு முலையாளே
பதமாய் மாளு மிளமானே. (4)

கிரந்திக்கு முலாம்

வெள்ளைப் பாஷாணம்	*விராகனெடை*	1	*அரிதாரம்*	*விராகனெடை*	1
துருசு	"	4	*கல்சுண்ணம்*	"	2
சிவப்புக் குங்கிலியம்	"	1			

ஐந்து தினுசுகளில் வெள்ளை, துரிசு தவிர மற்றவைகளை நன்றாய்ப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு அரிதாரத்தை நன்றாய்ப் பொடிசெய்து பின் வெள்ளை, துரிசு இரண்டையுஞ் சேர்த்து செல்லத் தக்க நல்லெண்ணெய்விட்டு நான்கு ஜாமம் அரைத்துக் குளிர்ந்த ஜலம் விட்டுத் தேய்த்து ஜலத்தை இறுத்துவிடவும். இவ்விதம் ஏழு முறை செய்து டப்பியில் வைத்துக்கொள்ளவும். இதனைத் துணியில் தடவி புண்கள் மீது போட்டுவர தீரும் வியாதிகள் – சதை வளர்ச்சி, அழுகிரந்தி ஆறாத ரணங்கள், திமிர்கிரந்தி, சதையைக் கரைத்துக் கிரந்தி முதலிய ரணங்களை ஆற்றும்.

பச்சை சேர்வை சீலை

மானே லிங்கங் கழஞ்சொன்று
மதிக்குந் துரிசு விருகழஞ்சு
தேனே மிருதா ரரைக்கழஞ்சு
தீதா மிரதங் குங்கிலியம்

ஊனே பலமும் மூன்றாக
  உற்ற வெள்ளெண் ணெய்யுடனே
தானே யரைத்துத் தண்ணீர்விட்டுத்
  தருக வெடுத்து வழித்திடுமே. (5)

இடுமே சீலை தனிலூட்டி
  ஏற்ற ரத்த சிங்கிதனில்
ஓடுமே சிங்கி யுடனுரைக்கும்
  உபய முளையுந் தானேகும்
தடுமே பரங்கி கருங்கிரந்தி
  தடிப்பாந் திமிரும் நீர்ப் பாய்ச்சல்
கெடுமே புண்ணும் மடமாதே
  கிரந்தி கடுப்பு மாறிடுமே. (6)

விங்கம்	*விராகனெடை*	*1¼*	*மயில்துத்தம்*	*விராகனெடை*	*2¼*
மிருதார் சிங்கி	*"*	*அரையே அரைக்கால்*	*இரசம்*	*"*	*1*
குங்கிலியம்	*பலம்*	*3*			

இவைகளை நன்றாய்ப் பொடித்து அத்துடன் இரசம் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்துப் பின் செல்லத்தக்க அளவு நல்லெண்ணெய் விட்டு ஒரு ஜாமம் அதாவது மூன்று மணி நேரம் அரைத்துப் பின் சுத்த ஜலம் விட்டு ஏழுதரம் நன்றாய்த் தேய்த்து அலம்பி எடுத்து டப்பியில் வைத்துக் கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள்

இரத்தசிங்கி, முளைகள், கிரந்தி, தடிப்பு, நீர் வடியும் கண்கள் முதலியவைகட்குத் துணியில் தடவிப் போட்டுவர சௌக்கியமாகும்.

வேறு

பச்சை சேர்வை

வெள்ளை கெவுரி அரிதாரம்
  வேண்டு மஞ்சள் நீலமுடன்
பண்டு கழஞ்சு வகைக்கொன்று
  பாகாய்ப் பச்சை பலமிரண்டு

விண்டு மறைக்கு மெள்ளெண்ணெய்
   விதமாய்த் தானீர் விட்டரைத்துக்
கண்டு வழித்துக் துணியிலிட்டுக்
   கதித்த ரணத்தின் மேற்போடே. (7)

போட்டால் சிங்கி பிளவையறும்
   பொருந்துஞ் சதைகள் முளைநாசம்
ஆட்டா குத்தேரடரணைபோம்
   ஆறா ரணங்கள் நீறாகும்
பாட்டால் தடித்த விஷம்போலே
   பறக்கடிக்கும் புண்ரணங்கள்
மாட்டார் வல்ல பச்சையிதை
   மகிழ்வா யுரைத்தோம் வகையிதுவே. (8)

வெள்ளைப் பாஷாணம்	*விராகனெடை*	1¼	*கெவுரி பாஷாணம்*	*விராகனெடை*	1¼
துரிதாரம்	”	”	*மஞ்சள்*	”	”
நீலம்	”	”	*பச்சைவெட்டு*	*பலம்*	2

இவைகளை நன்றாய்த் தூள் செய்து செல்லத்தக்க அளவு நல்லெண்ணெய் விட்டு இரண்டு ஜாமம் அரைத்துப் பின் சுத்த ஜலம் விட்டு ஏழுதரம் அலம்பி டப்பியில் வைத்து கொள்ளவும்.

தீரும் நோய்கள்

சிங்கி, பிளவை, சதை வளர்ந்திருக்கும் இரணம், முளை ஆறாத இரணங்கள் முதலியன ஆறி உலரும்.

வேறு பச்சை

மாறுங் கெவுரி மிருதாரம்
   மதிக்கக் கழஞ்சுமோ ரொன்று
சீறுந் துரிசு தானிரண்டு
   சேர வகைக்கு மெள்ளெண்ணெய்

காரங் கூட்டி யேயரைத்துக்
கலந்த களிம்போ டின்னமொரு
தாரங் கூட்டி மடமானே
சரியாய் நீரில் தான் கழுவே. (9)

கழுவி யெடுத்துக் களிம்புதனைக்
கரிக்கச் சீலை தனிலூட்டி
உருவா வளர்ந்த சதையதனில்
ஊனைக் கரைக்கு முள்சதையும்
மருவும் பலக்காய் தோடகையும்
வசையாம் பரங்கி மார்பிளவை
இருதி யாகுங் கருங்குழலே
இயல்பாய் ரணங்க ளேகிடுமே. (10)

கௌரி பாஷாணம்	*விராகனெடை*	*1¼*	*மிருதார்சிங்கி*	*விராகனெடை*	*1¼*
துரிசு	*"*	*இரண்டரை*	*அரிதாரம்*	*"*	*இரண்டரை*
வெங்காரம்	*"*	*"*			

இந்தத் தினுசுகளை நன்றாய்ப் பொடித்து நல்லெண்ணெய் இட்டு இரண்டு ஜாமம் அரைத்து ஜலம் விட்டு ஏழுதரம் நன்றாய் அலம்பி டப்பியில் வைத்துக்கொண்டு வெள்ளைத் துணியில் தடவி சதை வளர்ச்சி, பரங்கிப்புண், மார்புப்பிளவை முதலிய ரணங்களுக்குப் போட்டுவரக் குணமாகும்.

வேறு பச்சை

கஞ்ச நிமிளை சூதமுடன்
சுத்த வெள்ளை மிருதாரும்
அஞ்ச வகைகள் தான்கழஞ்சு
அடருந் துரிசு மைங்கழஞ்சு
நெஞ்சம் பெருத்த சுண்ணாம்பு
நிகரில் பலமுந் தானொன்று
மஞ்சம் பெருத்த பச்சைவெட்டு
மதிக்கப் பலமுந் தானிரண்டே. (11)

ரெண்டே எள்ளின் எண்ணெய்தனில்
நேரா யரைத்து நீர்விட்டுப்
பண்டு பருத்த சீலைதனில்
பருக்கப் பூசி மேல்போட்டால்
கண்டு சூலை கருங்கிரந்தி
கடியபிளவை கமலக்காய்
உண்டே கெடுக்கும் பவுத்திரமும்
உறுப்புக் குலைந்து போய்விடுமே. (12)

காகறிமிளை	*விராகனெடை*	*1¼*	*ரசம்*	*விராகனெடை*	*1¼*
வெள்ளைப் பாஷாணம்	*"*	*"*	*மிருதார்சிங்கி*	*"*	*"*
துருசு	*"*	*6¼*	*கல் சுண்ணம்*	*பலம்*	*1*
பச்சை வெட்டு	*"*	*2*			

இவைகளை நன்றாய்ப் பொடி செய்து நல்லெண்ணெய்விட்டு மூன்று சாமம் அரைத்துக் குளிர்ந்த ஜலத்தில் ஏழு தரம் விட்டு கழுவி எடுத்து வைத்துக்கொண்டு துணியில் தடவி போட்டுவர, சூலை, கருங்கிரந்தி, பிளவை, கமலக்காய், பவுத்திரம் முதலிய ரணங்கள் ஆறிவிடும்.

பிளவை, பவுத்திரம், கண்டமாலை, கட்டி இவைகளுக்குக் களிம்பு

போமே வெள்ளை கெவுரியுடன்
பொருந்துஞ் சூதம் அரிதாரம்
ஆமே மிருதார் சிங்கியுடன்
ஆன வகைகள் தான்கழஞ்சு
சாமே வெட்டுப் பலநாலு
தாக்குங் குக்கில் பலமொன்று
நேமே யெண்ணெய் தனிலரைத்து
நேருந் தண்ணீர் தனில்கழுவே. (13)

கழுவிச் சீலை தனிலூட்டிக்
கதித்த பரங்கி கடிவிஷமும்
அடுத்த சூலை அரையாப்பும்
ஆன பிளவை பவுத்திரமும்

விடுத்த விஷங்கள் அரவமுடன்
வீணே குட்டம் வெடிசென்னி
தடுத்த பனிச்சை துவளையுடன்
தங்கா தேகிப் போய்விடுமே. (14)

வெள்ளைப் பாஷாணம்	*விராகனெடை*	*1¼*	*கௌரிப் பாஷாணம்*	*விராகனெடை*	*1¼*
பாதரசம்	*"*	*"*	*அரிதாரம்*	*"*	*1¼*
மிருதார் சிங்கி	*"*	*"*	*பச்சை வெட்டு*	*பலம்*	*4*
குக்கில்	*"*	*1*			

குக்கில் தவிர மற்றவைகளையெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து வேறு எடுத்துக்கொண்டு குக்கிலை நன்றாய் அரைத்து தூள்களையுஞ் சேர்த்து நல்லெண்ணெய் விட்டு மூன்றுசாம மரைத்துக் குளிர்ந்த ஜலந்தால் ஏழுதரம் அலம்பி டப்பியில் வைத்துக்கொள்ளவும். இதனைத் துணியில் தடவிப் புண் மீது போட்டுவர சூலை, அரையாப்பு, பிளவை, பவுத்திரம், விஷக்கடி, குஷ்டம் முதலிய நோய்கள் உலர்ந்து சௌக்கியமாகும்.

போமே குக்கில் துரிசுதுத்தம்
பொருந்து மிரதங் கற்பூரம்
ஆமே விளாவின் பிசினுடனே
அரிய வகைக்குப் பலங்காலாய்
வேமே பொருந்தும் பச்சைவெட்டு
விதமாய்ப் பலமுந் தானிரண்டு
தேமே யரைக்கு மெள்ளெண்ணெய்
சேரு நீரில் கழுவிடுமே. (15)

கழுவி யெடுத்த களிம்புதனைக்
கதிக்கச் சீலை தனிலூட்டித்
தழுவி விளைந்த பலத்தோடே
தளராச் சீமா பரங்கியுடன்
அழகைக் குறைக்கு மரிசிங்கி
ஆகாப் பிளவை பவுத்திரமும்
வழுவி வல்ல ரணங்களெல்லாம்
மடிந்து போறே னென்றுசொலும். (16)

குக்கில்	*பலம்*	¼	*துருசு*	*பலம்*	¼
பால் துத்தம்	"	"	*பாதரசம்*	"	"
கற்பூரம்	"	"	*விளாம்பிசின்*	"	..
பச்சைவெட்டு	"	2			

எல்லாம் நன்றாய்ப் பொடித்து நல்லெண்ணெய்விட்டு மூன்று சாமம் அரைத்து ஏழுதரங் குளிர்ந்த நீரில் அலம்பி எடுத்துக்கொண்டு டப்பியில் வைத்துக்கொள்ளவும், பரங்கிப் புண், அரிசிங்கி, பிளவை, பவுத்திரம், முதலிய எல்லா ரணங்களுக்கும் போட்டுவரச் சௌக்கியமுண்டாம்.

கட்டிகட்குக் களிம்பு

சொல்லுந் துத்த நிமிளையுடன்
துருசு மிருதா ரரிதாரம்
வல்லம் பெருத்த வகையொன்று
மதிக்கப் பலமும் காலாகச்
சொல்லும் பச்சை வெட்டுடனே
சுகமாய்ப் பலமும் மூன்றாக
அல்லுங் கருத்த குழலாளே
அரைப்ப தெள்ளெண் ணெயிலிதுவே. (17)

தண்ணீர் வடியுந் தரிசிங்கி
தரியாக் கிரந்தி யரிகிரந்தி
நண்ணும் பெரிய கெச்சையுடன்
நாடும் மூல பவுத்திரமுங்
கண்ணுங் கள்ளிக் கிரந்திகடி
கடிய பிளவை துடைவாழை
எண்ணும் பெரிய தனத்தாளே
எதிரே விழுந்து ஓடிடுமே. (18)

பால் துத்தம்	*பலம்*	¼	*நிமிளை*	*பலம்*	¼
துருசு	"	"	*மிருதார்சிங்கி*	"	
அரிதாரம்	"	"	*பச்சை வெட்டு*	"	2

எல்லாம் நன்றாய்ப் பொடித்து நல்லெண்ணெய் விட்டு மை போல் அரைத்துச் சுத்தம்செய்து எடுத்துக்கொண்டு நீர் வடியும் சிங்கி, கிரந்தி, அரிகிரந்தி, மூலம், கள்ளிக் கிரந்தி, கடிவிஷம், பிளவை, துடைவாழை, முதலிய ரணங்களுக்குப் போட்டுவர ஆறி உலர்ந்துவிடும்.

காரச்சீலை

ஓடும் பச்சைச் சேர்வைக்க
உதித்த நீல மரிதாரம்
பாடும் வகைக்குப் பலமரைதான்
பகரும் வெட்டுப் பலமிரண்டு
நீட வரைப்ப தெள்ளெண்ணெய்
நிலைக்கத் தண்ணீர் விட்டரைத்தே
ஆடு மரவப்படுத்தல்கு
லரிவை சீலை தனிலூட்டே. (19)

ஊட்டி யெடுத்துப் புண்ணிலிட
உதிரங் கிரந்தி யுள்வீக்கம்
நாட்டம் பெரிய நாய்முள்ளு
நசுவக் கிரந்தி நருள்குன்றி
ஆட்டுங் கிரந்தி யரிகிரந்தி
ஆறாப் புண்கள் பவுத்திரமுங்
காட்டு மலரி னிளமாதே
கண்ணுமடக்குங் கண்டாயே. (20)

நீலம்	*பலம்*	*அரை*	*அரிதாரம்*	*பலம்*	*அரை*
பச்சைவெட்டு	*”*	*2*			

முன்போல் அரைத்துக் சுத்திசெய்து டப்பியில் வைத்துக்கொண்டு உதிரக்கிரந்தி, நருள்குன்றி, கிரந்தி, அரிதாரம், பவுத்திரம், ஆறாப்புண்கள், இவைகட்குப் போட்டுவர ஆறிவிடும்.

காரச்சீலை

சுண்ணே துரிசோ டரிதாரங்
 கதித்த சூதங் கெந்தியுடன்
கண்ணே ரிலிங்கம் வெங்காரம்
 நயமாய் வகைக்குத் தான்கழஞ்சு
தண்ணேர் வெள்ளை யெருக்கம்பூச்
 சாறுபலமு மொன்றாக
விண்ணே மத்தஞ் சார்வார்த்து
 வேண்டுஞ் சீலை யுலர்த்திடுமே. (21)

உலர்த்தி யெடுத்துப் பின்பாக
 வுள்ள ரணத்தின் மேற்போட
அலர்த்துஞ் சூலை வெடிநாச
 மசுவக் கிரந்தி யளிகுட்டம்
பலத்த வேழுந் தானகலும்
 பருத்த பனிச்சை பவுத்திரமும்
அலர்ந்த பூவின் குழலணங்கே
 ஆறா ரணமு மாறிடுமே. (22)

துருசு	விராகனெடை	1¼	அரிதாரம்	விராகனெடை	1¼
பாதரசம்	"	"	கெந்தகம்	"	"
இலிங்கம்	"	"	வெங்காரம்	"	"
வெள்ளெருக்கம் பூச்சாறு	பலம்	1	உமத்தஞ்சாறு	பலம்	1

சரக்குகளை நன்றாய்த் தூள்செய்து, பின் இருவிதத்தில் கலந்து அரைத்து துணியில் தடவி வைத்துக்கொண்டு ரணம், சூலை, வெடிப்புக்கிரந்தி, குஷ்டம், இரத்தக்கி பவுத்திரம் முதலியவற்றிற்கு இச்சீலையைப் போட்டு வர ஆறிவிடும்.

சகல ரணங்கட்குந் தைலம்

ஆறுஞ் சூதங் கெந்திகாந்த
மடைவே காரம் லிங்கமுடன்
வேறு வகைக்குப் பலங்காலாய்
விதமாய்ப் பருத்திப் பால்விட்டுச்
சாரு மெள்ளெண் ணெய்தன்னைச்
சதிராய்விட்டுத் தானாட்டிக்
காரச் சீலை தனிலூட்டிக்
கடிய ரணத்தின் மேற்போடே. (23)

போட்ட வுடனே முளைகளறும்
பொருந்து திரமாங் கிஷங்களறுங்
காட்டு முளைக ளாணியறுங்
கடிய பிளவை பவுத்திரமும்
நாட்டும் பெரிய குட்டமுடன்
நளின மாகத் தீர்ந்திடுமே
தேட்ட மாக முனிவரிதைச்
செகத்தோ ருய்யத் தெரித்தனரே. (24)

பாதரசம்	*பலம்*	¼	*காந்தகம்*	*பலம்*	¼
செந்தூரம்	"	"	*வெங்காரம்*	"	"
லிங்கம்	"	"			

எல்லாம் நன்றாய்ப் பொடித்துப் பருத்திக் கொட்டையில் ஜலம் விட்டு அரைத்துப் பிழிந்த பால்விட்டு மேற்படி மருந்தை இரண்டு சாமம் அரைத்துப் பின் நல்லெண்ணெயில் ஒரு சாமம் அரைத்து எடுத்துக்கொண்டு துணியில் நனைத்துப் போட ஆறாதரணம், முளை, பிளவை, பவுத்திரம், குஷ்டரணம், ஆறாப் புண், இவைகள் நீங்கும்.

சகல ரணத்திற்கும் உள்ளுக்குச் சாப்பிடத் தைலம்

நாவி சூதங்கெந்தகமும்
நலமாம் வெள்ளை யரிதாரம்
மேவமிருதார் வெங்காரம்
விதமாங் கஞ்ச நிமிளையுடன்
தாவு துத்தந் துருசுடனே
தரிக்கு மிரதம் மனோசிலையும்
பாவுங் கௌரி தாளகமும்
பரிவாய் வகைக்குத் தான்கழஞ்சே. (25)

கழஞ்சே சாதி லிங்கமுடன்
கதித்த விந்துப் புடன்கூட்டி
வளஞ்சே ரெருக்கன் பால்வார்த்து
வகையா யோருநா ளரைத்தபின்பு
தளஞ்சேர் சதுரக் கள்ளிப்பால்
தானே தினமு மிரண்டாக
அளஞ்சேர் கல்வ மீதிட்டே
யாறு சாம மரைதானே. (26)

தானே யரைத்து நீயூட்டி
தயவாய்த் திரியுந் தான்செய்து
மானே மாலகை யெண்ணெயிலே
மதிக்கத் தோய்த்துத் தான்வாங்கித்
தேனே விளக்கில் பத்தவைக்கத்
திறமாய்த் தைலந் தான்வீழுங்
கோனே குப்பு தனிலடைத்துக்
கொடுநீ யுள்ளே பணவெடைதான். (27)

உள்ளே நாள்தான் பனிரெண்டு
உண்ட போது ரணங்களெலாந்
தள்ளாச் சீழுந் தான்மாறுந்
தனியாய் ரணமுந் தான்மாறும்

விள்ளை ரணத்தின் மீதிடவே
  விரிந்த சதையும் முளைநாசம்
வள்ள லரனார் தரமுமைக்கு
  வகுத்துச் சொன்ன படியிதுவே. (28)

நாபி	*விராகனெடை*	*1¼*	*பாதரசம்*	*விராகனெடை*	*1¼*
நெ. கெந்தி	”	”	*வெள்ளைப் பாஷாணம்*	”	”
அரிதாரம்	”	”	*மிருதார்சிங்கி*	”	”
வெங்காரம்	”	”	*காகநிமிளை*	”	”
பால்துத்தம்	”	”	*துருசு*	”	”
பாதரசம்	”	”	*மனோசிலை*	”	”
கௌரிப் பாஷாணம்	”	”	*தாளகம்*	”	”
இலிங்கம்	”	”	*இந்துப்பு*	”	”

இவைகளை நன்றாய்ப் பொடித்து எருக்கன்பால் விட்டு ஒருநாள் அரைத்து, சதுரக்கள்ளிப்பாலில் ஒரு நாள் அரைத்து வெள்ளைத் துணியில் தடவி, திரிசெய்து வேப்பெண்ணெய் தோய்த்துச் சுடர்த்தைலம் இறக்கவேண்டும், இதனைக் குப்பியில் அடைத்து கையில் காலையில் பணவெடை வீதம், பனிரெண்டு உள்ளுக்குச் சாப்பிட்டுவரச் சகலரணமும் ஆறிவிடும், `இரணங்கள் மீதும் பூசிக்கொண்டு வரவேண்டும்.

வேறு, வெள்ளைக் காரச்சீலை

வெள்ளை கௌரி குங்கிலியம்
  வேணுஞ் சவுடு வகையொன்று
தள்ளி மருந்துவெள் ளைப்பத்துத்
  தனியா யரைத்துப் பொடியாக்கி
வெள்ளைத் துணியுஞ் சமன்போட்டு
  விளங்கப் பொடியாய்த் தான்செய்து
தள்ளுஞ் சதையும் முளைகரையத்
  தூக்கும் வெள்ளைக் காரமிதே. (29)

வெள்ளைப் பாஷாணம்	*பலம்*	*1*	*கௌரிப் பாஷாணம்*	*பலம்*	*1*
குங்கிலியம்	*"*	*"*	*சவுட்டுப்பு*	*"*	*"*
வெள்ளைக் குங்கிலியம்	*"*	*"*	*சுட்ட துணி சாம்பல்*	*"*	*14*

எல்லாம் பொடிசெய்து அரைத்து வைத்துக்கொண்டு இரணங்களின் மீது தூவிவரச் சகல ரணமும் ஆறுவதுடன் முளை கரையும்.

முளைவிழக் கறுப்புக் காரைச்சீலை

வஞ்சங் கௌரி யரிதாரம்
வகையாஞ் சுண்ணந் துத்தமுடன்
அஞ்சு மிருதார் வகையொன்று
அரிய வெள்ளைக் குங்கிலியம்
மிஞ்சப் பலந்தா னதுதானும்
விளங்கச் சீலை சமனாக
மங்க விடித்துப் பொடியாக்கி
மதியாய்ச் சண்டி முளையிலிடே. (30)

கௌரி பாஷாணம்	*பலம்*	*1*	*அரிதாரம்*	*பலம்*	*1*
கற்சுண்ணம்	*"*	*"*	*பால் துத்தம்*	*"*	*"*
மிருதார் சிங்கி	*"*	*"*	*வெள்ளைக் குங்கிலியம்*	*"*	*"*
வெள்ளைத்துணி					
சுட்ட சாம்பல்	*"*	*"*			

வேறு காரைச்சீலை

கெடியாம் வெள்ளை அரிதாரம்
கௌரி மஞ்சள் மிருதாரும்
வெடியாம் வகைக்குக் கழஞ்சொன்று
வேண்டும் நீலம் சமனாகப்
படியாம் பச்சைக் குங்கிலியம்
பலமுஞ் சீலை சமனாக
அடியா யிடித்துப் பொடியாக்கி
அடங்கா ரணத்தின்மேற்போடே. (31)

வெள்ளைப் பாஷாணம்	*விராகனெடை*	*1¼*	*அரிதாரம்*	*விராகனெடை*	*1¼*
கௌரி பாஷாணம்	"	"	*மஞ்சள்*	"	"
மிருதார் சிங்கி	"	"	*நீலம்*	"	"
பச்சைக் குங்கிலியம்					
எனும் பச்சைவெட்டு	*பலம்*	*1*	*சுட்டதுணி*	*பலம்*	*இரண்டரை*

இவைகளை நன்றாய்ப் பொடி செய்து ஆறாக இரணத்தின் மீது தூவிவர ஆறிவிடும் அல்லது உலர்ந்துவிடும்.

இரணம் பிளவை இவைகட்குக் கறுப்புக் காரம்

மஞ்சள் வசம்பு சுட்டகரி
வாகாய் நீலம் வெள்ளையுடன்
அஞ்ச மிருதார் தலையோடும்
அடைவா யிதுவுஞ் சமன்கூட்டித்
தஞ்ச மான பழந்துணியுந்
தனியே நறுக்கிப் பொடியாக்கே
அஞ்ச வளர்ந்த ரணம்பிளவை
யடக்கும் கறுப்புக் காரமிதே. (32)

மஞ்சள்	பலம்	¼	சுட்ட வசம்பு	பலம்	¼
நீலம்	"	"	வெள்ளைப் பாஷாணம்	"	"
மிருதார்சிங்கி	"	"	தலை மண்டை ஓடு இடித்த தூள்	"	"
வெள்ளைப் பழந்துணி சுட்ட சாம்பல்	"	ஒன்றரை			

இவைகளை எல்லாம் நன்றாய்ப் பொடி செய்து இரணங்கள் மேல் போட்டு வர, சதவளர்ச்சி கரைந்து ரணம் ஆறும். இவை ரணமும் ஆறும்.

பொன் சிவப்பு

லிங்கம் காவி சீலைமஞ்சள்
இயங்கும் வெள்ளைச் சங்குடனே
தங்கும் மருந்து வெள்ளைபலம்
தானே சமன்தான் பழந்துணியும்
பொங்க இடித்துப் பல்முளையில்
போடக் கரையும் பொன்சிவப்பே
இங்கிச் கிகிச்சை தனையன்பாய்
இயம்பி னார்கள் ரிஷிகளரோ. (33)

லிங்கம்	*பலம்*	*1*	*காவி*	*பலம்*	*1*
மனோசிலை	"	"	*மஞ்சள்*	"	"
வெள்ளை					
சங்கு சுட்டது	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
பழந்துணி சுட்டது	"	"			

இவை எல்லாம் நன்றாய்ப் பொடித்து முளைகள் மீது பத்துக்கட்ட முளை விழுந்துவிடும், முளை கரைந்துவிடும்.

மூலத்திற்குக் குளிர்ந்த பச்சைக்காரம்

மிருதார் கௌரி அரிதாரம்
முடுக்கம் வெள்ளை துருசுடனே
பருக வெள்ளை மருந்திதுவும்
பாங்காய்த் துணியுஞ் சமனாக
நுறுங்க இடித்துப் போட்டுவர
ஙளைப்புண் கட்டி பவுத்திரத்தோ
டருங்காய் மூலம் குட்டமறும்
அதிகப் பச்சைக் காரமிதே. (34)

மிருதார் சிங்கி	*பலம்*	¼	*கௌரி பாஷாணம்*	*பலம்*	¼
அரிதாரம்	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
மயில் துத்தம்	"	"	*சுட்ட பழந்துணி*	"	*ஒன்றரை*

இவை யெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து பவுத்திர ரோகங்கள், மூலரோகங்கள், குஷ்டரோகங்கள் இவைகளுக்கு மேல் போட்டுவர ஆறி உலர்ந்துவிடும்.

சங்கு கபால வெள்ளையுடன்
சாரும் மருந்து வெள்ளையுடன்
மங்கா தெழுந்த துணிசமனாய்
வணங்கக் கூட்டிப் பொடியாக்கே
தங்கா தெரிவு நீர்வடிந்து
தயங்கும் பிளவை பவுத்திரமும்
ஏங்கிப் பரங்கி எரிசூலை
இவையே குளிரும் வெள்ளையிதே. (35)

தலை மண்டை ஓட்டுப்பொடி	*பலம்*	*அரை*	*சுட்ட சங்கு*	*பலம்*	*அரை*
வெள்ளைப் பாஷாணம்	"	"	*சுட்ட பழந்துணி*	"	*ஒன்றரை*

இவைகளை நன்றாய்ப் பொடிசெய்து அரைத்துப் பொறுக்க முடியாத எரிச்சலுடன் ஜலம் வடியும் புண்கள், பிளவை, பஸ்பங்கள், பரங்கிப்புண், எரிசூலை, இவைகளுக்குப் போட்டுத் தடவி வர ஆறி உலரும்.

குளிர்ந்த பச்சை

முடங்கு மிருதார் சங்குமஞ்சள்
முடுகுங் கருத்த குங்கிலியம்
அடைவாம் வெள்ளைத் துணிசமனாய்
அடங்க இடித்துப் பொடியாக்கே
மடங்காப் பரங்கிப் புற்றுடனே
மாளாப் பிளவை பவுத்திரமும்
அடங்கா ரணங்க ளத்தனையு
மரியும் குளிர்ந்த பச்சையிதே. (36)

மிருதார்சிங்கி	*பலம்*	*அரை*	*சங்கு*	*பலம்*	*அரை*
மஞ்சள்	"	"	*கருங்குங்கிலியம்*	"	"
வெள்ளைத் துணி சுட்டது	"	*2*			

இவை எல்லாம் நன்றாய்ப் பொடிசெய்து பரங்கிப்புற்று, வாத பிளவை, பவுத்திரம், ஆறாக விரணங்கள் இவைகளுக்கு மேல் போட்டுவர எரிச்சல் இல்லாமல் குளிர்ச்சியாய் இருக்கும்.

குளிர்ந்த சிவப்பு

துத்தங் காவி மஞ்சளுடன்
துலங்குஞ் சங்கு தலையுடனே
அத்தஞ் சுண்ணங் குங்கிலியம்
ஆன துணியுஞ் சமனாக
மெத்த விடித்தே விரணத்தின்மேல்
மேவிப் போடப் பிளவைசிங்கி
செத்துச் சிங்கி பவுத்திரமும்
தீருங் குளிர்ந்த சிவப்பிதுவே. (37)

மயில் துத்தம்	*பலம்*	*காவிக்கல்*	*பலம்*
மஞ்சள் பொடி	"	*சங்கு*	"
தலை மண்டை ஓடு	"	*கற்சுண்ணப் பொடி*	"
குங்கிலியம்	"	*பழந்துணி சுட்டது*	"

இவைகளை சமஎடையாக நன்றாய்ப் பொடித்து அரைத்து அதை அழுகிய புண்கள், பிளவை, சிங்கி, பவுத்திரம், இவை மேல் போட்டுவரக் குளிர்ந்து ஆறி உலர்ந்துவிடும்.

மஞ்சள் காரம்

சங்கு மஞ்சள் தலையோடு
தயங்குந் தாரந் துத்தமுடன்
பொங்குங் கரிய குங்கிலியம்
போர்த்துந் துணியுஞ் சமனாக

மங்க இடித்துப் பொடியாக்கி
வலிமை கொண்ட எரிசிங்கி
எங்கும் பரங்கி யிவையெல்லாம்
ஏகும் மஞ்சள் காரமிதே. (38)

சங்கு	*பலம்*	*அரை*	*மஞ்சள்*	*பலம்*	*அரை*
தலைமண்டை ஓடு	"	"	*அரிதாரம்*	"	"
பால் துத்தம்	"	"	*கருங்குங்கிலியம்*	"	"
சுட்ட பழந்துணி	"	3			

முதலில் அரிதாரத்தை நன்றாய்ப் பொடி செய்து மண்டை ஓட்டை இடித்துப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து நிறுத்துச் சேர்த்து மற்ற சரக்குகளையும் சேர்த்து நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு எரிசிங்கி பரங்கிப்புண் முதலிய எவ்வித ரணத்திற்கும் போட்டுவர ஆறிவிடும்.

நீலக்காரம்

சங்கு துரிசு துத்தமுடன்
தனித்த மருந்து வெள்ளையிது
பொங்கு நீலஞ் சமனாகப்
பொருந்தும் வெள்ளைத் துணிசமனாய்ப்
பங்கப் படவே பொடியாக்கிப்
பருத்து விரிந்த எரிரணத்தில்
மங்கி யிடவே யெரிசிங்கி
மாளும் நீலக் காரமிதே. (39)

சங்கு	*பலம்*	¼	*மயில் துத்தம்*	*பலம்*	¼
பால் துத்தம்	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
நீலம்	"	"	*வெள்ளைத் துணி சுட்டது*	"	"

இவைகளை நன்றாய் அரைத்து எடுத்துக்கொண்டு எரிச்சலுடன் கூடிய இரணத்தின்மேல் தூவிவர எரிசிங்கி முதலிய ரணங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இதற்கு நீலக்காரமென்று பெயர்.

கருத்தகாரம்

மஞ்சள் வசம்பு சுட்டகரி
 மதிக்கும் சங்கு தலையோடு
மிஞ்சு துத்தம் மிகுவெள்ளை
 வீறாஞ் சீலைத் துணிசமனாய்ப்
பஞ்சா யிடித்துப் பொடியாக்கே
 பவுத்திரம் பிளவை ரத்தசிங்கி
அஞ்சப் படுத்து முளைநோயு
 மகற்றுங் கருத்த காரமிதே. (40)

மஞ்சள்	*பலம்*	*¼*	*வசம்பு சுட்டது*	*பலம்*	*¼*
சங்கு	”	”	*தலை யோட்டுப் பொடி*	”	”
பால் துத்தம்	”	”	*வெள்ளைப் பாஷாணம்*	”	”
வெள்ளைத்துணி	”	*ஒன்றரை*			

இவைகளை நன்றாய் அரைத்துப் பொடி செய்து எடுத்துக்கொண்டு பவுத்திரம், பிளவை, மூலமுளை, இரத்தசிங்கி இவைகளுக்கு மேலே வைத்துக்கட்ட இரணங்கள் ஆறும், முளை விழும், இதற்குக் கருத்த காரமென்று பெயர்.

வெங்காரப் பொடி

திடங்கோள் கௌரி யரிதாரஞ்
 செய்ய வீரம் வெள்ளை துத்தம்
இடங்கோள் காரம் சவுடுசுண்ண
 மினிய நீல மிருதாரம்
தடங்கேள் வெள்ளைக் குக்கிலொடு
 தணியுந் துணியுஞ் சமனாக
மடங்க இடித்துப் பொடியாக்கி
 வழியக் குட்டந் தனில்போடே. (41)

போடக் குட்டம் பதினெட்டும்
பொருந்தச் சாகும் திமிர்மேலாம்
ஆடு மரவம் எலிகடியு
மரிய தேள்நாய் பேய்நரியும்
தோடக் கல்லும் முளைசதையுந்
துடிக்குங் கட்டி கருணையுடன்
மூடுங் காளான் முளைபரங்கி
முடுகி விழுந்து போய்விடுமே. (42)

கௌரி பாஷாணம்	*பலம்*	*அரை*	*அரிதாரம்*	*பலம்*	*அரை*
வீரம்	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
பால் துத்தம்	"	"	*வெங்காரம்*	"	"
சவுட்டுப்பு	"	"	*கல் சுண்ணம்*	"	"
நீலம்	"	"	*மிருதார் சிங்கி*	"	"
குங்கிலியம்	"	"	*வெள்ளைத் துணி சுட்டது*	"	5½

இந்தத் தினுசுகளை எடுத்து நன்றாய் இடித்து அரைத்து எடுத்துக்கொண்டு குட்டம் பதினெட்டுக்கும், திமிர்களுக்கும், தேள்கடி, பாம்புக்கடி, நாய் கடித்த புண், பைத்தியம்பிடித்த நரி கடித்த புண், வெந்தபுண், சதை வளர்ந்த ரணம், குதிகாளன், முளை, பரங்கிப் புண், இவைகளுக்கு மேல் போட்டுக் கட்டிக் கொண்டுவரகூடிய சீக்கீந்கிரத்தில் இரணம் ஆறி உலர்ந்து சௌக்கியமாகும். இதற்கு வெங்காரப் பொடி என்று பெயர்.

பச்சைக் காரச்சீலை

மஞ்சள் கௌரி அரிதாரம்
மருவும் வெள்ளை மிருதாரு
மஞ்சள் வகைகட் கோரொன்றே
யடைவாம் நீலஞ் சமனாக
மிஞ்சுங் கள்ளு வார்த்தரைத்து
மெல்லிய சீலை தனிலூட்ட
அஞ்சாம் படைகள் திமிர்தோடை
யடக்கும் பச்சைச் சீலையிதே. (43)

மஞ்சள்	*பலம்*	*¼*	*கௌரி பாஷாணம்*	*பலம்*	*¼*
அரிதாரம்	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
மிருதார் சிங்கி	"	"	*நீலம்*	"	*1¼*

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தில் நன்றாய்ப் பொடி செய்து கள்வார்த்து மூன்று சாமம் அரைத்து எடுத்துக்கொண்டு மெல்லிய வெள்ளைத் துணியில் நனைத்து அல்லது நன்றாய்த் தடவி படைகள், திமிர், தொடை வாழை முதலியவற்றிற்குப் போட்டுவர உபாதிகள் நீங்கிச் சௌக்கியத்தைத் தரும்.

கருத்த காரச்சீலை

மஞ்சள் வசம்பு எருக்கிலையும்
   மதிக்கச் சுட்டுக் கரியாக்கி
அஞ்சுந் துரிசு துத்தமுடன்
   அரிய கௌரி வெள்ளைசங்கு
கஞ்ச முகத்தாள் முலைப்பாலுங்
   கையாந் தகரை யதின்சாறும்
கஞ்ச வரைத்துத் துணிதனிலே
   தடவிப் புண்ணி லிடநன்றே. (44)

நன்றே விஷத்தின் பிணிதீரும்
   நடக்குஞ் சண்டிப் புண்தீரும்
குன்றாத் திமிருந் தினவுபுண்போங்
   கொடிய சிரங்கு பொடுவதுவும்
கன்றிப் புடைக்கும் புண்தீருங்
   கடிய சொரியும் புண்களெல்லாம்
இன்றே போறோ மெனச்சொல்லும்
   மிந்தக் கருத்த சீலைக்கே. (45)

மஞ்சள் சுட்ட கரி	*பலம்*	*¼*	*வசம்பு சுட்ட கரி*	*பலம்*	*¼*
எருக்கிலை சுட்ட கரி	"	"	*மயில் துத்தம்*	"	"
பால் துத்தம்	"	"	*கௌரி பாஷாணம்*	"	"
வெள்ளைப் பாஷாணம்	"	"	*சங்கு*	"	"

இந்த எட்டுத் தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலில் ஒரு சாமம் அரைத்துப் பின் கையாந்தகச் சாற்றி லொருசாமமும் செல்லத்தக்க அளவு விட்டரைத்து எடுத்துக்கொண்டு துணியில் தடவி போட்டுவரச் சகல விஷங்களால் உண்டாகும் ரணங்கள், ஆறாப் புண்கள், தினவு எல்லாவிதமான சொரி சிரங்கு இவைகள் நீங்கி சௌக்கியம் உண்டாகும்.

மஞ்சள் காரச்சீலை

சூதங் கௌரி வீரமுடன்
சொல்லுந் தாரம் மிருதாரும்
போத வேலக் கடுக்காயும்
புகல்கற் கடக சிங்கியுடன்
பேத மில்லா வகைகழஞ்சு
பெரிதும் பெரிய அண்டமது
கோது படவே யுடைத்துவெள்ளை
கொண்டு நீள விட்டரையே. (46)

அரைத்துச் சீலை தனிலூட்டி
யடைவா யெடுத்துச் சீலைதனை
உரைத்தே ஆணி தனிமுளையி
லுடனே யறுக்கு முண்மையிது
கரைந்து முளையும் நீறாகுங்
கடிய ஆணி தான்விழுமே
மருத்து முனிவ நற்கார
வண்மை மஞ்சட் சீலையிதே. (47)

பாதரசம்	*விராகனெடை*	*1¼*	*கௌரி பாஷாணம்*	*விராகனெடை*	*1¼*
வீரம்	”	”	*அரிதாரம்*	”	”
மிருதார்சிங்கி	”	”	*கடுக்காய்த்தோல் சூரணம்*	”	”
கடுக்காய் பூச்சூரணம்	”	”			

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து நன்றாக பொடிசெய்து கோழி முட்டை வெண்கருவால் நான்கு முறை அரைத்துத் துணியில்

தடவி முளை, மார்பாணி, இராத்தக் கட்டி முதலியவைகட்குப் போட்டுவர ஆறிச் சௌக்கியம் ஆகும்.

சிவப்புக் காரச்சீலை

சூத மிலிங்க மரிதாரஞ்
சொல்லுங் கௌரி மிருதாரஞ்
சீதக் காவி மண்சமனாய்ச்
சேர்த்தே தேசிப் பழச்சாறும்
மாதர் தமது முலைப்பாலும்
வார்த்தே யரைத்துத் தானெடுத்துக்
கோதில் சீலை தனிலூட்டிக்
கொடிய ரணத்தின் மேற்போடே. (48)

போடே சண்டி நுணாப்பருவும்
புகலற் கரிய பிளவையுடன்
தோடப் புழுவால் வந்ததொரு
துடுக்கா மேழு பவுத்திரமும்
வாடக் குரோத மேசெய்யும்
வலிய சூலை கருணையெலாம்
நாடற் கிடமே யில்லையென்று
நவின்ற சிவப்புச் சீலைநன்றே. (49)

பாதரசம்	*பலம்*	¼	*லிங்கம்*	*பலம்*	¼
அரிதாரம்	"	"	*கௌரி பாஷாணம்*	"	"
மிருதார் சிங்கி	"	"	*காவிக்கல்*	"	"

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய் பொடி செய்து, பின் எலுமிச்சம்பழச் சாற்றில் இரண்டு சாம மரைத்துப் பிறகு நோயில்லாதவர்களின் முலைப்பால் விட்டு இரண்டு சாமம் அரைத்து எடுத்துக் கொள்ளவும். பின் வெள்ளைத் துணியில் தடவி, நுணாக்காய்ப்புண், கண் உள்ள பரு, ஆறாத விரணம், பிளவை, விஷக் கிருமிகளால் உண்டாகிய ஏழுவகைப் பவுத்திரங்கள், ஆனைக்கால் ரணம் முதலிய இரணத்திற்குப் போட்டுவர. சௌக்கியந் தரும்.

வெள்ளைச் சீலை

சங்கு சூதங் குங்கிலியந்
தயங்கும் வெள்ளைத் துணியோடு
பொங்குஞ் சவுடு சுண்ணாம்பு
பொலிவா முலைப்பால் விட்டரைத்துத்
தங்குஞ் சீலை தனிலூட்டே
தங்காப் பிளவை தான்புற்றம்
மங்குஞ் சண்டி ரணமறுக்கும்
வலிய வெள்ளைச் சீலையிதே. (50)

சங்கு	*பலம்*	*¼*	*பாதரசம்*	*பலம்*	*¼*
குங்கிலியம்	”	”	*வெள்ளைத்துணி*	”	”
சவுட்டுப்பு	”	”	*கற் சுண்ணாம்பு*	”	”

இந்த ஆறு தினுசுகளில் சுட்ட வெள்ளைத்துணியையும் நீற்றுப்போன கல் சுண்ணாம்பையும் நிறுத்துக்கொண்டு மற்ற சரக்குகளையுஞ் சேர்த்து நன்றாய்ப் பொடி செய்து முலைப்பாலில் இரண்டு சாமம், அரைத்து இதனைத் துணியில் தடவி, சண்டிப்புண், வாய்ப்புற்று, முதலிய ரணங்கட்குப் போட்டுவர குணந்தரும், மற்றைய இரணங்கட்கும் உபயோகித்துவர நல்ல குணத்தைக் கொடுக்கும்.

நீலச் சீலை

வெந்த தலைவன் சங்குதுத்தம்
வீர முடனே வெள்ளையொடு
முந்த தாரஞ் சவுட்டுடனே
முரக்க நீலஞ் சமனாகப்
பந்து முலைப்பால் விட்டரைத்துப்
பழைய துணியி லூட்டியிடப்
அந்தத் திமிருங் கரளைகட்டி
ஆற்றும் நீலச் சீலையிதே. (51)

தலை மண்டை ஓடு	*பலம்*	¼	*சங்கு*	*பலம்*	¼
பால் துத்தம்	"	"	*சவ்வீரம்*	"	"
வெள்ளைப் பாஷாணம்	"	"	*அரிதாரம்*	"	"
சவுட்டுப்பு	"	"	*நீலம்*	"	"

இந்த எட்டுச் சரக்குகளின் மண்டை ஒட்டை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் கால் பலம், சங்கு அரைத்து நன்றாய்ப் பொடித்த தூள் கால்பலம், மற்றவைகளையும் அளவாக நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு நன்றாய் அரைத்து முலைப் பாலால் இரண்டு சாமம் அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு, வெள்ளைத் துணியில் தடவி, திமிர், கரளை, கட்டி இரணங்கட்குப் போட்டுவர ரணங்கள் ஆறி சௌக்கியம் உண்டாகும்.

புறச் சதையைத் தின்னத் திரி

துரிசு துத்தம் வங்காளம்
  துலங்குஞ் சூத மரிதாரம்
அருக்கும் நீலங் கந்தகமு
  மடரும் பச்சை வெட்டுடனே
திரமா யிளநீர் விட்டரைத்துத்
  தியங்காச் சீலை தனிலூட்ட
அரங்கப் புரையுஞ் சதைதின்னு
  மரிய திரியை யேத்திவிடே. (52)

மயில் துத்தம்	*பலம்*	¼	*பால் துத்தம்*	*பலம்*	¼
வங்காளப் பச்சை	"	"	*பாதரசம்*	"	"
அரிதாரம்	"	"	*நீலம்*	"	"
கெந்தகம்	"	"	பச்சை வெட்டு	"	"

இந்த எட்டுச் சரக்குகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு நன்றாய் அரைத்துப் பொடிசெய்து, இளநீர்விட்டு இரண்டுசாமம் அரைத்து, வெள்ளைத்துணியில் தடவி, திரிசெய்து போடப் புரை ஓடுதல், சதை வளர்ச்சி முதலிய இரணங்களைச் சுற்றிச் சதையைக் கரைத்து இரணத்தை ஆற்றும்.

மிருதார் கஞ்ச நிமிளையுடன்
   மிளிருங் காந்த மரிதாரம்
திரமா யிலிங்க செந்தூரந்
   திருந்துங் கெந்தி சமனாக
அரமாம் வெள்ளை பலங்கூட்டி
   யரைத்துப் பொடியாய்த் தானாக்கி
உரமா யிரணத்தில் பொடிபோட
   ஓடு மெனவே உரைத்திடுமே. (53)

மிருதார் சிங்கி	*பலம்*	¼	*காகநிமிளை*	*பலம்*	¼
காந்தம்	"	"	*அரிதாரம்*	"	"
லிங்க செந்தூரம்	"	"	*கெந்தகம்*	"	"
வெள்ளைக் குங்கிலியம்	"	"			

இந்தச் சரக்குகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடி செய்து, இரண்டு சாமம் அரைத்து, எடுத்து டப்பியில் வைத்துக்கொண்டு இரணங்களின்மீது போட்டுவர சகல ரணங்களும் ஆறி உலரும்.

சிவப்புத் தண்ணீர்

ஆரா வமுதே யாரணங்கே
   யரிய திரியின் வகைகேளாய்
நேரான யிலிங்க செந்தூரம்
   நீலங்குங் கிலியங் குக்கிலுடன்
தீருங் காவி மனோசிலையுந்
   திருந்தும் வெள்ளை சமனாகப்
பீருஞ் சாராயம் விட்டரைத்துப்
   பெரிய குப்பி தனிலடையே. (54)

மேலாந் திரியை நீர் துவைத்து
   மெச்சும் புரையில் திரியூட்டி
ஆறா விரண மெரிவடங்கு
   மகண்ட பிளவை பவுத்திரமும்

வேலாம் பாடந் தோடகையும்
  வியன்கா தெழுச்சி மேல்பருவும்
காலாங் காரச் சிவப்பிடவே
  கடிய ரணங்க ளாறிடுமே. (55)

லிங்க செந்தூரம்	*பலம்*	*1*	*நீலம்*	*பலம்*	*1*
குங்கிலியம்	"	"	*குக்கில்*	"	"
காவிக்கல்	"	"	*மனோசிலை*	"	"
வெள்ளைப் பாஷாணம்	"	"			

இவைகளில் குக்கில் தவிர மற்றவைகளை நன்றாய்ப் பொடி செய்து எடுத்துக்கொண்டு குக்கிலைச் சாராயம் விட்டு நன்றாய் அரைத்து மசிந்தபின் மற்றவைகளையும் போட்டுச் சாராயத்தால் நான்கு சாமம் அரைத்து, குப்பியில் அடைத்துக்கொண்டு சீலை மண் தோய்த்து, திரிசெய்து புரையோடும் ரணங்கட்கு உள் செலுத்த ஆறாத இரணங்கள் ஆறும், எரிச்சல் தீரும், பிளவை, பௌத்திரம், காதெழுச்சி முதலியவைகள் தீரும், காதெழுச்சிக் கோதினுள் போடக்கூடாது, மேல் உபயோகிக்கத் தீரும். இதற்குச் சிவப்புக் கடுங்காரத் தண்ணீரென்று பெயர் வழங்கப்படும்.

பச்சைத் தண்ணீர்

மிருதார் துரிசு துத்தமுடன்
  மேலாங் கௌரி பரங்கியுடன்
அரிதாரம் வெள்ளை மஞ்சளுடன்
  அழுகும் நீலஞ் சமனாகப்
பெரிதாம் பச்சை வெட்டுடனே
  பேணிப் பலமுந் தானிரண்டு
அருகா முந்திரி நீர்படியும்
  அடைவா யரைத்துக் குப்பியிடே. (56)

குப்பியி லிட்ட நீர்தனையே
  கொடிய சீலை தனிலூட்டி
உப்பி வளர்ந்த பெருமுளையும்
  உதிக்குங் காளான் நுணாப்பருவும்

அப்பி சண்டி பரங்கிகுட்ட
மாகாப் பிளவை பவித்திரமும்
கப்பி பச்சைக் கடுங்காரங்
கண்டீர் தண்ணீர்க் குணமிதுவே. (57)

மிருதார்சிங்கி	*பலம்*	*¼*	*மயில் துத்தம்*	*பலம்*	*¼*
பால்துத்தம்	"	"	*பரங்கிப்பட்டை*	"	"
கௌரிபாஷாணம்	"	"	*அரிதாரம்*	"	"
வெள்ளைப் பாஷாணம்	"	"	*மஞ்சள்*	"	"
நீலம்	"	"	*பச்சைவெட்டு*	"	"

இந்தத் தினுசுகளில் பச்சை வெட்டைத் தூள் செய்து நிறுத்துக்கொள்கிறது. பரங்கிப் பட்டையை இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்கிறது. மற்றவைகளையும் நிறுத்து எடுத்துக்கொண்டு மிருதார்சிங்கி அரிதாரம் இரண்டையும் ஒரு மணிநேரம் அரைத்து, நன்றாய்த் தூள் ஆனபின் மஞ்சளை இடித்து நிறுத்த தூள் சேர்த்து மற்ற சரக்குகளையும் போட்டு, திராக்ஷைக்காடி சிறிது சிறிதாக விட்டு நான்குசாமம் அரைத்துப் பின் ஐந்து பலம் திராக்ஷைக்காடி விட்டுக் கலந்து குப்பியில் அடைத்துக்கொள்ளவும். வெள்ளைத் துணியில் மேற்படி நீரில் தோய்த்து மூலமுளை, குதிகாளன் நுணாப்பருவு, கிரந்தி, பரங்கிப்புண், குஷ்டரணம், பிளவை, பவுத்திரம் முதலிய இரணங்கட்குப் போட்டுவர இரணங்களாறும். முளைகளறும், வலி நீங்கும், இதற்குப் பச்சைக்கடுங்காரநீரென்று பெயர் வழங்கப்படும்.

மஞ்சள் தண்ணீர்

சவுடு கௌரி அரிதாரஞ்
சாற்றும் மஞ்சள் மிருதாரம்
சவுடு வெள்ளைக் கற்பூரம்
காணாக் குக்கில் குங்கிலியம்
அவிரும் முந்திரி நீர்விட்டே
யரைத்துக் குப்பி தனிலேற்றே
பெருத்த ஆணி பிளவைகட்டி
பெயர்க்கு மஞ்சள் நீரிதுவே. (58)

சவுட்டுப்பு	பலம்	¼	கௌரி பாஷாணம்	பலம்	¼
அரிதாரம்	”	”	மஞ்சள் தூள்	”	”
மிர்தார் சிங்கி	”	”	வெள்ளைப் பாஷாணம்	”	”
கற்பூரம்	”	”	குக்கில்	”	”
குங்கிலியம்	”	”			

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்தில் அரிதாரம் மிருதார் சிங்கி இவைகளை நன்றாய்த் தூள்செய்து எடுத்துக்கொண்டு குக்கிலைக் கல்வத்திட்டு முந்திரி நீர்விட்டு நன்றாய் அரைத்துப் பின் அரிதாரம் மிருதார்சிங்கி அரைத்த தூளையுஞ் சேர்த்து குக்கிலியத்தை வேறு கல்வத்தில் தூள்செய்து நிறுத்து மேல்படி மருந்துடன் சேர்த்து மற்ற சரக்குகளையும் சேர்த்து திராக்ஷைக்காடியால். நான்கு சாமம் அரைத்துப் பின் ஐந்துபலம் திராக்ஷைக் காடிவிட்டு அரைத்துக் கலந்து குப்பியில் அடைத்துக்கொள்ளவும். வெள்ளைத் துணியில் தோய்த்து, பிளவை, கட்டி, அறாதரணம், முதலியவைகள் மீது போட்டுவர ஆறி, சௌக்யம் உண்டாகும். இதற்கு மஞ்சள் தண்ணீரென்று பெயர் வழங்கப்படும்.

நீலக்காரத் தண்ணீர்

காந்தஞ் சூதம கௌரிவெள்ளை
கடிதாஞ் சீனம் பரங்கியுடன்
வாங்குஞ் சவுடு சுண்ணாம்பு
வகைக்குக் கழஞ்சு வாகுடனே
தாங்கும் நீலம் பலமொன்று
தரிப்பாய் பச்சை வெட்டுசமன்
ஏங்கும் முந்திரி முட்டைச்சா
றிதமா யரைத்துக் குப்பியிடே. (59)

இட்டே சீலை தனிலூட்டி
ஈருங் கட்டி சதைகரையும்
பட்டே முளைத்த முளைபருவும்
பத்தா சண்டி தோடகையும்

கூட்ட மிகுத்த கட்டியெலாம்
  கொல்லுங் குட்டம் பதினெட்டும்
அட்ட மிகுந்த நீலநீரி
  லடங்கா ரணத்தை ஆற்றிடுமே. (60)

காந்தம்	*விராகனெடை*	*1¼*	*பாதரசம்*	*விராகனெடை*	*1¼*
கௌரிப் பாஷாணம்	*"*	*"*	*வெள்ளைப் பாஷாணம்*	*"*	*"*
படிக்காரம்	*"*	*"*	*பரங்கிப்பட்டை*	*"*	*"*
சவுட்டுப்பு	*"*	*"*	*கற்சுண்ணம்*	*"*	*"*
நீலம்	*பலம்*	*1*	*பச்சைவெட்டு*	*"*	*2*

இவைகளில் முதலில் காந்தத்தை நிறுத்துக் கல்வத்திட்டு நன்றாய்ப் பொடியாகும் வரை அரைத்து, பரங்கிப்பட்டையை இடித்து வஸ்திரகாயஞ் செய்து நிறுத்துமுன் மருந்துடன் சேர்த்து, திராக்ஷைக் காடிவிட்டு இரண்டு சாமம் அரைத்துப்பின், முட்டை வெண்கருவில் இரண்டு சாமம் அரைத்து, குப்பியில் அடைத்துக் கொண்டு வெள்ளைத்துணியில் நனைத்து, கட்டிகள், சதை வளர்ச்சி இவைகட்குப் போட்டுவர, கட்டி உடையும் அல்லது அமுங்கும், சதை கரைந்து ரணம் ஆறும். முளைகளுக்குப்போட முளை கரையும், பருவுக்குப் போடப் பருவு கரையும், சண்டிப்புண், குஷ்டாணம் முதலிய இரணங்கட்குப் போட்டுவர ஆறி சௌக்யத்தை யளிக்கும். இதற்கு நீலக்காரநீர் என்று பேர் சொல்லப்படும்.

மூலமுளைக்குக் கடுங்கார வெள்ளை நீர்

சுட்ட தலையும் சுண்ணாம்பும்
  சுகமாம் பரங்கி வெள்ளையுடன்
அட்டம் பெரிய நவச்சாரம்
  அடங்காச் சீனம் வெங்காரம்
திட்டஞ் சங்கு நீறுடனே
  திடமாய்ச் சமந்தான் பச்சைவெட்டோ
டட்ட முந்திரி அண்டநீரில்
  அரைத்துக் குப்பி தனிலேற்றே. (61)

தங்காச் சீலை தனிலூட்டித்
  தளரா ரணத்தின் மேலிடவே
பதங்காச் சீலை பருமுளையும்
  பாரப் பிளவை பவுத்திரமும்
இதங்காச் சிண்டி கல்சதையும்
  எச்சி தொன்னை குட்டமறும்
தங்கா வெள்ளை நீர்தனிலே
  சதிராய் மூல முளைவிழுமே. (62)

கபால ஓடு	*பலம்*	¼	*கற்சுண்ணம்*	*பலம்*	¼
பரங்கிப்பட்டை	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"
நவச்சாரம்	"	"	*படிக்காரம்*	"	"
சுட்ட சங்கு	"	"	*வெங்காரம்*	"	"
பச்சைவெட்டு	"	2			

இந்தச் சரக்குகளில் மண்டை இடித்து வஸ்திர காயஞ் செய்து கால் பலம் நிறுத்துக்கொள்ளவும், பரங்கிப் பட்டையையும் அவ்விதமே செய்து கொள்ளவும், பின் மற்ற சரக்குகளையும் நிறுத்து எடுத்து எல்லாம் கல்வத்திட்டு, திராக்ஷைக் காடியில் இரண்டு சாமம் அரைத்துப் பின் கோழி முட்டை வெண்கருவிட்டு இரண்டு சாமம் அரைத்துக் குப்பியில் வைத்துக்கொண்டு மூலமுளைக்குத் துணியில் நனைத்துப் போட்டுவர முளைகரைந்து ரணம் ஆறி சௌக்யம் தரும். சதை வளர்ச்சி. ஆறாதரணம், குஷ்டரணம் முதலிய எல்லாவித ரணங்களையும் ஆற்றி, சௌக்கியத்தைக் கொடுக்கும். இதையே கடுங்கார வெள்ளையென்று சொல்லுவார்கள்.

கிரந்திகட்குப் பச்சைநீர்.

நீலங் சௌரி அரிதாரம்
  நிலைக்கு மஞ்சள் குங்கிலியம்
ஆலங் குற்றக் கள்வார்த்து
  அரைத்துக் குப்பி தனிலேற்றே
செலுத்துஞ் சோக தாகமறும்
  சேல எரிவு ரணமாறும்
வாலக் கிரந்தி மடிவாகும்
  வாகாய்ப் பச்சை நீரிதுவே. (63)

நீலம்	பலம்	¼	கௌரி	பலம்	¼
அரிதாரம்	”	”	மஞ்சள் தூள்	”	”
குங்கிலியம்	”	”			

இந்தச் சரக்குகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு, கள்விட்டு நான்கு சாமம் அரைத்துக் குப்பியிலடைத்து வைத்துக் கொண்டு கிரந்தி, கொறுக்கு முதலிய எல்லா ரணத்திற்கும் துணியில் நனைத்துப் போட்டுக்கொண்டு வர ஆறி உலரும். இதற்குப் பச்சை நீர் என்று பெயர்.

எரிரணத்திற்குச் சிவந்த குளிர்ந்த நீர்.

சூதஞ் சங்கு தலையோடு
சொல்லுங் காவி லிங்கமுடன்
ஆலந் துத்தம் கடுக்காயும்
அடருங் கள்ளு விட்டரைத்து
மேவுங் குப்பி தனிலடைத்து
விரைந்து எரிந்த ரணத்திலிடப்
பாரில் சிவர்ந்த குளிர்ந்தநீர்
பரிவாய் ரணத்தை ஆற்றிடுமே. (64)

பாதரசம்	பலம்	¼	சங்கு	பலம்	¼
தலையோடு	”	”	காவிக்கல்	”	”
இலிங்கம்	”	”	பால் துத்தம்	”	”
கடுக்காய்	”	”	துரிசு	”	”

இந்தத் தினுசுகளில் கடுக்காயை உடைத்து விரை நீக்கி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூர்ணம் பலங்கால், தலை மண்டை ஓட்டை இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் பலங்கால், மற்ற தினுசுகளையும் வகைக்கு மேற்குறிப்பிட்ட அளவுப்படி நிறுத்து எடுத்துக் கல்வத்திட்டு ஒன்றுபட அரைத்துப்பின் கள்வார்த்து மூன்று ஜாமம் அரைத்துக் குப்பியில் எடுத்துவைத்துக்கொள்ளவும் துணியில் நனைத்து எரிச்சல் உள்ள ரணத்தின் மீது போட்டுவர எரிச்சலைத் தணித்து ரணத்தை ஆற்றும். இதற்குச் சிவந்த குளிர்ந்த நீரென்று பெயர்.

எரி ரணத்திற்குக் குளிர்ந்த நீல நீர்.

சூதங் கெந்தி தலையோடு
   சொல்லுந் துரிசு குங்கிலியம்
ஆன வகைக்குக் கழஞ்சரையே
   அடங்கும் நீலஞ் சமனாகக்
காலக் கள்ளு விட்டரைத்துக்
   கடுகிக் குப்பி தனிலேற்றி
மேலா யெரிந்த ரணமாறும்
   மெச்சுங் குளிர்ந்த நீலமிதே. (65)

பாதரசம்	*விராகனெடை*	*அரையே அரைக்கால்*	*கெந்தி*	*விராகனெடை*	*அரையே அரைக்கால்*
கபாவ ஓடு	”	”	*மயில் துத்தம்*	”	”
குங்கிலியம்	”	”	*நீலம்*	*ரூபா எடை*	*1*

இவைகளில் முதலில் கல்வத்தில் ரசம், கெந்தி, துரிசு மூன்றும் சேர்த்து அரைமணிநேரம் அரைத்துப் பின் தலையோட்டை முன்போல் சூரணஞ்செய்து நிறுத்து முன் மருந்து சேர்த்து மறுபடி அரை மணி நேரம் அரைத்துப் பின் கள்விட்டு மூன்று ஜாமம் அரைத்துக் குப்பியில் வைத்துக்கொள்ளவும். துணியில் தோய்த்துப் பொறுக்க முடியாத எரிச்சல் உள்ள ரணத்தின்மீது போட்டுவர எரிச்சல் நீங்கிக்குளிர்ச்சி தந்து ரணத்தை ஆற்றும். இதற்குக் குளிர்ந்த நீல நீர் என்று பெயர்.

குளிர்ந்த வெள்ளை நீர்

சங்கு சீனம் வெங்காரம்
   சாற்றுந் துத்தம் சாம்பிராணி
வெந்த தலையும் வெண்குக்கில்
   விளைந்த கள்ளு விட்டரைத்துப்

பொங்குங் குப்பி தனிலடைத்துப்
பொரிந்து எரிந்த ரணத்திலிட
இங்குங் குளிர்ந்த வெண்ணீரை
ஏற்றி ரணத்தை யாற்றிடுமே. (66

சங்கு	விராகனெடை	2	படிக்காரம்	விராகனெடை	2
வெங்காரம்	"	"	பால் துத்தம்	"	"
சாம்பிராணி	"	"	கபாவ ஓடு	"	"
குக்கில்	"	"			

இவைகளில் சாம்பிராணியைப் பொடித்து அரைத்து வஸ்திரகாயஞ் செய்து இரண்டரை விராகனெடை நிறுத்துக் கொள்ளவும், மண்டை ஓட்டை இடித்துப் பொடியாக்கி வஸ் திரகாயஞ்செய்து இரண்டு விராகனெடை நிறுத்துக்கொள்ளவும். மற்ற தினுசுகளையும் நிறுத்துக் கல்வத்திலிட்டுக் கால் மணி நேரம் ஒன்றுபட அரைத்துப் பின் கள்விட்டு மூன்று சாமம் அரைத்துப் புட்டியில் அடக்கம் செய்யவும். துணியில் நனைத்து ரணங்கள், நெருப்புச் சுட்ட புண், எரிச்சல் உள்ள புண்கள், ஆறாத விரணம் இவைகட்குப் போட்டுவர எரிச்சலை நீக்கி ரணத்தை ஆற்றும். இதற்குக் குளிர்ந்த வெள்ளை நீரென்று கற்றுணர்ந்தோர் சொல்வார்கள்.

குளிர்ந்த மஞ்சள் தண்ணீர்.

வேரிக் கஸ்தூ ரியுமஞ்சள்
மிருதார் கடகம் நற்கடுக்காய்
சாருந் துத்த முடன்வெகுண்ட
தன்மைக கள்ளு விட்டரைத்து
ஆரக் குப்பி தனிலடைத்து
அரிவா யெரிந்த ரணத்திலிட
ஆர மஞ்சள் தண்ணியதை
யடங்கா நீரும் ரணம்போமே. (67)

கஸ்தூரிமஞ்சள்	*விராகனெடை*	*3*	*மிருதார் சிக்கி*	விராகனெடை	3
கடுக்காய்பூ	"	"	*கடுக்காய்த் தோல் சூர்ணம்*	"	"
பால் துத்தம்	"	"			

இந்த ஐந்து சரக்குகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்தில் முதலில் மிருதார்சிங்கியைப் போட்டு நன்றாய் அரைத்துப் பின் கஸ்தூரி மஞ்சளை இடித்த தூளில் விராகனிடை மூன்று சேர்த்து மற்ற சரக்குகளையும் சேர்த்துக் கால்மணிநேரம் ஒன்று பட அரைத்துப் பின் கள்விட்டு மூன்று சாமம் அரைத்துப் புட்டியில் அடைத்துக்கொள்ளவும். இதனைத் துணியில் தோய்த்து ரணங்கள், எரிச்சல் உள்ள புண்கள், இவைகள் மீது போட்டுக்கொண்டு வர, எரிச்சலைத் தணித்துப் புண்களை ஆற்றும். இதற்குக் குளிர்ந்த மஞ்சள் தண்ணீரென்று பெயர்.

எரி ரணத்திற்குக் கருத்த குளிர்ந்த நீர்

மஞ்சள் வசம்பு சுட்டகரி
மதிக்குஞ் சூதம் கெந்தகமும்
அஞ்சும் சீனம் நீலமுடன்
அடைவாங் கள்ளு தான்விட்டு
மிஞ்சி யரைத்துக் குப்பியிட்டு
மிடியா யெரிந்த ரணத்திலிடக்
கஞ்ச மிகுந்த புரைமாறுங்
கருணைக் குளிர்ந்த கருநீரே. (68)

மஞ்சள் சுட்ட கரி	*விராகனெடை*	*2*	*வசம்பு சுட்ட கரி*	*விராகனெடை*	*2*
பாதரசம்	”	”	*கெந்தகம்*	”	”
படிக்காரம்	”	”	*நீலம்*	”	”

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கள்வார்த்து நான்கு சாமம் அரைத்துக் குப்பியில் பதனஞ் செய்யவும். வெள்ளைத் துணியில் நனைத்து எரிச்சல் கடுப்பு உள்ள ரணத்தில் போட்டுக்கொண்டுவர எரிச்சலைத்தணித்து ரணத்தை ஆற்றும். குளிர்ச்சியாய் இருக்கும். இதற்குக் குளிர்ந்த கருத்தநீரென்று பெயர் வழங்கப்படும்.

சர்வ ரணத்திற்கும் சிங்கித் தைலம்

மிருதார் சிங்கி கெந்தகமும்
மிகுந்த நீலஞ் சூதமுடன்
அரியாச் சீனம் பரங்கியுடன்
ஆன கடுக்காய் துத்தமுடன்

பருக வசம்பு உள்ளியுடன்
பகரும் புங்கு உதியம்பால்
தேர எரிக்குந் தேங்காய்நெய்
திறமாய்க் கடுகு பதமறியே. (69)

அரிந்த பதத்தில் எடுத்துவைத்தே
ஆறாச் சண்டி அரிபிளவை
பரிந்த புரையும் பருகிரந்தி
பாடகை பரங்கி பலத்தோடை
எரிந்த சூலை இருவெடியின்
இயங்கு பவுத்தி ரம்பிளவை
வரிந்த சிங்கி பச்சையதின்
மதிக்குந் தைலம் இதுவாமே. (70)

மிருதார்சிங்கி	*பலம்*	¼	*கெந்தகம்*	*பலம்*	¼
நீலம்	"	"	*பாதரசம்*	"	"
படிக்காரம்	"	"	*பரங்கிப்பட்டை*	"	"
கடுக்காய்ச் சூரணம்	"	"	*பால்துத்தம்*	"	"
வசம்பு	"	"	*வெங்காயம்*	"	"

இந்த தினுசுகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்துப் புங்கம்பால் பலம் ஐந்து உதியம்பால் பலம் ஐந்து தேங்காயெண்ணெய் பலம் பத்து இம் மூன்றையும் ஒன்றாய்க் கலந்து மேற்படி தூள்களைச் சேர்த்துக் கலக்கிக் கடுகு திரளும் பதத்தில் காய்ச்சி வடித்துக்கொண்டு புட்டியில் அடைத்துக்கொள்ளவும். அரி பிளவை, புரை, கிரந்தி, தொடை வாழை முதலிய ரணங்கட்கு மேல் பூசிவா ஆறி உலகும். இதனைச் சிங்கித் தைலமென்று வழங்குவர்.

வேறு

சிங்கித் தைலம்

கஞ்ச நிமிளை காந்தமுடன்
கடிய சூதம் அரிதாரம்
மிஞ்சு மிருதார் குக்கிலுடன்
விளங்கும் பச்சை வெட்டுடனே

அஞ்சும் வசம்பு உள்ளிவெள்ளை
அடைவாம் வகைக்குக் கழஞ்சொன்று
வெஞ்சும் புங்கு உதியம்பால்
மேலா மெண்ணெய் படியொன்றே. (71)

எண்ணெய் பதத்தில் பார்தெடுத்தே
இறங்காச் சிங்கி பிளவைரண்டும்
அண்டப் புற்று அரையாப்பும்
ஆறா ரணங்கள் நீறாகும்
விண்டே பட்டா பவுத்திரமும்
விரைந்தே சூரை வெடிநாசம்
கண்டே புரைகள் முளைநாசம்
கடிதாம் சிங்கித் தைலமிதே. (72)

காகநிமிளை	*விராகனெடை*	1¼	*நிமிளை*	*விராகனெடை*	1¼
பாதரசம்	"	"	*அரிதாரம்*	"	"
மிருதார்சிங்கி	"	"	*குக்கில்*	"	"
பச்சைவெட்டு	"	"	*வசம்பு*	"	"
வெள்ளைப்பூண்டு	"	"	*வெள்ளைப் பாஷாணம்*	"	"

இந்தத் தினுசுகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு நன்றாய்ப் பொடி செய்து புங்கம்பால் கால்படி சிறிது சிறிதாகவிட்டு அரைத்துப் பின் உதியம்பால் கால்படி கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு அரைத்துக் கலந்து தேங்கா யெண்ணெய் அரைபடி விட்டுக் கடுதிரள் பதத்தில் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு பீஜப்புற்று, லிங்கப்புற்று, அரையாப்பு, ஆறாத புண்கள், பவுத்திரம், புரையோடும் ரணங்கள், வெடி சூலை இவைகட்குத் துணியில் நனைத்துப் புண்கள் மீது போட்டுவர ஆறி உலரும், புரைமாறும். இதற்குச் சிங்கித் தைலமென்று பெயர்.

வங்காளப் பச்சைத் தைலம்

கொல்லுஞ் சூதங் கெந்தகமுங்
கூறுந் தாரந் துரிசுதுத்தம்
அல்லுங் குக்கில் அபினியுடன்
அடங்காக் காசுக் கட்டியொடு

சொல்லுஞ் சீமை வங்காளஞ்
சுகமாம் மருந்து வெள்ளையுள்ளி
வெல்லும் வசம்பு மஞ்சளுடன்
வேண்டும் வகைக்குக் கழஞ்சாமே. (73)

ஆமே எள்ளி னெண்ணெய்படி
அடர்ந்த தேங்காய்ப் பால்புங்கும்
சாமே உதியம் பால்படியும்
சதைக்க எரித்த தைலமுடன்
போமே புண்ணு புரைமாறும்
பொருந்தும் புண்ணு பவுத்திரமும்
சாமே ரணங்கள் வங்காளச்
சதிருந் தைலந் தனைப்போடே. (74)

சூதம்	*விராகனெடை*	1¼	*நெல்லிக்காய் கெந்தகம்*	*விராகனெடை*	1¼
அரிதாரம்	"	"	*துரிசு*	"	"
பால் துத்தம்	"	"	*குக்கில்*	"	"
அபின்	"	"	*காசுக்கட்டி*	"	"
சீனக்காரம்	"	"	*வங்காளப் பச்சை*	"	"
வெள்ளைக் குங்கிலியம்	"	"	*வெங்காயம்*	"	"
வசம்பு	"	"	*மஞ்சள் தூள்*	"	"

இந்தச் சரக்குகளை நிறுத்தெடுத்துக் கடினமானதை முதலில் அரைத்துத் தூள் செய்துகொண்டு பின் மற்றவைகளையுஞ் சேர்த்துத் தூள் செய்து புங்கம்பால் அரைப்படி பாலில் அரைத்துக் கலந்து அத்துடன் உதியம்பால் அரைப்படி தேங்காய்ப்பால் அரைப்படி நல்லெண்ணெய் அரைப்படி எல்லாம் ஒன்றாய்க் கலந்து பழகிய மண்பாத்திரத்தில் விட்டுக் குதிரள் பதத்தில் காய்ச்சி வடித்துக்கொண்டு புரையோரணங்கள், ஆறாத ரணங்கள், பவுத்திரம், தொடை வாழை முதலிய ரணங்கட்குத் தடவிப் போட்டுவரப் புரைகள் ஆறாரணத்தை ஆற்றும். இதற்கு வங்காளப் பச்சைத் தைலமென்று அறிஞர்கள் புகலுவார்கள்.

ரணம் ஆற

பச்சை வெட்டு மரமஞ்சள்
பகர்கற் கடக சிங்கியுள்ளி
கொச்சைக் கடுக்காய் குன்றிவிரை
கூறுந் துத்தந் துரிசுடனே
அச்ச சூத மிருதாரும்
அடர்ந்த நீரும், அரிதாரம்
மெச்சு வசம்பு கொறுப்புளியும்
விதமாய்க் கழஞ்சு தானொன்றே (75)

ஒன்றே எள்ளி னெண்ணெய்படி
யுகந்த முலைப்பால் குமரிச்சா
றன்றே எரித்து ரணத்திலிட
அடங்கா எரிவு மதிநீர்போம்
சென்றே பிளவை புற்றுடனே
வேரும் பவுத்திரம் பனிச்சையறும்
நன்றே பச்சைத் தைலமிது
நலிசெய் வினைகள் தீர்ந்திடுமே. (76)

பச்சைவெட்டு	விராகனெடை	1¼	மரமஞ்சள் சூரணம்	விராகனிடை	1¼
இடித்த கடுக்காய்ப் பூ	"	"	வெங்காயச் சாறு	"	"
இடித்த கடுக்காய்ச் சூரணம்	"	"	குன்றி விரை	"	"
பால்துத்தம்	"	"	துரிசு	"	"
ரசம்	"	"	மிருதார்சிங்கி	"	"
நீலம்	"	"	அரிதாரம்	"	"
சுட்ட வசம்பு	"	"	கொறுக்காய்ப்புளி	"	"

இவைகளை எல்லாம் கல்வத்திலிட்டு முலைப்பாலில் ஒரு சாமம் அரைத்துப் கால்படி முலைப்பால் கால்படி கற்றாழை ரசம் அரைப்படி நல்லெண்ணெய் எல்லாம் ஒன்றாய்கலந்து கடுகு திரள் பதத்தில் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இத்தைலத்தை எரிச்சல் உள்ள புண்கள், பிளவை, புற்று பவுத்திரம், பனிச்சை, தண்ணீர்வடியும் நாரட்புண்கள்

முதலிய ரணங்கட்குப் போட்டு வர ரணங்கள் ஆறிச் சௌக்யத்தைக் கொடுக்கும். இதற்குப் பச்சைத் தைலமென்று பெயர்.

புரைமாறப் பச்சைத் தைலம்

தும்பை முருங்கை துளசியிலை
தொலையாப் புங்கு நுணுமுருக்கும்
அம்பை கையான் குமரிவில்வ
மடைவாய் வகைக்குப் பிடியிடித்துச்
சம்பை குக்கில் சாம்பிராணி
தனித்த சூதங் கெந்தகமும்
வம்பை துரிசு துத்தமுடன்
வருந்திக் கழஞ்சு எண்ணெயிடே. (77)

எண்ணெய் படிக்குச் சார்படியு
மிதமாய்ப் புங்கன் பாலுழக்கும்
மண்ணை நீலம் பலமொன்று
மயங்க வெரித்துப் புரையிலிடக்
கன்ன சூலை புரைமாறும்
கதித்த பிளவை தான்புற்றும்
விண்ணும் படாத பவுத்திரமும்
வுலக்கும் பச்சைத் தைலமிதே. (78)

தும்பை சாறு	*படி*	*¼*	*முருங்கை இலைச்சாறு*	*படி*	*¼*
துளசி இலைச்சாறு	”	”	*புங்க னிலைச்சாறு*	”	”
நுணா இலைச்சாறு	”	”	*கல்யாண முருங்கையிலைச்சாறு*	”	”
கரிசாலை ரசம்	”	”	*கற்றாழை ரசம்*	”	”
வில்வ இலை ரசம்	”	”	*குக்கில்*	”	”
சாம்பிராணித் தூள்	”	”	*பாதரசம்*	”	”
கெந்தகம்	”	”	*துரிசு*	”	”
பால் துத்தம்	”	”	*நீலம்*	”	”

மூலிகைச்சாறுகளை யெல்லாம் ஒன்றாய்க் கலந்து பழகிய மண் பாத்திரத்திலிட்டுக் குக்கில் முதல் நீலம் வரையுள்ள சரக்குகளைக் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் நன்றாய் பொடி செய்து மேற்படி

சாற்றில் கலந்து நல்லெண்ணெய் படி அதை புங்கம்பால் ஐந்து பலம் சேர்த்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். பின் சூலை, புரையோடி ஆறாதரணங்கள், பிளவை, புற்று, பவுத்திரம், முதலிய ரணங்கட்கு இத்தைலத்தை உபயோகித்து வர, புரை ரணங்களை ஆற்றி சௌக்யத்தை அளிக்கும். இது பச்சைத் தைலமென்று வழங்கப்படும்.

மஞ்சள் தைலம்

மஞ்சள் வசம்பு அரிதாரம்
  மதிக்குங் காரஞ் சூதமுடன்
பஞ்ச துத்தம் படிக்காரம்
  பகரும் பச்சை வெட்டுடனே
எஞ்ச மிருதார் கர்க்கடகம்
  எதிர்த்த வசம்பு உள்ளியுடன்
தஞ்சக் கல்நார் அபினியுடன்
  தனித்த கழஞ்சு தானொன்றே. (79)

ஒன்றே எண்ணெய் படியாக
  ஓங்கும் முலைப்பால் படியொன்று
நன்றா யெரித்து ரணத்திலிட
  நலங்கும் பிளவை புரைமாறும்
என்றே யிருந்த ரணமாறும்
  எதற்குந் தைல மாகிவிடும்
அன்றே மஞ்சள் தைலமிதை
  அடைவா யறிந்து ரணத்திலிடே. (80)

வசம்பு	*விராகனெடை*	*1¼*	*அரிதாரம்*	*விராகனெடை*	*1¼*
மஞ்சள்	”	”	*வெங்காரம்*	”	”
பாதரசம்	”	”	*பால் துத்தம்*	”	”
படிக்காரம்	”	”	*பச்சை வெட்டு*	”	”
மிர்தார் சிங்கி	”	”	*கடுக்காய்ப் பூ*	”	”
வெங்காயரசம்	”	”	*கல்நார்*	”	”
அபின்	”	”			

இந்த சரக்குகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடிசெய்து பழகிய மண் பாண்டத்திலிட்டு நல்லெண்ணெய் படி ஒன்று முலைப்பால் படி ஒன்று சேர்த்து தூள்களைக் கலந்து அடுப்பின்மீது வைத்துக் கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி வடித்துக்கொள்ளவும். ரணங்கள், அரிகிரந்தி, பிளவை, பவுத்திரம், புரை ஓடும் ரணங்கள், இவைகளுக்குப் போட்டுவரப், புரை ரணங்கள் ஆறி உலரும். இதை மஞ்சள் தைலமென்று விவேகிகள் கூறுவார்கள்.

குமரித் தைலம்

நொச்சி யழுஞ்சி நுணாஇலையும்
நுணுக்கு முருங்கை யவுரிசங்கு
வைச்ச கையான் தகர்துளசி
வகையாந் தும்பை மேனியிலை
அச்ச வகைக்குத் தான்பிடியாய்
அகண்ட சூதங் கெந்தகமும்
நச்சுங் கொடிவே லிவாலுளுவை
நண்ணாந் தாரந் துத்தமிதே. (81)

துத்தம் வகைக்குக் கழஞ்சாகத்
துவைத்த சாறு படியெண்ணெய்
அத்தங் குமரிச் சார்படியும்
அடைவா யெரித்து ரணத்திலிட
வற்றித்தினமு முக்கழஞ்சி
வாகாய்க் கொள்ளப் பலபண்ணும்
முற்ற வொழியுந் தானிடவே
மொழியுங் குமரித் தைலமிதே. (82)

நொச்சி இலைச்சாறு	*படி*	*அரைக்கால்*	*அழிஞ்சி இலைச்சாறு*	*படி*	*அரைக்கால்*
நுணா இலைச்சாறு	"	"	*முருங்கை இலைச்சாறு*	"	"
அவுரி இலைச்சாறு	"	"	*நற்சங்கன் இலைச்சாறு*	"	"
கரிசாலைச்சாறு	"	"	*தகரை இலைச்சாறு*	"	"
துளசி இலைச்சாறு	"	"	*தும்பை இலைச்சாறு*	"	"
குப்பை மேனிச்சாறு	"	"	*நல்லெண்ணெய்*	"	"

கற்றாழைச்சாறு	*படி*	*அரைக்கால்*	*சூதம்*		*விராகனெடை*	*1¼*
கெந்தகம்	*விராகனெடை*	*1¼*	*இடித்த சித்திரமூலவேர்*		"	"
வாலுளுவை	"	"	*அரிதாரம்*		"	"
பால் துத்தம்	"	"				

சூதமுதல் பால்துத்தம் ஈறாகவுள்ள இந்த ஆறு தினுசுகளையும் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்துச் சாறுகளை எல்லாம் நன்றாய்க்கலந்து தூள்செய்து பொடிகளையும் கலந்து பழகிய மண் பாண்டத்திலிட்டுக் கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி இறக்கிப் புட்டியில் அடக்கம் செய்யவும். எல்லாவித ரணத்திற்கும் உபயோகித்துவர ரணங்கள் ஆறும். தினம் காசெடை உள்ளுக்குச் சாப்பிட்டுவர எவ்விதமான ரணங்களும் தீரும். இதனைக் குமரித்தைலமென வழங்குவர்.

வேறுவிதத் தைலம்

சங்க துளசி நாயுருவி

சரணை கொன்றை கொடிவேலி
சாரணை - சரணை என முதல் குறுகி வந்தது.

புங்கு நுணாவு மவுரியிலை
  பொருந்துங் கையான் ஒதியிலையும்
அங்கந் துரிசுகெந் தகம்துத்த
  மடருஞ் சூதம் அரிதாரம்
மங்கை படிகை மரமஞ்சள்
  வாகாய்மருந்து எண்ணெயிதே. (83)

வீட்டி யெரிக்கும் தேங்காய்நெய்
  விதமா யரிவை முலைப்பாலும்
கூட்டி யெரித்து ரணத்திலிடக்
  கொடிய புண்ணும் பிளவையறும்
ஆட்டுஞ் சிங்கி தோடகையும்
  அடங்காப் பவுத்திர மதுபோகும்
மாட்டீர் நாழி கைரணத்தில்
  வகையாந் தைல மிதுவாமே. (84)

நற்சங்கனிலை ரசம்	*படி*	*அரைக்கால்*	*துளசி இலை ரசம்*	*படி*	*அரைக்கால்*
நாயுருவிச்சாறு	"	"	*கொன்றை இலைச்சாறு*	"	"
சித்திரமூல இலைச்சாறு	"	"	*புங்கம்பால்*	"	"
நுணா இலைச்சாறு	"	"	*அவுரியிலைச்சாறு*	"	"
கரிசாலை ரசம்	"	"	*உதியிலைச்சாறு*	"	"
துரிசு	*பலம்*	*அரைக்கால்*	*கெந்தகம்*	"	"
பால்துத்தம்	"	"	*பாதரசம்*	"	"
அரிதாரம்	"	"	*படிக்காரம்*	"	"
மரமஞ்சள்	"	"			

துரிசுமுதல் மரமஞ்சள் ஈறாகவுள்ள இந்த ஏழு தினுசு சரக்குகளையும் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடிசெய்து சாறுகளை எல்லாம் ஒன்றாய்க்கலந்து பழகிய மண்பாத்திரத்திலிட்டுத் தூள் செய்த பொடிகளைப் போட்டுக் கலக்கித் தேங்காய் எண்ணெய் படி ஒன்று, முலைப்பால் படி கால்விட்டுக் கலந்து. கடுகு திரள் பதத்தில் காய்ச்சிவடிகட்டி இறக்கிக்கொள்ளவும். ரணங்கள் பிளவை, சண்டிப்புண், சிங்கிப்புண், பவுத்திரம், ஆறாத கொடிய ரணம் முதலிய ரணங்கட்குத் துணியில் நனைத்துப்போட்டுக் கொண்டுவர ஆறி உலரும். எரிச்சலைத் தணிக்கும், புரை மாறும்.

எல்லாவகை ரணங்களுக்கும் மேற்பூச

முருங்கை யிலையும் முன்னையுந் தும்பையும்
அரிக்கையும் நீலியும் அத்தியும் வேம்புடன்
எருக்குஞ் செருப்படி பேயத்தி வேலியும்
கருத்த நொச்சியும் கையாந் தகரையே. (85)

வெளுத்த வெள்ளையும் வெண்ணாச்சி புங்குடன்
வளுத்த பூவும் வருந்தி வகையொன்று
இடித்த சார்படி யெள்ளெண்ணெய் தான்படி
படிக்க துத்தமும் பாங்குடன் கெந்தியே. (86)

ஆன சூதம் வெட்பாலை பரங்கியும்
வான சிந்தூரம் மாதவ லிங்கமும்
காண வேவடிக் கடுகு பதந்தனில்
ஏன மாயெடு நேர மறிந்தரோ. (87)

வருந்திச் சூலை வரும்வெடி போக்கிடும்
புருந்தித் தொண்டையும் போல்சதை சிங்கியும்
அரிகி ரந்தியும் ஆறாத புண்களும்
பரிப ரங்கியும் குட்டமும் பாறுமே. (88)

முறுங்கை இலைச்சாறு	*படி*	*அரைக்கால்*	*முன்னை இலைச்சாறு*	*படி*	*அரைக்கால்*
தும்பை இலைச்சாறு	"	"	*அவுரி இலைச்சாறு*	"	"
அத்திப்பால்	"	"	*வேம்பின் இலைச்சாறு*	"	"
எருக்கிலைச்சாறு	"	"	*செருப்படை இலைச்சாறு*	"	"
பேயத்திச்சாறு	"	"	*உத்தாமணிச்சாறு*	"	"
கருநொச்சி இலைச்சாறு	"	"	*கரிசாலைச்சாறு*	"	"
வெண்ணொச்சிரசம்	"	"	*புங்கம்பால்*	"	"
புங்கம்பூச்சாறு	"	"	*நல்லெண்ணெய்*	"	"
வெள்ளைப் பாஷாணம்	*விராகனெடை*	*1¼*	*படிக்காரம்*	*விராகனெடை*	*1¼*
கெந்தகம்	"	"	*பாதரசம்*	"	"
வெட்பாலை அரிசி	"	"	*பரங்கிப்பட்டை*	"	"
லிங்க சிந்தூரம்	"	"			

வெள்ளை முதல் லிங்கம் வரை உள்ள சரக்குகளை நன்றாய்த் தூள்செய்து, எண்ணெயிற் கலந்து, சாறுகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துப் பழகிய மண்பாண்டத்திலிட்டுக் கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி, வடித்துக்கொள்ளவும், வெடிசூலை, சிங்கிப் புண், அரிகிரந்தி, ஆறாதரணங்கள், பரங்கிப்புண், குஷ்டரணம் முதலிய சகலவித ரணத்திற்கும் போட்டுவர ஆறி உலரும்.

வேறு
வீக்கத்திற்குப் பத்து

அபினி கடுகு பெருங்காயம்
அதிகவாளம் கரும் போளம்
மருவும் எருக்கஞ் சார்வார்த்து
வாட்டி யரைத்து மேற்பூசக்
கருதுங் கடிகை பிளவைகட்டி
கடிய சூலை பவுத்திரமும்
அடியில் விழுந்து மடிந்தேகி
அகண்ட வழியும் பத்தாமே. (89)

அபின்	விராகனெடை	1	கடுகு	விராகனெடை	1
பெருங்காயம்	”	”	வாளப்பருப்பு	”	”
மூசாம்பரம்	”	”			

இந்த ஐந்து சரக்குகளையும் கல்வத்திலிட்டு எருக்கன் இலைச்சாறு விட்டு ஒரு மணி நேரம் அரைத்துப் பிளவை, கட்டி பவுத்திரம், வீக்கம் முதலியவைகட்கு மேற் பூசிவர வீக்கம் குறைந்து நோய் தீரும்.

வேறு விதம்

கடிதாம் அபினி பெருங்காயம்
கருஞ்சீ ரகநற் கரும்போளம்
மடிவாம் நாபி வெள்ளையுள்ளி
கொடிசேர் வேலி வகையொன்று
திடமாய்க் கள்ளிச் சர்வார்த்துத்
திறமா யரைத்து மேற்பூச
அடியாம் பிளவை பவுத்திரமும்
ஆறுங் கட்டி அரையாப்பே. (90)

மூசாம்பரம்	பலம்	1/4	கருஞ்சீரகம்	பலம்	1/4
அபின்	”	”	பெருங்காயம்	”	”
நாபி	”	”	வெள்ளைப்பூண்டு	”	”
சித்திர மூலவேர்	”	”			

இந்தச் சரக்குகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய்ப் பொடிசெய்து திருகு கள்ளிச்சாறு வார்த்து நான்கு சாமம் அரைத்து, அரையாப்பு, பிளவை பவுத்திரம், கட்டி, வீக்கம், இன்னும் பலவித வீக்கங்களுக்கும் மேலே பூசிக்கொண்டுவர வீக்கம் குறைந்து கட்டி கரைந்துவிடும்.

வேறு பத்து

சூதம் நாபி கெந்தகமும்
சுகமா யபினி பெருங்காயம்
வேதம் பெரிய போளமுடன்
விதமாய்த் திருகு கள்ளிச்சார்

ஓதுங் கட்டி பெருஞ்சூலை
ஒழியாக் கட்டி மேல் வீக்கம்
வாதப் பிளவை பவுத்திரமும்
மாய்ந்தே விழுந்து ஓடிடுமே.

பாதரசம்	*விராகனெடை*	2	*நாபி*	*விராகனெடை*
கெந்தகம்	”	”	*அபின்*	”
பெருங்காயம்	”	”	*மூசாம்பரம்*	”

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முதலில் ரசம் இரண்டையும் அரைமணிநேரம் அரைத்துப் பின் நாபியைத் தூள் செய்து நிறுத்துச் சேர்த்து மற்றவைகளையும் சேர்த்து தூள்செய்து திருகு கள்ளிச்சார்விட்டு, இரண்டு மணிநேரம் கட்டிகள், வீக்கம், பிளவை, பவுத்திரம் முதலியவைகட்கு வீக்கம் கரையும், கட்டி உடையும், பிளவை தீரும்.

வேறு பத்து

சூதம் இருவி கெந்தகமுஞ்
சுகமாய்க் காயம் வாளமுடன்
ஆதி கரிய போளமுடன்
அபினி கரிய சீரகமும்
வாதி லடைக்கும் மேதியின்பால்
வகையாய்க் கட்டி சூலையறும்
பேதி வளர்ந்த பிளவைகட்டி
விதமாஞ் சூதப் பத்தாமே.

பாதரசம்	*விராகனெடை*	2	*இருவி*	*விராகனெடை*
கெந்தகம்	”	”	*பெருங்காயம்*	”
வாளப்பருப்பு	”	”	*மூசாம்பரம்*	”
அபின்	”	”	*கருஞ்சீரகம்*	”

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு அரைமண நன்றாய்ப் பொடியாகும்படி அரைத்துப் பின் எருமைப்பாலில்

நேரம் அரைத்துப் பிளவை, கட்டி, வீக்கங்கள் முதலியவைகட்குப் பூசிவர வீக்கம் குறையும், ரணம் ஆறும், இருவி கடினமான சரக்கு ஆகையால் அதனைத் தனியாய் இடித்து வஸ்திரகாயஞ் செய்து விராகனிடை இரண்டு நிறுத்து எடுத்துக்கொண்டு பின் மற்ற சரக்குகளையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

பிளவை, கட்டி அரையாப்புக்குப் பத்து

இருவி லிங்கம் அரிதாரம்
இதமாங் குக்கில் கரும்போளம்
குருவாம் அபினி பெருங்காயம்
கொடிதா யரைக்கும் திருகுகள்ளி
அருவாம் பிளவை பவுத்திரமும்
ஆன கட்டி அரையாப்பும்
தரவாஞ் சூலை பதினெட்டும்
தாண்டி யடிக்கும் பத்தாமே. (93)

இடித்துத் தூள் செய்த இருவி	*விராகனெடை*	*3*	*லிங்கம்*	*விராகனெடை*	*3*
பொடி செய்த அரிதாரம்	"	"	*குக்கில்*	"	"
மூசாம்பரம்	"	"	*அபின்*	"	"
பெருங்காயம்	"	"			

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூளாக்கித் திருகு கள்ளிச்சார் வார்த்து இரண்டுமணிநேரம் அரைத்து, பிளவை, வீக்கங்கள், பவுத்திரங்கள், அரையாப்பு, சூலை இவைகட்குப் போட்டுவரக் கட்டி கரையும், வீக்கம் குறையும், ரணங்கள் ஆறும்.

சகல கட்டிகளுக்கும் சித்திரமூலப் பத்து

கடுக்காய் சுக்கு கரும்போளம்
கடிய நாபி பெருங்காயம்
முடுக்காம் அபினி கொடிவேலி
முந்த வாளம் எருக்கன்வேர்

பெருக்க அரைக்கும் எருக்கன்வேர்
பேசும் பிளவை கட்டியறும்
அருக்கில் மிகுந்த பலகட்டி
அருங்கொடி வேலிபட் பத்திதுவே. (94)

கடுக்காய்	*பலம்*	¼	*மேற்றோல் நீக்கிய சுக்கு*	*பலம்*	¼
மூசாம்பரம்	”	”	*நாபி*	”	”
பெருங்காயம்	”	”	*அபின்*	”	”
சித்திர மூலவேர்	”	”	*வாளப்பருப்பு*	”	”
எருக்கண்வேர்	”	”			

இவைகளை எல்லாம் பொடி செய்து எருமைப் பால்விட்டு ஒரு சாமம் அரைத்து, உபயோகிக்க வீக்கங்கள், கட்டிகள், அரையாப்பு முதலிய பலவித கட்டிகளும் தீரும். வீக்கம் நீங்கும். இதற்குக் கொடிவேலிப் பத்து என்று பெயர் வழங்கப்படும்.

வேறு பத்து

மத்த விரையுங் கொடிவேலி
மதிக்கும் வாளம் தரும்பருப்பும்
பத்தே அபினி கஞ்சாவும்
பதிவாங் கரிய போளமுடன்
இத்தை யரைக்க எருக்கஞ்சா
றிதமாய்ப் பூசும் பிளவைகட்டி
மெத்த வல்ல பலகட்டி
விதமா யெடுக்கம் பத்திதுவே. (95)

ஊமத்தங்காய்	*விராகனெடை*	2	*சித்திரமூலவேர்*	*விராகனெடை*	2
வாளப்பருப்பு	”	”	*எருக்கன் வேர்*	”	”
அபின்	”	”	*கஞ்சா*	”	”
மூசாம்பரம்	”	”			

இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கன் இலைச்சாற்றால் இரண்டுமணி நேரம் அரைத்து, பிளவை, கட்டி, அரையாப்பு முதலிய சகலவித கட்டிகட்கும் உபயோகிக்கக் கட்டி கரையும் அல்லது உடைந்து நோய் நீங்கும்.

சர்வ ரணங்கட்கும் உள்ளுக்குச் சாப்பிட எண்ணெய்

சதுரக் கள்ளி கொடிவேலி
  சார்ந்த எருக்கன் கொடிக்கள்ளி
அதிரும் அமுக்கனா வேலி
  அரிய வகைக்கு வேர்சமனாய்
சூதங் கெந்தி செந்தூரம்
  சுகள ரண்ட எண்ணெய்படி
போதயெரித்து உட்கொள்ளில்
  போகா ரணங்கள் ஓடிடுமே. (96)

சதுரக்கள்ளிவேர்	*பலம்*	¼	*சித்திரமூலவேர்*	*பலம்*	¼
எருக்கன் வேர்	"	"	*கொடிக்கள்ளிவேர்*	"	"
உத்தாமணிவேர்	"	"	*அமுக்கனாங்கிழங்கு*	"	"
பாதரசம்	"	"	*கெந்தகம்*	"	"
லிங்கசெந்தூரம்	"	"	*விளக்கெண்ணெய் படி*	"	"

கல்வத்தில் ரசம் கெந்தி செந்தூரம் மூன்றையும் நன்றாய் ஒருமணி நேரம் அரைத்துத் தூள்செய்து பின் வேர்வகைகளை உரலில் இட்டு இடித்து மண் பாண்டத்திலிட்டு ஒருபடி ஜலம் விட்டுக் கால்படியாகச் சுண்டவைத்து மேற்படி எண்ணெயில் விட்டு மேற்படி தூள்களையும் எண்ணெயிலிட்டுக் கலக்கி, கடுகு திரளும் பதத்தில் வடித்துக்கொள்ளவும். காலை வேளையில் மாத்திரம் ஒரு நெய்க்கரண்டி அளவு எடுத்துச் சாப்பிடவும். இவ்விதம் மூன்றுநாள் அல்லது ஐந்து நாள் சாப்பிட்டுவர, சகலவித ர்ணங்களும் ஆறி உலர்ந்து விடும். இச்சாபத்தியம்.

சகல விஷ வீக்கத்திற்குப் பத்து

கல்லி லெழுந்த சுண்ணாம்பு
  கனத்த முருங்கைப் பட்டையுடன்
உள்ளி வசம்பு பேய்ப்பீர்க்கு
  இலையோ டெருக்கன் பால்விட்டுக்

கொல்லுங் கொல்லாப் பேய்வாழை
குவளை வாழை யரையாப்பு
நில்லு நில்லா தெனப்போகும்
நிலைவிட் டோடும் நிச்சயமே. (97)

கற்சுண்ணாம்பு	*பலம்*	*அரை*	*முருங்கைப்பட்டை*	*பலம்*	*அரை*
வெங்காயம்	"	"	*வசம்பு*	"	"
பேய்ப்பீர்க்கு இலை	"	"			

இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கன் பால்விட்டு ஒரு மணிநேரம் அரைத்து, கட்டிகள், அரையாப்புக்கட்டி, துடை வாழை முதலியவைகட்குப் பூசிவர எல்லாவகை கட்டிகளும் அமுங்கிவிடும் அல்லது கரைந்துவிடும், வீக்கம் குறையும்.

அகஸ்தியர் ரனவைத்யம் சம்பூர்ணம்.

✿ ✿ ✿

உ

ஓம்தத்சத்

அகஸ்தியர்

சகல ரணங்கட்கும் புகை பதினாறு

எருக்கம் வேரை யெடுத்தரைத்தே
இயல்பா யிலிங்க மதில்வைத்துப்
பருக்கக் காயவைத்தெடுத்துப்
பதமாய்க் கழஞ்சி மருந்ததனை
மருக்க மாகச் சுங்கானில்
மானே புகையைத் தான்வலிக்கில்
அருக்க மான புண்புரையு
மாறுஞ் சித்தர் புகையிதுவே. (1)

எருக்கன்வேரைத் தட்டி நரம்பு நீக்கிய பட்டை அரைப்பலம் எடுத்துக்கொண்டு அதன் எடை சாதிலிங்கம் சேர்த்துத் தண்ணீர் விட்டு இரண்டு மணி நேரம் அரைத்து எடுத்துக் கொண்டு ஒன்றேகால் விராகனெடை எடுத்துச் சுங்கானில் வைத்துச் சுருட்டுப் பிடிப்பதுபோல் புகையை உள்ளுக்கு இழுக்கவும். இவ்விதம் காலை மாலை மூன்று நாள் செய்யவும். இப்புகையைப் பிடிப்பதால் சுன்னப்புற்று, ஆறாதரணங்கள் நீங்கும்.

புண், புரைகட்குப் புகை

ஆவா ரையின்வேர்க் கரிநான்கோ
டமர்ந்த இலிங்க மதுமூன்று
தேவாங் குங்கி லியமிரண்டு
திடஞ்சேர் வீர மதுஒன்று
மாவா யரைத்துச் சுங்கானில்
வைத்துப் புகையைத் தானருந்தில்
போவாச் சூலை புண்புரைகள்
போகுஞ் சித்தர் புகையிதுவே. (2)

ஆவாரைவேர் சுட்டசரி	*விராகனெடை*	*4*	*சாதிலிங்கம்*	*விராகனெடை*	*4*
வெள்ளைக் குங்கிலியம்	*"*	*2*	*வீரம்*	*"*	*1*

கல்வத்தில் இந்நான்கு தினுசுகளையும் போட்டு ஜலத்தால் ஒரு மணி நேரம் அரைத்து எடுத்துக்கொண்டு சுங்கானில் ஒரு விராகனெடை வைத்துப் புகை பிடிக்க, சூலை, புண்கள் முதலிய ரணங்கள் ஆறும்.

ஆலாத் திப்பூ ரம்நான்கோ
டார்ந்த காந்த மதுஇரண்டு
கோலப் பாஷா ணம்இரண்டு
கொடிய கௌரி யதுஒன்று
சால வேலிப் பருத்திச்சார்
சாற்றும் வீரஞ் சேர்த்தாட்டி
மூலப் படிமுன் போற்செய்து
முடித்துப் பின்பு காயவைத்தே. (3)

எடுத்த வில்லை பதமாக
விதமாய்ப் புளியஞ் சிராய்சுட்டு
வடுத்த முடைய வில்லைதனை
வளமாய் நெருப்புத் தணலதனில்
பொடித்துப் போட்டு அரைக்கணத்தில்
புகைக்க மூல பவுத்திரங்கள்
தொடுத்த புண்கள் புரையதுவும்
தொலையுஞ் சித்தர் புகையிதுவே. (4)

மூலம், பவுத்திரம், புண்களுக்குப் புகை

ஆலாத்திக் கற்பூரம்	*விராகனெடை*	*4*	*காந்தம்*	*விராகனெடை*	*2*
வெள்ளைப்பாஷாணம்	*"*	*2*	*கௌரி*	*"*	*1*
சவ்வீரம்	*"*	*1*			

இவைகளில் காந்தத்தைக் கல்வத்திட்டு நன்றாய் அரைத்துப் பொடி செய்து கொண்டு மற்றவைகளையும் போட்டு உத்தாமணிச்சாறு விட்டு

இரண்டு மணி நேரம் அரைத்து எடுத்து நிழலில் உலர்த்திக்கொண்டு ஒரு விராகனெடை மருந்து எடுத்துக் கொண்டு புளியஞ்சிராய் சுட்ட தணலில் மருந்தைப் போட்டுப் புகை பிடிக்க மூலம், பவுத்திரம் புரையோடும் ரணங்கள் முதல் எல்லாம் ஆறி உலரும்.

தாரமும் ரசமுங் கெந்தி
சமனதாய்த் தூளே செய்து
பாரமாய்ச் சீலை தன்னில்
பரப்பியே தானுருட்டி
வீரமாய் விளக்கிற் போட்டு
வேப்பெண்ணெய் தன்னை வார்த்துக்
கோரமாய்த் தீப மேற்றிக்
கொடும்புகை முகத்தி லேற்றே. (5)

ஏற்றிடிற் சன்னி தோஷம்
எழும்பிய குஷ்ட ரோகம்
பாற்றிடிற் பரங்கி சூலை
பதகரி முதலா யுள்ள
பூற்றிடும் புண்கள் யாவும்
புகைபடத் தீரு மென்றே
சாற்றினர் முழுதுந் தேர்ந்த
சாதுக்கள் காண்பாள் நீயே. (6)

சன்னி, குஷ்டம், பரங்கிச்சூலை, முதலியவைகட்குப் புகை

அரிதாரம், ரசம், கெந்தகம் இம்மூன்றும் சம எடையாய் எடுத்து முதலில் அரிதாரத்தை நன்றாய் ஒருமணி நேரம் அரைத்துப் பொடிசெய்து எடுத்துக்கொண்டு பின் ரசம் கெந்தகம் இரண்டையும் கல்வத்திட்டு நன்றாய்க் கருப்பு நிறம் வரும்வரை அரைத்து அரிதாரத்தைச் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து வெள்ளைத் துணியில் பரப்பிச் சுருட்டித் திரிபோல் செய்து வேப்பெண்ணெயில்

தோய்த்துக் கொளுத்திப் புகைபிடிக்க சன்னிகள், புண்கள், பரங்கிப்புண் முதலிய எவ்வித ரணங்களும் ஆறும்.

சாதி லிங்கம் தான்கழஞ்சு
  தானே யெருக்கம் வேர்கழஞ்சு
நீதிப் பருத்தி யிலைச்சாற்றில்
  நினைவாய்ச் சீலை நனைத்துவைத்தக்
கோதில் மருந்தைச் சீலைதனிற்
  குணமாய்ப் பொடியைத் தான்பரப்பு
வேதப்படியே ஏழு தினம்
  விதமா யருந்த விளம்புவதே. (7)

சாதிலிங்கம் விராகனெடை (1¼) எருக்கன் வேர்பட்டை. விராகனெடை (1¼), கல்வத்தில் எருக்கன் வேர்ப்பட்டை சாதி லிங்கம் இரண்டையும், ஒரு மணி நேரம் அரைத்துத் தூளக்கிக் கொள்ளவும். எருக்கன் வேரைக் காயவைத்து உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து சேர்க்கவேண்டும். பருத்தி இலையை இடித்துச் சாறு பிழிந்து அதில் ஒரு சாண் நீளம் ஒரு சாண் அகலமுள்ள வெள்ளைத் துணியை நனைத்துப் பலகையின்மீது விரித்து அதன்மேல் மேற்படி தூளைப் பரப்பிச் சுருட்டித் திரியாக்கிப் புகை பிடிக்கவும். இவ்விதம் ஏழுதினம் செய்யவேண்டும். ஏழு தினம் வரை பால்சாதம் சாப்பிடவேண்டும் புண், புரை, தீரும்.

விளக்கப் படியே யருந்தியபின்
  விதமாய்ப் புளியோ டுப்புமுதல்
குழம்பா மொன்று மாகாது
  குணமா மறுபத் தியஞ்சென்றால்
தளம்பா வெந்நீர் தான்விட்டுச்
  சற்றே பத்ய மானபின்பு
உழன்றே போகம் புண்புரைக
  ளுடனே தீர்க்கும் புகையிதுவே. (8)

புண், புரை, குஷ்டரணம், சூலை, முடக்கு இவைகட்குப் புகை

வீரங் கழஞ்சி தானொன்று
விதமாமி லிங்கந் தானொன்று
வார மிகுந்த குங்கிலியம்
வளமாங் கழஞ்சு தானதுவும்
ஈரம் பெரிய தாளகமும்
இசையுங் கழஞ்சு தானொன்று
நேரம் பெறவே சரிமனாய்
நிறுத்துப் பின்னும் நேர்சொல்லும். (9)

சொல்லும் படியே நாயுருவி
சுகமாம் அரிசி நாற்கழஞ்சி
வெல்லும் படியே கல்வத்தில்
விதமா யரைத்துப் பொடிபண்ணி
நில்லும் படியே சீலைதனில்
நினைவாய் ஏழு கிழிகட்டிப்
புல்லம் புளியஞ் சிறாய்சுட்டுப்
பொருந்தக் கிழியைத் தான்வைத்தே. (10)

தானே கண்ணாஞ் சிரட்டைவைத்துத்
தளரக் குழல்வைத் தேயருந்தில்
மானே யேழு பொழுதரந்தி
மறுபத் தியமு மானபின்பு
தேனே வெந்நீ ரதிலேதான்
திறமாய் மூன்று நாள்விடவே
கோனே தீரும் பிணிரோகம்
குணமா மின்னம் சொல்வேனே. (11)

இன்னம் அவ்வா றேகுமது
 இடர்செய் குட்டம் பதகரியும்
மினனுஞ் சூலை முடக்கமது
 மெத்திக் கட்டும் புண்புரையும்
வன்னஞ் செய்யும் வகைகரப்பான்
 முதலா யுள்ள வலிகளொடு
துன்னும் வந்த கரப்பானுந்
 தொலையு மென்றார் சித்தரரோ. (12)

தொலையு மென்றார் சித்தரரோ

வீரம்	*விராகனெடை*	1¼	*லிங்கம்*	*விராகனெடை*	1¼
குங்கிலியம்	”	”	*தானகம்*	”	”
மாயுருவி வரை	”	5			

கல்வத்தில் இட்டு ஒரு மணி நேரம் பொடியாகும் வண்ணம் அரைத்து ஒரு துணியில் ஏழு கிழிகட்டிப் புளியஞ்சிறாய் போட்டுத் தணல் உண்டாக்கி மேற்படி கிழியை அதன்மீது வைத்துக் கண்ணுள்ள அல்லது துவாரம் உள்ள தேங்காய் ஓடு மூடி மூங்கில் குழல் அத்துவாரத்தின்மீது வைத்து அப்புகையை அருந்தவும். இப்படி ஏழுதரம் செய்யவேண்டும். வெந்நீர் சாதம் அல்லது பால் சாதம் சாப்பிடவேண்டும். எட்டாம் நாள் உப்பு புளி சேர்த்துக் கொள்ளலாம்.

இதனால் தீரும் நோய்கள் – குஷ்டரணம், சூலை, கை, கால் முடக்கு, புண் புரையோடும் ரணம், வாதகரப்பான் முதலியவை.

சொன்னார் எருக்கன் கரினாலு
 சுகமாம் லிங்கம் கழஞ்சொன்று
மின்னும் படியே வீரமொன்று
 விதமாம் வெள்ளைக் குங்கிலியம்
குண்ணும் படியே கழஞ்சிரண்டு
 குணமாஞ் சூத மோர்கழஞ்சு
எண்ணும் படியே தானரைத்திங்
 கியல்பாய்ப் பின்னுஞ் சொல்வேனே. (13)

சொல்லும் பருத்தி இலைச்சாற்றில்
   சுருதிப் படியே தான்வைத்து
நல்லும் படியே நாயுருவி
   நலமாய்க் கழஞ்சு நால்வீதம்
வல்லு மேழு கிழிகட்டி
   வளமாய் முன்போற் புகையருந்தில்
சொல்லும் படியே நோய்தீருஞ்
   சுருதிப் படியே சொல்லுவதே. (14)

படியே யேழு பொழுதானாற்
   பகரும் பத்யம் புளியுப்பும்
துடியே முருங்கை இலையாகும்
   சோராம் பிஞ்சு மதுவாகும்
மடிவா யருந்திப் புகையுண்டால்
   மாறும் பிணிகள் நிச்சயமாய்க்
கெடியாய்த் தீரும், பிணிரோகம்
   கேட்கும் படியே சொல்லுவதே. (15)

ஏதே தீரும் வாதமுத
   லெழும்பு முடக்க மிவைமுதலாய்
போதே சூலைக் கட்டுடனே
   பொருந்தருளைச்சல் குத்துடனே
வாதே செய்யும் வகைசூலை
   வாத மின்னும் பலபலவாம்
மாதே தீருமென்று சித்தர்
   மகிழ்ந்தார் புகையின் முறையிதுவே. (16)

எருக்கன்வேர் சுட்டகரி	*விராகனெடை*	*4*	*லிங்கம்*	*விராகனெடை*	*1¼*
வீரம்	*”*	*1¼*	*வெள்ளைக் குங்கிலியம்*	*”*	*2 1/5*
பாதரசம்	*”*	*1¼*			

இவைகளைக் கலவத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்துத் தூளாயினபின் பருத்தி இலைச்சாரில் ஒரு வெள்ளைத் துணியை

நனைத்து உலர்த்தி நாயுருவி விரை ஐந்து விராகனிடை மேற்படி தூளுடன் கலந்து பொட்டலம் கட்டி புளியந்தணலில் போட்டு அதில் கிளியை வைத்து கொட்டாங்கச்சி வைத்து மூங்கில் குழல் வழியாய்ப் புகை அருந்தவும், இவ்விதம் ஏழு வேளை அருந்தவும், பத்தியம், புளி ஏழுநாள்வரை கூடாது.

தீரும் நோய்கள் - வாத ரோகங்கள், கைகால் முடக்கம், சூலைக்கட்டு, குத்தல் முதலிய ரோகங்கள் தீரும்.

கிரந்தி, அரையாப்பு, பவுத்திரங்கட்குப் புகை.

ஏற்றமுள்ள ஆக்ராணஞ் சொல்லக்கேளு
இதமான அரிதாரம் லிங்கம்பூரம்
பார்த்தேநீ கொடிக்கள்ளிப் பட்டைத்தூளும்
பாங்கான கழுதைலத்தி பொடியுமப்பா
போற்றேநீ வகைவகைக்குக் களஞ்கியொன்று
பொங்கமுடன் திருகுகள்ளிப் பாலாலாட்டி
சேர்த்தேநீ யுலரவைத்து எடுத்துக்கொண்டு
செயமான புங்குபுளி தன்னிற்கேளே. (17)

கேளேதான் தணலிலே பொடியைப்போட்டுக்
கெடியான புண்களிலே புகைதான் சாரச்
சூளேதான் வெடிசூலை மேகவெட்டை
சுடுகிரந்தி யரையாப்பு பௌத்திரங்கள்
வேளேதான் இப்புகையில் தீரும்பாரே
வேண்டியதோர் பொடியெடுத்து அலரிப்பாலில்
நாளேதான் மத்தித்தவ்வி ரணத்திற்போட
நாயகனே ரணங்களெல்லாம் ஆறுந்தானே. (18)

பிளவை கரந்தி முதலிய ரணங்கட்குப் புகை

அரிதாரம் விராகனெடை (1) லிங்கம் (அரை) சாதிக்காய் (அரை) பால்துத்தம் (2) மயில்துத்தம் (அரை) இவை எல்லாம் கல்வத்திட்டுப்பொடியாக்கி உத்தாமணி இலைச்சாற்றால் எட்டு

மணிநேரம் அரைத்து பின் வெண்ணோச்சி இலைச்சாற்றில் எட்டுமணிநேரம் அரைத்து பின் பாகல் இலைச்சாற்றில் எட்டுமணிநேரம் அரைத்து, ஒரு சாண் அகலம் ஒரு சாண் நீளமுள்ள வெள்ளைப் புதுத்துணியில் மருந்தைப் பூசி முப்பது திரி செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு சாண் நீளமுள்ள வெள்ளைப் புதுத்துணியில் மருந்தைப் பூசி முப்பது திரி செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு திரியைச் சுருட்டு பிடிப்பதுபோல் சுங்கானில் வைத்துப் புகைபிடிக்கவும். ஒருநாள் விட்டு ஒருநாள் வீதம் எட்டுதரம் பிடிக்கவும். கபாலசூலை, மேகரணங்கள், கன்னப்புற்று, கண்டமாலை முதலிய ரணங்கள் தீரும். நோயாளி, ரணங்கள் ஆறின பின் கண்ட ஸ்நானம் செய்யவேண்டும். பத்தியம், புளி நீக்கவேண்டும்.

மேகரணங்கள், கண்டமாலை பீனிசங்கள் தீரப் புகை

ரசகற்பூரம்	*விராகனெடை*	*1*	*ரசச்செந்தூரம்*	*விராகனெடை*	*1*
தேன்மெழுகு	*பலம்*	*¼*			

இரும்புக் கரண்டியில் மெழுகை உருக்கிக்கொண்டு பூரம், ரசச்செந்தூரம் இரண்டையும் நன்றாய்த் தூள் செய்து உருக்கிய மெழுகில் போட்டு இறக்கி வெள்ளைத் துணியில் ஊற்றி ஐந்துதிரிசெய்து வியாதியஸ்தனைக் காற்று அதிகம் இல்லாத அறையில் வைத்து ஒரு திரியைக் கொளுத்தி வைக்கவும். கண் உள்ள தேங்காய் ஓடு அல்லது கொட்டாங்கச்சியால் அந்தத் திரியை மூடித்தேங்காய் ஓட்டின் துவாரத்தின் வழியாய்ப் புகை வர வேண்டும். நோயாளியை ஒரு கம்பளிப் போர்வையால் மூடிப் புகை பிடிக்கவும். வத்தி ஆனபின் வேர்வையை யெல்லாம் துடைத்துவிட்டுக் காய்ச்சிய பசும்பால் கால்படி சாப்பிடச் சொல்லவும். மூன்றுநாள்வரை பால் சாதந்தான் சாப்பிடவேண்டும். நான்காம் நாள் நீர் முள்ளி சமூலம் ஜலத்தில் போட்டுக் காய்ச்சி ஓமம் அரைத்துத் தேய்த்துக்கொண்டு மேற்படி ஜலத்தில் ஸ்நானம் செய்யவும்.

இதனால் தீரும் நோய்கள் :- ஏழுவிதப் பீனிசரோகங்கள், பிளவை, புற்று, கண்டமாலை, கன்னப்புற்று, லிங்கப்புற்று, மார்பிளவை,

கொருக்குப்புண், அரையாப்பு, பவுத்திரங்கள், வெடிசூலை, தவளைச்சொறி முதலிய சகல ரணங்களும் தீரும்.

கவனிப்பு

இப்புகைப் பிரயோகம் வைத்தியர்களால் கையாளுவது உசிதம். ஏனெனில் சில தேகங்கட்கு வாய்கொஞ்சம் பிடிப்பு ஏற்படுகிறது, சில தேகங்கட்கு வாய் பிடிக்கிறதில்லை. நோய் வெகு விரைவில் குணம் ஆகிறது. புகைப்பிரயோகம் செய்யும்போது பல்வலி அல்லது ஈறு கொஞ்சம் தடிப்பு ஏற்படுவதா யிருந்தால், புகையை உடனே நிறுத்திவிட்டு அடியிற்கண்ட கஷாயத்தைத் தயார் செய்து கொப்பளிக்கவேண்டும்.

கஷாய விவரம்

படிக்காரம்	*பலம்*	2	*கடுக்காயத்தோல்*	*பலம்*	1
கருவேலம்பட்டை	"	¼	*காசுக்கட்டி*	"	¼
மாசிக்காய்	"	"			

இவைகளை இடித்து அரைப்படி ஜலம் விட்டு மண்பாண்டத்திட்டுக் கொதிக்கவைத்து ஒரு நாளைக்கு மூன்று, நான்கு வேளை கொப்பளிக்கவும். இவ்விதம் இரண்டு மூன்றுநாள் செய்யக் குணமாகும். பல்லுக்கு யாதொரு கெடுதலும் இல்லை.

புகைப்பிரயோகம் சம்பூர்ணம்

அக்கினிப் பிளாஸ்திரி

தேன் மெழுகு	விராகனெடை	1	விளக்கெண்ணெய்	பலம்	5
வீரம்	"	5			

தேன்மெழுகை ஒரு மண்பாண்டத்திட்டு அடுப்பில்வைத்து அது உருகியபின் வீரத்தைப்பொடிசெய்து அதிலே போட்டு, விளக்கெண்ணெய்விட்டுக் கிளறிக் கீழ் இறக்கி ஒரு பாத்திரத்தில் ஜலம்விட்டு அதில் மேற்படி மருந்தை ஊற்றிவிடவும். பின் அதனை வழித்து ஒரு டப்பியில் வைத்துக்கொள்ளவும். இதனைக் கொஞ்சம் எடுத்து ஒரு வெள்ளைதுணியில் தடவி, கொஞ்சம் நவச்சாரம் எடுத்து கைகால்குத்தல் குடைச்சல் உள்ள இடங்களில் எலுமிச்சம்பழச் சாறுவிட்டுப் பூசி அளவாய் பிளாஸ்திரியைக் கத்தரித்துப்போடவும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வலியும், குத்தலும், எரிச்சலும் உண்டாகும், உடனே பிளாஸ்திரியை எடுத்துத் துடைத்து விடவும். அல்லது அலம்பி விடவும். பிளாஸ்திரி போட்ட இடத்தில் கொப்பளிக்கும். அதனைக் கத்திரியால் கத்திரித்து விட்டால் அதனில் கோத்திருக்கும் கெட்ட நீர்கள் வெளிப்பட்டுவிடும். பின் ரணம் ஆறக் கீழ்க்கண்ட பிளாஸ்திரி போட்டுவரவும்.

* பின்வரும் பிளாஸ்திரிகளின், களிம்புகள், வைத்யர்களும் வைத்தியர்களல்லாத பொது ஜனங்கள் ஒவ்வொருவரும் கையாளக் கூடிய முறைகள்.

சகல ரணங்களையும் ஆற்றக்களிம்பு

வெள்ளைக் குங்கிலியம் பலம் (1) தேன்மெழுகு பலம் (க) மண்பாண்டத்திட்டு தேன் மெழுகை உருக்கி குங்கிலியத்தைத் தூள் செய்து போட்டுத் தேங்காய் எண்ணெய் பலம் ஐந்துவிட்டு வாயகன்ற பாத்திரத்தில் ஜலம் விட்டு அதில் ஊற்றிவிடவும். அது மேலே மிதக்கும். அதனை வழித்து டப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு எவ்வித

ரணங்கட்கும் போட்டுவர ஆறி உலரும். இதனை வெள்ளைப் புதுத்துணியில் தடவிக் கொஞ்சம் அனல்காட்டிப் போடவேண்டும்.

வேறு பிளாஸ்திரி

விளாம்பிசின் பலம் (1) கருங்குங்கிலியம் பலம் (1) சட்டியிலிட்டுக் குங்கிலியத்தை உருக்கி விளாம்பிசின்போட்டு, விளக்கெண்ணெய் பலம் ஐந்துவிட்டு வடிகட்டி, முன்போல் ஜலத்தின் மீது விட்டு வழித்து வைத்துக்கொண்டு, புண்களுக்குப் போட்டுவர ஆறி உலரும்.

வேறு

வெள்ளைக் குங்கிலியம் பலம் (5), ரசகற்பூரம் விராகன் (5) இரண்டையும் கல்வத்திலிட்டு அரைத்துக்கொண்டு, தேங்கா யெண்ணெய் விட்டு அரைத்துத் தண்ணீரில் ஏழுதரம் அலம்பி எடுத்துக் கொள்ளவும். இதனை உபயோகிக்க ரணங்கள் ஆறும்.

சிரங்கு, புண்களுக்குக் களிம்பு

கற்பூர சிலாசத்து	*விராகனெடை*	4	*வெள்ளைக் குங்கிலியம்*	*விராகனெடை*	10
வெண்ணெய்	"	14	*வெள்ளை மெழுகு*	"	4

ஆறு ஏலுமிச்சம்பழத்தைப் பிழிந்து அந்த ரசத்தில் சிலாசத்தைப்போட்டு ஒரு மண் குடுவையிலிட்டுப் பழரசம் சுண்டும்வரை சிறு தீயாய் எரித்து, தண்ணீரால் நன்றாய்க்கழுவி எடுத்து, வெள்ளைக்குங்கிலியத்தைக் கல்வத்திட்டு அரைத்து வஸ்திரகாயஞ் செய்து பத்து விராகனெடை நிறுத்து, இரண்டையும் கல்வத்திட்டு நன்றாய் அரைத்துத் தூளானபின் வெண்ணெயைப்போட்டு அரைத்துக்கொள்ளவும். பின் தேன் மெழுகை ஒரு இரும்புச் சட்டியிலிட்டு உருக்கி மீதி நாலு விராகனெடை குங்கிலியத் தூளைச் சேர்த்து மேற்படி மருந்தையும் ஒன்று சேர்த்து இரண்டு நாழிகை கல்வத்தில் அரைத்துக் கொஞ்சம் குளிர்ந்த ஜலம்விட்டு வெள்ளை நிறம் வரும் வரை அரைத்து ஜலத்தை இறுத்துவிட்டு, டப்பியில் பதனம் செய்யவும். சிரங்கு, புண், காயங்கள் முதலியவைகட்குப் பூசிவர ஆறி உலரும்.

கட்டி, சிலந்தி, ரணங்கட்குக் களிம்பு

மனோசிலை	விராகனெடை	1	மிருதார்சிங்கி	விராகனெடை	2
பசுநெய்	"	12	மஞ்சள் மெழுகு	"	6
வெள்ளைக்குங்கிலியம்	பலம்	1			

மிருதார்சிங்கி. மனோசிலை இரண்டையும் ஐந்து எலுமிச்சம்பழச் சாற்றில்போட்டுச் சாறு சுண்டும்வரை எரித்துக் கழுவி எடுத்துக்கொள்ளவும்.

மிருதார்சிங்கி, மனோசிலை இரண்டையும் வேறு வேறு தூள் செய்து நிறத்துக் கல்வத்திட்டுப் பசுநெய் ஐந்து விராகனெடை போட்டு அரைமணி நேரம் அரைத்துக்கொள்ளவும். மெழுகை உருக்கி வெள்ளைக் குங்கிலியத்தைத் தூள்செய்து வடிகட்டி நிறுத்து மெழுகில் இட்டு, மீதி பசுநெய் விராகனெடை ஏழுவிட்டு வடிகட்டி முன் மருந்துடன் சேர்த்து நான்கு நாழிகை அரைத்துப் பின் ஜலம்விட்டுக் கால்மணி நேரம் அரைத்து ஜலத்தை இறுத்துவிட்டு எடுத்து வைத்துக்கொள்ளவும். சிலந்திப் புண், கட்டிகள், வெட்டுக்காயங்கள் முதலிய எவ்வித ரணங்கட்கும் உபயோகிக்க ஆறி சௌக்கியத்தைத் தரும்.

சதைவளர்ச்சிக்குக் களிம்பு

வெள்ளைக்குங்கிலியம்	விராகனெடை	10	மஞ்சள் மெழுகு	விராகனெடை	10
ரசகற்பூரம்	"	5	பசுநெய்	"	14
மஞ்சள் தூள்	"	2	மயில்துத்தம்	"	6
வங்காளப்பச்சை	"	2			

கருப்புவெற்றிலை நாற்பது எடுத்து இடித்துச் சாறு பிழிந்து மயில் துத்தத்தைக் கரண்டியிலிட்டு மேற்படி சாறு கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுச் சுண்டியபின் கழுவி ஆறு விராகனெடை எடுத்துக்கொள்ளவும். கல்வத்தில் துரிசும் மஞ்சள் தூளும் இட்டு அரைத்து நாலு விராகனெடை பசுநெய் விட்டு அரைத்துக்கொள்ளவும். மஞ்சள் மெழுகை உருக்கி

வெள்ளைக் குங்கிலியத்தூளும் ரசகற்பூரத்தூளும் போட்டு மீதி பத்துவிராகனெடை பசு நெய் விட்டுக் கல்வத்திட்டு முன் மருந்துடன் சேர்த்து ஒருமணிநேரம் அரைக்க வேண்டும். கொஞ்சம் ஜலம் விட்டு அரைமணி நேரம் அரைத்து ஜலத்தை இறுத்துவிட்டு எடுத்துக்கொள்ளவும். புண்களில் சதைவளர்ச்சி ஏற்பட்டு ஆறாத ரணமாயின் இதை உபயோகிக்க சதை கரைந்து ரணம் ஆறும்.

கட்டிகள் உடையப் பத்து

கற்பூரம் விராகனெடை (4), சாம்பிராணி விராகனெடை (4) படிக்காரம் பலம் இரண்டு இம்மூன்றையும் நன்றாய் ஒரு மணிநேரம் அரைத்துக் கோதுமை ரொட்டித்தூள் சேர்த்துக்கலந்து துணியில்வைத்துக் கட்டியின்மேல் கட்டவும், இவ்விதம் இரண்டு மூன்று கட்டுக் கட்டக் கட்டி உடையும்.

புண்களில் உள்ள கிருமி நீங்கிச் சவ்வீரக்குடோரி

வீரம் பணவெடை (3) படிக்காரம் விரா (3) மனோசிலை விரா (4) கற்பூரம் விரா (2) எல்லாம் கல்வத்திட்டு ஒருமணி நேரம் அரைத்துப் புட்டியில் வைத்துக் கொண்டு கொஞ்சம் எடுத்துக் கிருமிகள் உள்ள ரணத்தின்மீது தூவி வெள்ளைத் துணியைப் போட்டுக் கட்டிவரவும். புழுக்கள் செத்து ரணம் ஆறும்.

துர்மாமிசம் உள்ள புண்களுக்குப் பொடி

கற்சுண்ணாம்பை (4) விராகனெடை கற்பூர சிலாசத்துக்குக் கவசம்செய்து இரண்டு வரட்டியில் புடம்வைத்து எடுத்துக் கல்வத்திட்டு ரசகற்பூரம் பணவெடை மூன்று மனோசிலை பணவெடை மூன்று, எல்லாம் ஒரு நாழிகை அரைத்துச் சதை வளர்ந்த புண்கள் மீது தூவிவர அல்லது நெய்யில் குழைத்துப் பூசிவர, சதை கரைந்து புண்கள் ஆறும்.

கட்டி உடையக் களிம்பு

முலைப்பாலில் சுருக்கிட்ட லிங்கம் விராகனெடை (4) வெள்ளைக் குங்கிலியம் பலம் (4) லிங்கத்தைக் கல்வத்திட்டு நல்லெண்ணெய்

கொஞ்சம் விட்டு அரைத்துப் பின் குங்கிலியத்தைக் கரண்டியிலிட்டு நல்லெண்ணெய் பலம் நான்குவிட்டு உருக்கி வடிகட்டி லிங்கத்துடன் சேர்த்து பிறகு மூன்று நாழிகை அரைத்துக்கொள்ளவும். ஒரு பலம் வெள்ளை மெழுகை உருக்கி இரண்டு பணவெடை கற்பூரத்தோடு சேர்த்து முன் மருந்துடன் கலந்தரைத்து வைத்துக்கொள்ளவும். குளிர்ந்த ஜலம்விட்டு ஐந்துதரம் தேய்த்து அலம்பி எடுத்துக்கொள்ளவும். இதனை எவ்விதக் கட்டிகட்டும் போட கட்டி உடையும் அல்லது அமுங்கும்.

புண்களில் உள்ள துர்மாமிசத்தை நீக்கக் களிம்பு

எலுமிச்சம்பழ ரசத்தில் சுத்திசெய்த அரிதாரம் விராகனெடை (4) இதனை எள்ளின் எண்ணெய்விட்டுக் கால் மணிநேரம் அரைத்து மிருதார்சிங்கி விராகனெடை (1) மஞ்சள் மெழுகு விராகனெடை வெள்ளைக் குகிகுலியம் பலம் (4) இம்முன்றையும் பொடிசெய்து தேங்காய் எண்ணெய் பலம் (2)ல் சேர்த்து உருக்கி வடிகட்டி முன் அரைத்துள்ள மருந்துடன் சேர்த்து ஐந்து நாழிகை அரைக்கவும். இது புண்களில் உள்ள சதை வளர்ச்சியைப்போக்கி ஆற்றும்.

முறிந்த எலும்பு கூட எண்ணெய்

பெருஞ் செருப்பாடை இலைச்சாறு	*பலம் 4*	*தேன், கொடுக்கிலைச்சாறு*	*பலம் 4*
வெண்பூவுள்ள வட்டக்கிலுப்பை இலைச்சாறு	" "	*சிறு செறுப்படை இலைச்சாறு*	" "
கறுப்பு துளசி இலைச்சாறு	" "	*ஊமத்தன் இலைச்சாறு*	" "
துளசி இலைச்சாறு	" "		

ஆல், அரசு, இச்சி, பாலை, மருதோன்றி, முருங்கை, கல்லிச்சி, மைக்கொன்றை, பொன்முருங்கை இவைகளின் அடிமரத்துப் பட்டை வகைக்குப் பலம் (5) எடுத்து இடித்து நாலுபடி ஜலம்விட்டு ஒருபடி ஜலமாகக் காய்ச்சி வடிகட்டி இறுத்து மேற்படி சாறுகளுடன் கலந்துகொள்ளவும். வஸ்திரகாயம் செய்த காசுக்கட்டி பலம் (4) களிப்பாக்கு பலம் (4) இவற்றையும் வஸ்திரகாயஞ் செய்து எடுத்துக்கொள்ளவும். பூதகரப்பன் பட்டை பலம் (4) நற்சங்கன் வேர்ப்பட்டை பலம் (4) இவை இரண்டையும் இடித்துப் படி

ஜலம்விட்டு அரைப்படியாகக் காய்ச்சி வடிகட்டி முன்சாறுகளுடன் கலந்து விளக்கெண்ணெய், இலுப்பெண்ணெய், புங்கெண்ணெய் வகைக்குப் பலம் (2) நல்லெண்ணெய் பலம் (18) வேப்பெண்ணெய் பலம் (1) எல்லாம் ஒன்றுபடச் சேர்த்துக்கடும் இரவியில் மூன்றுதினம் வைத்துநான்காவது தினம் பெரிய மண்பாண்டத்திட்டு லவங்கம் பலம் - 2 பொடி செய்து எண்ணெயிலிட்டுக் கடுகுதிரள் பதத்தில் காய்ச்சி இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். கீழ்விழுந்து அடிபட்ட ரணத்திற்கு வெள்ளைத் துணியில் நனைத்துப் போட்டுவர ஆறும். நரம்பு பிசகு, சுளுக்கு, முழிபிசகுதல் இவைகட்கு இந்த எண்ணெயில் கொஞ்சம் எடுத்துத்தடவித்தேய்த்து வெந்நீர்விட்டு உருவவும். எலும்பு ஒடிந்தாலும், காயம் ஆனாலும் இந்த எண்ணெயைத் தடவிக் கட்டவும். முழங்கால் வாதம் வந்தால் இதனைத் தடவிப் பட்டிகட்ட நீங்கிவிடும். நெருப்புசுட்ட புண் முதலியன ஆறும்.

ஆறாத ரணங்கட்குக் களிம்பு

மிருதார்சிங்கி	*பலம்*	*½*	*மஞ்சள் மெழுகு*	*பலம்*	*1*
வெள்ளைக்குங்கிலியம்	*"*	*4*	*லிங்கம்*	*விராகனிடை*	*1*
மஞ்சள் தூள்	*"*	*1*	*பசு நெய்*	*பலம்*	*4*

மெழுகை உருக்கி மற்றவைகளை எல்லாம் தூள் செய்து போட்டு நெய்விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கல்வத்திட்டு ஜலம் விட்டு அரைமணி நேரம் அரைத்து ஜலத்தை இறுத்துவிட்டுப் பதனப்படுத்தவும். இதனால் வெட்டுக் காயம் முதல் சர்வகாயங்களும் ரணமும் ஆறும்.

வாய்வுக் கட்டிக்குப் பத்து.

கஸ்தூரிமஞ்சள், கடுக்காய்த்தோல், ஈசுரவேர், கழற்சிவேர், அமுக்கனாங்கிழங்கு, மரமஞ்சள் இவற்றைச் சம எடை எடுத்து ஜலம்விட்டு நன்றாய் அரைத்துக்கரண்டியிலிட்டுக் கொதிக்கவைத்துக் கட்டிக்குப்போட அமுங்கிவிடும். கட்டி பழுத்தபின் போட்டால் உடையும்.

ஈசுரவேர் என்பது சாதாரணமாய்ப் பெருமருந்து என்றும் தராசுக்கொடி என்றும் வழங்கப்படும். இந்தச் செடி கொடியாய்ப் படரும். காய் கமண்டலம்போல் காய்க்கும். இதன் வேரைச் சர்ப்ப விஷங்கட்குக் கொடுத்து அநேகர் குணமடைந்திருக்கிறார்கள்.

புண்களுக்குச் சஞ்சீவி எண்ணெய்

மனோசிலை, கெந்தகம், பாதரசம், அரிதாரம், வெங்காரம், வெள்ளைக்குங்கிலியம், நீரடிமுத்துப்பருப்பு வேம்பாடம்பட்டை வகைக்கு விராகனிடை சா.

வேலிப்பருத்தி, தைவேளை, துளசி, கறுப்பு வெற்றிலை, கரிசாலை, குப்பைமேனி இவைகளின் இலைகளைத் தனித்தனி இடித்துப் பிழிந்த சாறு வகைக்குப்படி (¼) நல்லெண்ணெய் படி அரை இந்தச் சரக்குகளைக் கல்வத்திட்டு நன்றாய்த் தூள் செய்து, பழகிய மண்பாண்டத்திட்டு எண்ணெய் சாறுகள் எல்லாம் ஊற்றிக் கலக்கிக் கடகுதிரள் பதத்தில் காய்ச்சி வடிகட்டிப் பதனப்படுத்தவும். ஆறாத ரணங்கள், புண்கள், சொரிசிரங்கு முதலிய வைகட்குப் பூசிவர யாவரும் அதிசயிக்கும் வண்ணம் அவை ஆறி உலரும்.

சொரிசிரங்குகட்குக் களிம்பு

சுத்தியான கெந்தகம்	*பலம் 1*	*பன்றிநெய்*	*பலம்*	*4*

கல்வத்தில் கெந்தியை இட்டு நன்றாய்த் தூள் செய்து பின் பன்றிநெய் விட்டு ஒருமணி நேரம்வரை அரைத்து டப்பியில் வைத்துக்கொண்டு சிரங்கு சொரிகட்குத் தடவ ஆறி உலரும்.

சொரிசிரங்கு, கிரந்திகட்கு ரசத்தைலம்

மயில்துத்தம், நீரடிமுத்துப்பருப்பு, கெந்தகம், வகைக்கு விரா (4), பாதரசம் விரா (2), இவற்றைக் கல்வத்திட்டுத் தூளாக்கி வெற்றிலைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்து, கால்படி நல்லெண்ணெயில் கலந்து

காய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படி ரணங்கள் புண்களுக்குத் தடவி வர ஆறி உலரும்.

வெட்டுக்காயம் முதல் சகல ரணத்திற்கும் ஈயசெந்தூரப் பிளாஸ்திரி

நல்லெண்ணெய்	பலம்	8	ஈயச்செந்தூரம்	பலம்	2
வெள்ளைக் குங்கிலியம்	"	8	வெள்ளை மெழுகு	"	2
ரசகற்பூரம்	"	¼			

சட்டியில் மெழுகை இட்டு உருக்கி நல்லெண்ணெய்விட்டுச் செந்தூரத்தைப் போட்டுக் கிளறி வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடித்தப் போட்டு உருகியபின் கீழ் இறக்கி ரசகற்பூரத்தைப் பொடித்துப்போடக் களிம்பு போல் வரும். இதனைத் துணியில் தடவி, வெட்டுக்காயம் ஆறாத ரணங்கள் எல்லாவற்றிற்கும் போட்டுவர ஆறி உலரும்.

ரணங்கட்கு மெழுகு களிம்பு

தேன்மெழுகு	பலம்	7½	வெள்ளைக் குங்கிலியம்	பலம்	7½
கந்தகம்	"	2	வெங்காரம்	"	2
காசுக்கட்டி	"	2	நல்லெண்ணெய்	"	10

மெழுகு குங்கிலியம் இரண்டையும் உருக்கி நல்லெண்ணெய்விட்டுக் காய்ந்தபின் மூன்று சரக்குகளையும் தூள் செய்து போட்டுக் கிளறிக் கீழ் இறக்கி ஆறினபின் பார்க்கக் களிம்பு பதமாய் வரும். ரணங்கட்கு உபயோகிக்கச் சிவந்த நிறம் உண்டாகிச் சீக்கிரத்தில் ஆறி உலரும்.

அரையாப்பு முதல் சகல ரணங்கட்கும் துவர்ச்சீலை

கருவேல், நாவல், இலந்தை, ஒதியன், அத்தி, இவைகளின் அடி மரத்துப்பட்டை வகை ஒன்றுக்கு பலம் (2½) இவைகளை இடித்து ஒரு பானையிலிட்டு ஒரு படி ஜலம் விட்டு இரண்டு நாள் ஊற வைத்துக்

கால்படி ஜலமாய்ச் சுண்டவைத்து வடிகட்டி எடுத்துக்கொண்டு அதில் மயில்துத்தம், பால்துத்தம், காசுக்கட்டி, கடுக்காய்த் தோல், வெள்ளைக் குங்கிலியம், படிக்காரம் வகைக்கு விராகனெடை (கவ) எடுத்துக் கல்வத்திட்டு நன்றாய்த் தூளாகும் வண்ணம் அரைத்து, மேற்படி கஷாயத்தில் இட்டு ஐந்து எலுமிச்சம்பழ ரசம் விட்டு அடுப்பில் வைத்துவிடாமல் கிளறிக்கொண்டிருக்க, நீர் சுண்டிக் குழம்பு பதமாய் வரும். அப்போது புது வெள்ளைத்துணியில் நனைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு, சிறிதாய்க்கத்தரித்து ரணங்களின்மீது போட்டுவர ஆறி உலரும்.

காரச்சீலை

கால் பலம் மயில்துத்தத்தைப் பொடித்துக் கொஞ்சம் ஜலம் விட்டு அரைத்துக் கலக்கி, அதில் மெல்லிய வெள்ளைத் துணியை நனைத்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதனைத் துர்மாமிசம் உள்ள ரணங்களுக்கு உபயோகிக்கச் சதை கரைந்து ரணம் ஆறும்.

சதைவளர்ச்சிக்கு ரண சஞ்சீவித்தைலம்.

செந்நாயுருவிசமூலம் சுட்ட சாம்பல்	*பலம்*	*4*	*எள்ளுச்செடி சுட்ட சாம்பல்*	*பலம்*	*4*
ஊதுகின்ற வெள்ளைச் சங்குசுட்டது	*"*	*"*			

ஒரு மண்பாண்டத்தில் இம்மூன்று சாம்பலையுங் கொட்டி ஒருபடி ஜலம்விட்டுக் கரைத்து மூன்றுநாள் அல்லது இரண்டுநாள் வைத்திருக்கவும். ஒரு நாளைக்கு ஆறு, ஏழுதடவை குச்சியால் கலக்கி வரவேண்டும். நாலாம் நாள் தெளிவை இறுத்து வேறு மண்பாண்டத்திட்டு ஜலம் சுண்டும்வரை எரித்துக் கொஞ்சம் ஜலம் இருக்கும்போதே இறக்கி வெயிலில் வைத்துவர நீர் சுண்டி உப்பாகும். நல்லெண்ணெய் பலம் (1) மேற்படி உப்பு விராகனெடை (1) இட்டு அரைத்துச் சதை வளர்ந்த புண்கள்மீது பூசிவரச் சதை கரைந்து ரணம் ஆறும். கத்தியினால் அறுக்கவேண்டிய அவசியம் இல்லை.

குழிப்புண் எலும்பைப்பற்றிய ரணங்கட்குக் களிம்பு

வெந்த மனிதர் எலும்பு	*பலம்*	*2*	*வெள்ளைக் குங்கிலியம்*	*பலம்*	*2*
வெண்ணெய்	*"*	*3*	*இலிங்கம்*	*விராகன்*	*4*
ரசகற்பூரம்	*"*	*4*			

எலும்பு, குங்கிலியம் இரண்டையும் தனித்தனியாக பொடித்து வஸ்திரகாயம் செய்து நிறுத்துக் கல்வத்திட்டு, பூரம் சேர்த்து வெண்ணெய்போட்டு மூன்றுமணி நேரம் அரைத்து எடுத்துக்கொள்ளவும். இதனைக் குழிப்புண், ஆறாத ரணங்கள், புற்றுகள் முதலிய சகல ரணங்களுக்கும் உபயோகிக் ஆறி உலரும்.

முறிந்த எலும்புகூட லவங்காதி உண்டை

லவங்கம் பலம் (3/4) கடல் நுரை பலம் (3/4) மைலாலக்கடி பலம் (3/4) நீர்முள்ளி விதை பலம் ஒன்றின் கீழ் ஐந்து இச்சரக்குகளைத் தனித்தனி இடித்துச் சூரணம் செய்து சிறிது ஜலம்விட்டுப் பிசைந்து நீளத்தில் அடை தட்டிப் பிசகிய அல்லது ஒடிந்த எலும்பைச் சரியாய் வைத்து இந்த அடையை அதன்மீது வைத்துத் துணி சுற்றி ஜலம் விட்டுக்கொண்டிருக்கவும். ஈரம் உலரக்கூடாது. இவ்விதம் மூன்று நான்கு கட்டுக்கட்ட எலும்பு சரியாய் விடும். இதனைக் கட்டிகட்குக் கட்டிவரக் கட்டி உடையும்.

இரண நாசனித் தைலம்

யால்துத்தம், மயில்துத்தம், காட்டுச்சீரகம், கந்தகம், பாதரசம், மிருதார்சிங்கி, நீரடிமுத்துப் பருப்பு, கஸ்தூரிமஞ்சள், ஏலரிசி நாட்டுக்கற்பூரம், ரசக்கற்பூரம் கார்போகரிசி வகைக்கு விராகனெடை (1). மயில் துத்தம், ரசம் கெந்தகம் முன்றையும் அரை மணிநேரம் கல்வத்தில் அரைத்துப் பின் மற்ற சரக்குகளையும் இட்டு நன்றாய் அரைத்துத் தூளாக்கி, தேங்காய்ப் பால் இரண்டு படி எடுத்துக்கொண்டு கொஞ்சம் விட்டு அரைத்து மிகுந்த பாலில் கலக்கி மண்பாண்டத்திட்டு

கடுகு திரள் பதத்தில் காய்ச்சி வடித்துக்கொள்ளவும், கண்டமாலை, அரையாப்பு, பிளவை, பவுத்திரம், குழிப்புண் முதலிய ஆறாத ரணங்கட்கும் பூசிவர ஆறி உலரும்.

படர் தாமரைக்குத் தைலம்

தேங்காய் ஓடு வீசை ஒன்று, ஒன்றின் கீழ் ஐந்து வெண்ணாபி விராகனெடை (1) சாரம் விராகனெடை (1) நாட்டுச் சவுக்காரம் விராகனெடை (2) துரிசு விராகனெடை (1) கொட்டைப்பாக்கு விராகனெடை (2) எட்டி விதை விராகனெடை ஒன்றின் கீழ் ஐந்து காடிக்காரம் விராகனெடை ஒன்றின் கீழ ஐந்து நாய்வெண்மலம் விராகனெடை (2) தேங்காய் ஒட்டை இடித்துச் சிறு துண்டுகளாக்கி மற்றச் சரக்குகளையும் போட்டுக் குழித்தைலம் இறக்கிக்கொள்ளவும். எச்சில் தழும்பென்னும் படர் தாமரை, படை, கண்டமாலை, அரையாப்பு, கைகால் பிடிப்பு முதலியவைகட்குப் பூசிவர ஆறி உலரும்.

குறிப்பு :- குழித்தைலம் என்பது ஒரு பானையில் அடியில் ஏழு எட்டு துவாரம் செய்து இரும்புக்கம்பி சொருகி பானையினுள் சரக்குகளைப் போட்டுச் சீலை செய்து ஒருசாண் ஆழம் குழி வெட்டிப் பீங்கான் வைத்து மருந்துள்ள பானையை அதன்மீது இருக்கவைத்து மண் மூடி எருவடுக்கிப் புடம் இடத்தைலம் இறங்கும். நீர்மேல் நெருப்பு என்னும் மூலிகையை அரைத்துப் படைக்குப் பூச ஆறி உலரும். இது வயல்களில் சிறு செடியாய் உமி அளவு இலையுடையதாயிருக்கும் இதனைப் படைகட்குப் பூசி எரிச்சல் இருக்கும்.

அரையாப்புக்கட்டிக்குப் பத்து

பால் சாம்பிராணித்தூள், நாட்டுக்கற்பூரம், மூசாம்பரம், பெருங்காயம் இவைகளைச் சமனெடையாய் எடுத்து முதலில் சாம்பிராணித் தூளும் கற்பூரமும் சேர்த்து அரைக்க இளகலாய் வரும். பின் மீதி இரண்டு மருந்துகளையும் போட்டு அரைத்துத் துணியில் பூசி வைத்துக்கொண்டு, இதில் தேவையான அளவு எடுத்து அனலில் காட்டிக் கட்டியின்மீது இட்டு ஒரு மண் ஓட்டை வைத்து இறுக்கிக் கட்டிவிடவும். இரண்டு

தினம் பொறுத்துப்பார்க்கக் கட்டி கரைந்திருக்கும். மறுபடியும் முன்போல் செய்யப் பூரணமாய்க் கரைந்து சௌக்கியந்தரும். இவ்விதமே சகல கட்டிகளுங் கரையும். அல்லது அமுங்கும்.

கட்டிகள் உடையப் பத்துகள்

ஆளிவிரைத் தூளும், அரிசிமாவுங் கலந்து கரண்டியிலிட்டுக் கொஞ்சம் ஜலம்விட்டு அடுப்பில் வைத்துக் களிபோற் செய்து கட்டிமீது வைத்துக் கட்டிவரப் பழுத்து உடையும்.

வேறு

துத்தி இலையும் சாதமும் அரைத்துக் கட்டிவரக் கட்டி உடையும். குதிரைக்குளம்பு இலை, பிரமி இலை, பிரமதண்டி இலை, சிறுபசரி இலை, நாயுருவி இலை இவைகளில் ஏதேனும் ஒரு இலையை எண்ணெய்விட்டு வதக்கி அரைத்துக் கட்டிக்குக் கட்டிவரப் பழுத்து உடையும்.

அடிபட்ட காயம், வீக்கத்திற்குப் பத்து

தயிர்க்கட்டி பலம் (1) ஒரு கோழிமுட்டை மஞ்சள் வெள்ளைக்கரு, கற்சுண்ணாம்பு பலம் (¼) நாட்டுச் சவுக்காரம் பலம் (¼) இவைகளைக் கல்வத்திட்டு அரைத்துப் பூசி வரவும். ரத்தம் கட்டி இருந்தாலும் கரைந்துவிடும். வீக்கம் குறைந்துவிடும்.

நரம்புச் சிலந்திக்கு

சாதம் பாதரசம் இரண்டையும் அரைத்துக் கட்டவும். வாழைப்பழம் பெருங்காயம் இரண்டையும் மத்தித்துக் கட்ட ஆறும்.

பிளவை, பவித்திரம், அரையாப்பு, கண்டமாலை இவைகட்குப் பத்து

அவுரி இலை, மருதோன்றி அலை, குன்றுமணி, கலப்பைக்கிழங்கு, எட்டிவிதை, பெருமரத்துப் பட்டை, கெஞ்சா, வெள்ளைப்பூண்டு,

பெருங்காயம் இவைகளைச் மருந்துகளையும் போட்டு அரைத்துத் துணியில் பூசி வைத்துக்கொண்டு, இதில் தேவையான அளவு எடுத்து அனலில் காட்டிக் கட்டியின்மீது இட்டு ஒரு மண் ஓட்டை வைத்து இறுக்கிக் கட்டிவிடவும். இரண்டு தினம் பொறுத்துப்பார்க்கக் கட்டி கரைந்திருக்கும். மறுபடியும் முன்போல் செய்யப் பூரணமாய்க் கரைந்து சௌக்யுந்தரும். இவ்விதமே சகல கட்டிகளுங் கரையும். அல்லது அமுங்கும்.

வேறு பத்து

கிளிஞ்சிற் சுண்ணாம்பைக் கோழிமுட்டை வெண்கருவிட்டு அரைத்து அரையாப்புக் கட்டிக்குப் பூசிவரக் கட்டி கரையும்.

வேறு பத்து மூலிகை

நீர்மேல் நெருப்பு என்னும் மூலிகையை அரைத்து அரையாப்புக் கட்டிக்கு வைத்துக் கட்ட, கட்டி கரைந்து விடும்.

வேறு பத்து

தேன்மெழுகு, வெள்ளைப் பாஷாணம் இரண்டையும் அரைத்து அரையாப்புக்கட்டி, வாய்வுக்கட்டி இவைகட்குக் கட்டிவரக் கட்டி கரைந்துவிடும். இரண்டு மூன்று கட்டிக் கட்டவும். கட்டி கரைந்துவிட்டால் கட்ட வேண்டியதில்லை.

வேறு பத்து

சித்திரமூலவேர்ப்பட்டையும் கற்சுண்ணாம்பும் சம எடையாய் எடுத்து அரைத்துக் கட்டிக்குப் பூசிவரக் கட்டி கரையும், அல்லது உடையும். கட்டிகள் சீழ்க் கொண்டு புரை ஓடினால் கத்தியால் கீறிச் சீழை வெளிப்படுத்திவிட்டு அரையாப்புக்கு உள்ள களிம்புகள் போட்டு ஆற்றி வரவும்.

கட்டிகள் உடையப் பத்துகள்

ஆளிவிரைத் தூளும், அரிசிமாவுங் கலந்து கரண்டியிலிட்டுக் கொஞ்சம் ஜலம்விட்டு அடுப்பில் வைத்துக்களிபோற் செய்து கட்டிமீது வைத்துக் கட்டிவரப் பழுத்து உடையும்.

வேறு

துத்தி இலையும் சாதமும் அரைத்துக் கட்டிவரக் கட்டி உடையும். குதிரைக்குளம்பு இலை, பிரமி இலை, பிரமதண்டி இலை, சிறுபசரி இலை, நாயுருவி இலை இவைகளில் ஏதேனும் ஒரு இலையை எண்ணெய்விட்டு வதக்கி அரைத்துக் கட்டிக்குக் கட்டிவரப் பழுத்து உடையும்.

அடிபட்ட காயம், வீக்கத்திற்குப் பத்து

தயிர்க்கட்டி பலம் (1) ஒரு கோழிமுட்டை மஞ்சள் வெள்ளைக்கரு, கற்சுண்ணாம்பு பலம் (¼) நாட்டுச்சவுக்காரம் பலம் (¼) இவைகளைக் கல்வத்திட்டு அரைத்துப் பூசி வரவும். ரத்தம் கட்டி இருந்தாலும் கரைந்துவிடும். வீக்கம் குறைந்துவிடும்.

நரம்புச் சிலந்திக்கு

சாதம் பாதரசம் இரண்டையும் அரைத்துக் கட்டவும். வாழைப்பழம் பெருங்காயம் இரண்டையும் மத்தித்துக் கட்ட ஆறும்.

பிளவை, பவுத்திரம், அரையாப்பு, கண்டமாலை இவைகட்குப் பத்து

அவுரி இலை, மருதோன்றி இலை, குன்றுமணி, கலப்பைக்கிழங்கு, எட்டிவிதை, பெருமரத்துப் பட்டை, கெஞ்சா, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் இவைகளைச் சம எடை எடுத்து ஜலம்விட்டு அரைத்துச் சூடு செய்து பத்திட மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

புண்களைக் கழுவ நீர்கள்

உதியம்பட்டைக்கஷாயம், கருவேலம்பட்டைக்கஷாயம், படிக்கார ஜலம், புளியனிலையைப் பழங்காடியில் இட்டு வேகவைத்து இலையை நீங்கிய நீர் இவைகளில் ஏதேனும் ஒன்றில் இளஞ்சூடாய் இருக்கக் கழுவவும்.

அம்மை வடிவு மாற

மான்தோல் பலம் (1) இதனைச் சுட்டுக் கரிசெய்து தேனில் காலை மாலை மூன்றுநாள் சாப்பிட்டு வர அம்மையின் வேகந் தணியும், கஸ்தூரிமஞ்சள், கஸகஸா, வேப்பங்கொழுந்து இம்மூன்றையும் ஜலம்விட்டு அரைத்து உடம்பெங்கும் பூசி ஸ்நானஞ் செய்துவர அம்மையால் ஏற்பட்ட வடிவு மாறும்.

கண்டமாலைக்குக் களிம்பு

மனோசிலை, வெள்ளைப்பாஷாணம், ஈயச்செந்தூரம், வெந்தோன்றிக் கிழங்கு, பாதரசம், தாளகம், கெந்தகம் மிருதார்சிங்கி, மயில்துத்தம், பால்துத்தம், வகைக்கு விராகனெடை (1) எடுத்துக் கல்வத்திட்டு மனோசிலை நீங்கலாக மற்றச் சரக்குகளைப் பொடிசெய்து, வெற்றிலைச்சாற்றால் அரைத்துப் பின் மனோசிலை சேர்த்து அரைத்து உலர்த்தி அரைக்காற்படி வேப்பெண்ணெயில், வட்டக்கிலுகிலுப்பை, பெருந்தும்பை, எட்டி இவைகளின் வேர்பட்டை வகைக்குப்பலம் (½) இதனைச் சலம்விட்டு அரைத்து எண்ணெயிற் கலந்து காய்ச்சி வடித்துக் கொண்டு மேற்படி மருந்தில் விட்டு அரைத்துக் களிம்பு செய்து கொள்ளவும். கண்டமாலை பவுத்திரம் அரையாப்பு முதலிய ரணங்கட்கு உபயோகிக்க ஆறி உலரும்.

ஆக்கிப்புண்களுக்குச் சிகிச்சை

இதற்குச் சிறுபசரை என்னும் மூலிகையை அரைத்துப் பூசிவரவும். அல்லது காவியால் ஏதாவது ஒருருவம் எழுதினாலும் சரி மேல் பூசினாலுஞ் சரி அக்கியின்ரணம் குணமாகும். அதன்மேல்

காற்றுப்படாமல் எரிச்சல் இல்லாததைப் பூசுவதே அதின் சிகிச்சை. அல்லது நாமக்கட்டியை இழைந்துப் பூசலாம். இவ்விதம் நோய் குணமாகும் வரை 4,5 – தினம் செய்தாற் போதும். குங்கிலியக் களிம்பு பூசலாம். இந்த நோய் கண்டவுடன் பேதிக்குக் கொடுத்து மேற்பிரயோகஞ் செய்ய, நோய் விரைவில் குணமாகம்.

சோரி சிரங்கட்குச் சுலபமானதும் விரைவில் குணந்தரக்கூடியதுமான எண்ணெய்

தேங்காயெண்ணெய்	*பலம்* 5	*நாட்டுக் கற்பூரம்*	*பலம்*	½
பேன்கொட்டை	*பலம்* 1			

கொட்டையை ஒன்றிரண்டாய் உடைத்து ஒரு மண் பாத்திரத்திற் போட்டுக் காய்ச்சி சிவந்த பதம் வந்த பின் எண்ணெயை இறுத்துக் கொட்டையை எடுத்து அம்மியில் வைத்து நன்றாய் அரைத்து மேற்படி எண்ணெயிற்கலந்து மறுபடி காய்ச்சி இறக்குஞ் சமயத்தில் கற்பூரத்தைத் தூள்செய்து போட்டு வைத்துக்கொண்டு சொரி சிரங்கு, நமட்டுச்சிரங்கு முதலியவைகட்குப் பூசி இரண்டுமணிநேரம் ஊறியபின் சீயக்காய் தேய்த்துக் குளிக்கவும். இவ்விதம் தினம் செய்தால் சொரிசிரங்கு இடந்தெரியாமல் மறைந்துவிடும், வெட்டுக்காயம், ஆறாத ரணம் இவைகட்குப் பூசிவர ஆறும்.

முளை மூலத்திற்குக் கட்டு

கோவை இலையை வதக்கிக் கம்புசாதஞ்செய்து தண்ணீரில் போட்டு மறுநாள் எடுத்து இலையுஞ் சோறுஞ் சேர்த்துக் கட்ட முளைவிபம்.

விப்புருதிக்குப் பத்து

வீக்கம் ஏற்பட்டவுடன் அன்னபேதியும் ஊமத்தன் இலையும் சம எடையாய் எடுத்து அரைத்து இளகலாய் வைத்துக் கட்டியின்மேற் கட்டவும். இவ்விதம் இரண்டு மூன்று கட்டுக்கட்ட வீக்கம் கரைந்துவிடும்.

வீக்கங்குறையாமல் கட்டி பெரிதாகிப் பழுக்க ஆரம்பித்தால், குளிர்ந்து சுரங்காணும், அப்போது அன்னபேதியை ஜலம்விட்டு அரைத்துக் கொதிக்கவைத்துக் கட்டியின்மேல் கனக்கப் பூசவும், அதன்மேல் முன் கட்டிய கட்டுக்கட்டவும் இப்படிச் செய்தால் கட்டி வேதனையின்றி இரண்டு மூன்று கட்டில் பழுத்த உடையத்தக்க பருவமடையும். பின் கட்டியைக் கிழித்துச் சீழை வெளிப்படுத்திவிட்டு ஒதியம்பட்டை நீரில் அலம்பிக் குங்கிலியம் களிப்பு போட்டுவர ஆறி உலரும்.

நெருப்புச்சுட்ட புண்ணுக்குக் களிம்பு

மிருதார்சிங்கி	*ரூபா எடை*	*1*	*வெள்ளைக்குங்கிலியம்*	*ரூபா எடை*	*1*
இரசகற்பூரம்	*"*	*1*	*பூங்காவி*	*"*	*1*
ஆலாத்திக் கற்பூரம்	*"*	*1¼*	*பச்சைக் கற்பூரம்*	*"*	*அரைக்கால்*

மிருதார்சிங்கி முதல் பச்சைக் கற்பூரம்வரை உள்ள சரக்குகளைக் கல்வத்திட்டு நன்றாய்த் தூள்செய்து ஐந்து பலம் வெண்ணெய்போட்டு அரைத்துக் குளிர்ந்த ஜலத்தில் ஏழுதரம் அலம்பி நீரை வடித்துவிட்டுப் பதனப்படுத்தவும், தீச்சுட்ட புண், புற்றுகள், சிரங்கு முதலிய சகல புண்களுக்கும் இதனைத்தடவிவர தழும்பில்லாமல் ஆறும்.

ரணசிகிச்சை செய்வோர் கவனிக்கவேண்டிய முக்கிய விதிகள்

1. காலை மாலை இரு வேளையும் ரணங்களை இளஞ்சூடுள்ள ஜலத்தில் நாட்டுச் சவுக்காரத்தினாற் கழுவவும்.

படிக்கார ஜலத்தினாற் கழுவவும்.

உதியம்பட்டைக் கஷாயஞ்செய்து வடிகட்டி இளஞ்சூடுள்ள கஷாயத்திற் கழுவவும். இதில் ரணங்களை அலம்பினாற் சீழ்மாறி ரணம் சீக்கிரம் ஆறும்.

எவ்வளவுக்குச் சுத்தமாய் ரணங்களைக் கழுவுகின்றோமோ அவ்வளவுக்குப் புண்கள் சீக்கிரம் ஆறும்.

அதற்குக் கட்டுந் துணியும் வெள்ளையாய்ச் சுத்தமாய் இருக்க வேண்டும்.

ஆறாத புண்களுக்கு வேப்பிலை போட்டுக் காய்ச்சின ஜலத்தில் அலம்பி அதற்குத் தக்க களிம்பு போட்டுவரச் சீக்கிரம் ஆறும்.

புரை ஓடினால் புங்கம்பாலை ரணத்திலிட்டு நாணற் குழாயால் ஊதவும். இவ்விதம் 4 - நாள் வரை ஊதிவரப் புரை மாறும்.

கோடைக்கட்டி, அல்லது பரு வீக்கம் முதலியன நீங்க லிங்கப் பிளாஸ்திரி

நாட்டுக் கற்பூரம் பலம் (¼) பளிங்குச் சாம்பிராணி பலம் (¼) லிங்கம் பலம் அரைக்கால் கல்வத்திற் சாம்பிராணியை அரைத்து வடிகட்டிக் காற்பாலம் எடுத்துக் கொண்டு அத்துடன் கற்பூரத்தைச் சேர்த்து அரைக்க இளகலாய் வரும். அப்போது லிங்கத்தைச் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும்.

கோடைக்கட்டி, வீக்கம், வாய்வுக்கட்டி முதலியவைகட்கு மேற்படி பிளாஸ்திரியில் கொஞ்சம் எடுத்து அனல்காட்டிக் கட்டிக்கு அளவாய்த் துணியைக் கத்தரித்து அதில் தடவிப்போடவும். இவ்விதம் இரண்டு மூன்று தரம் செய்யக் கட்டி உடைந்துவிடும். அல்லது கரைந்துவிடும். உடைந்துவிட்டால் ரணம் ஆறக்கூறிய குங்கிலியக் களிம்பு போட்டுவர ரணம் ஆறி உலரும்.

நெருப்புச்சுட்ட புண்ணுக்குக் களிம்பு

கற்சுண்ணாம்புத் தேளி நீரும் தேங்காயெண்ணெயும் சம எடை எடுத்துக் குலுக்கித் துணியில் நனைத்துப் போட்டுவர ஆறும்.

வேறு

வெள்ளைக் குங்கிலியம் பலம் (1) கற்சுண்ணாம்பு சண்டைக்காய் அளவு எடுத்து, குங்கிலியத்தை நன்றாய்த் தூள்செய்து மேற்படி சுண்ணத்தைச் சேர்த்துச் தேங்காயெண்ணெய் விட்டு ஒரு மணி நேரம்

அரைத்துப் பின் குளிர்ந்த ஜலம்விட்டு அரைமணி நேரம் அரைக்க வெண்ணெய்போலாகும். மீண்டும் அரைத்துத் தண்ணீரை இறுத்துவிட்டுக் கல்வத்தைச் சாய்த்து வைக்கவும். இதனை மெல்லிய வெள்ளைத் துணியில் தடவித் தீச்சுட்ட ரணத்தில் ஒரு நாளைக்கு இரண்டுதரம் போட்டு வரவும். இவ்விதம் இரண்டுமூன்று தினம் போட்டுவர ஆறி உலரும்.

குழிப்புண், மோச்சொரி, செவ்வாப்புக் கட்டிக்குக் களிம்பு

தென் மெழுகு பலம் (அரை) பழைய பருத்திப் பஞ்சை ஒட்டிலிட்டு வறுத்த சாம்பல் பலம் (1) வசும்பு சுட்டுச் சாம்பலாக்கினது பலம் (½) மயில் துத்தம் பலம் (¼) இதனை வறுத்துச் சேர்க்கவும். நெய் பலம் (1) ஒரு பாத்திரத்தில் மெழுகை உருக்கி நெய்விட்டுப் பஞ்சுச் சாம்பலைப் போட்டுக் குச்சியினால் கிளறி பின் வசம்புச் சாம்பல், துரிசு இரண்டையும் சேர்த்துக் கிளறி ஆரவைத்துப் பதனப்படுத்தவும், வெள்ளைப் புதுத்துணியில் இந்தக் களிம்பைப்பூசி, கோடைக்கட்டி, செவ்வாப்புக்கட்டி. குழிப்புண், அழிப்புண் முதலிய ரணங்கட்கும், கட்டிகட்கும் போட்டுவர ஆறி உலரும்.

நமட்டுச் சிரங்குக்குப் பூச்சு

கார்போகரிசி, நீரடிமுத்துப் பருப்பு, கொப்பரைத் தேங்காய், கசகசா, கெந்தம் இவைகளைச் சம எடையாய் எடுத்துக் குப்பைமேனி இலைச்சாற்றில் அரைத்துப் புளித்த தயிரிற் கலந்து, சொரிசிரங்கு, நமட்டுச்சிரங்கு இவைகட்குப் பூசி இரண்டு மணி நேரம் ஊறியபின் இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துத் தேய்த்து இள வெந்நீரில் குளிக்கவும். இவ்வீதம் இரண்டு மூன்று தினம் செய்யச் சகல சிரங்கும் ஆறி உதிரும்.

ரணசிகிச்சை சம்பூர்ணம்.

கால் கடுவன்

இது குழந்தைகட்கு பாதத்திற்குமேல் முழங்காலின்கீழ் காணும் நோய் சிரங்குகள்போல் கண்டு நீர்வடியும். ஆறுவது கஷ்டம். இந்த நீர்பட்ட இடமெல்லாம் புண்ணாகும். சில சமயங்களில் சிரசில் வருவதும் உண்டு.

இதற்குக் கீழ்கண்டவாறு செய்தால் ஆச்சரியப்படும்படி குணமாகிறது.

விபரம்

குப்பைமேனி இலை	*ஒருபடி*	*பாதரசம்*	*விராகனெடை*	*1*
நல்லெண்ணெய்	*2½*	*பலம்*		

செய்முறை

குப்பைமேனி குச்சி இல்லாமல் இலையை மாத்திரம் எடுத்து அம்மியில் வைத்து அரைத்து இலை மசியும் சமயம் பாதரசத்தையும் சேர்த்து அரைத்து நல்லெண்ணெயில் கலக்கி வெயிலில் ஒருநாள் வைத்து மறுநாள் சிரங்கு அதாவது கடுவனுக்குபூசி விடவும். காலையில் பூசிமாலையில் சீக்காய் போட்டு தேய்த்து இள வெண்ணீரில் கழுவிவிடவும். இவ்விதம் மூன்ற நாள் செய்தால் மேற்கடி கடுவன் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். சிரசில் கடுவன் வந்துவிட்டால் மயிரைக் கத்தரித்துவிட்டு பூசிவரவும். இவ்விதம் செய்துவந்தால் பூரணமாய் சௌக்யம் ஆகிவிடும்.

இரணபேத இலக்ஷணம்

இரணம், இரண்டு வகையினதாய் வகுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று வாதபித்த சிலேஷ்மம், தொந்தம் திரிதோஷம் - இவற்றால் உண்டாவது. மற்றொன்று உடலிலேற்படும் காயங்களாலாவது, இவ்விரண்டினுள் முன்னையது நிசவிரணம் என்றும் பின்னையது ஆகந்துக இரணம் சத்தியோ விரணம் என்றும் பெயர் பெறும். இவற்றைத் துஷ்ட விரணம், அதுஷ்ட விரணம் எனப்பிரித்திருக்கின்றனர்.

துஷ்ட விரண லக்ஷணம் - என்றைக்கும் ஆறாமலிருப்பது.

அதுஷ்ட விரண லக்ஷணம் - சீழும் ரத்தமும், ஊனீரும் பொருந்தியதாயிருக்கும். ஆயினும் விரைவில் சிகிச்சையினால் ஆறும்.

துஷ்ட விரணம் - அவை வாத பித்த சிலேஷ்மங்களினாலும் கரு ரத்தத்தினாலும் இரத்த வாதம் முதலியவைகளினாலும் ஏற்படுவன. இந்த இரணங்கள் சில வேளையில் வாயை முடிக்கொள்ளும், திறந்துகொள்ளும். கெட்டியாயும் மிருதுவாயும் உலர்ந்தும் உலராமலுமிருக்கும். எரிச்சலையும், குளிர்ச்சியையுந் தரும். சில சமயம் துர்க்நந்தமான சீழ் வடிந்தவாறிருக்கும். சிவந்தும் கறுத்தும் வெளுத்தும் காட்டும். சில சமயம் வேர்வைவிடும். நமைச்சல், வலி, வீக்கம் முதலியவை சில சமையங்களிலுண்டாகும். எளிதிலாறாது. நெடுநாட் சென்றபிறகே ஆறும்.

1. ***துஷ்டவாத விரணம்*** :- இது பார்வைக்குக் கறுப்பாயும் சிவப்பாயுமிருக்கும், கறுப்பும் வெண்மையுங் கலந்திருக்கும், எலும்பு தெரியக்கூடிய நிலையிலிருக்கும், சாம்பல் நிறமாயுமிருக்கும். இதில் கொஞ்சங் கொஞ்சமாக நீர் வடியும். அது மாமிசத்தை அலம்பிய ஜலம்போலவும் தெளிந்த மோர்போலவு மிருக்கும், சில சமயம் நலதானியத்தி லெதையேனும் கழுவிய நீர்போலவுமிருக்கும். இது மாமிசத்தைக் கரைக்கும். இதில் குத்து, வலியும், வரட்சியும் உள்ளே ஒருவித ஓசையும் உண்டாகும்.

2. ***துஷ்ட பித்த விரணம்*** :- இது வெண்மையும் சிவப்புங் கலந்து நிறமாயும் கறுப்புஞ் சிவப்புங் கலந்த நிறமாயு மிருக்கும். தனி மஞ்சளாயு மிருக்கும். இது வெகு விரைவில் உண்டாகும். இதில் நீர் வெகு வேகமாய் ஒழுகும். இது பசுவின் மூத்திரம் போலவும். எண்ணெய் போலவும். முருக்கம்பூச் சாம்பல் கழுவிய நீர் போலவுமிருக்கும். இதில் சில சமயம் உப்பு ஜலம் பட்டதுபோ லெரிச்சலுண்டாகும், காயம் பட்டதுபோல் வலியெடுக்கும், நெருப்பில் வெந்த இறைச்சியைப்போல் சிவந்துங் காணும்.

3. ***துஷ்ட சிலேஷ்ம விரணம்*** :- இது உயர்ந்து கெட்டியாயிருக்கும், அரிப்புடையதாயும் உஷ்ணமுடைய தாயுமிருக்கும், இதிலிருந்து

வெளுத்துப் பிசினைப்போல் குழம்பாய் ஜலம் வடியும். ஜலம் வடியும்போது குத்து, வலியுங் காணும்.

4. **இரத்தவாத துஷ்ட இரணம்** :- இது நல்ல சிவப்பாய்ப் பவளம்போன்றிருக்கும், கரியைப் போலவுமிருக்கும். இதிலிருந்து இரத்தம்போன்ற சிவப்பு நீர்வடியும், சில சமயம் மோரைப்போன்ற நீரும் வடியும்.

சுத்த ரத்த இரணம்

இது கொப்புளமாயிருக்கும். நடுவில் உயர்ந்து வழவழப்பாயிருக்கும். தொந்தரவிராது. உஷ்ணமுடைய தாய் நாவின் நிறமும் கரியின் நிறமும் பெற்றிருக்கும்.

எண்வகை இரண ஸ்தானம்

இரண ஸ்தானங்கள் எட்டு அவை தோல், இறைச்சி, பெருநரம்பு, சிறுநரம்பு, கீல், எலும்பு, வயிறு, மர்மஸ்தானம் முதலிய எட்டு இடங்களாம். இவற்றைப் பற்றிய இரணங்கள் ஒன்றுக்கொன்று கொடியதாகவே இருக்கும். வாதபித்த சிலேஷ்மம் இரத்தம் என்னும் இந்நூல்வகை இரணங்கள் முறையே குத்தல், எரிச்சல், வீக்கம் வாந்தி முதலியவைகளுடனும் தொந்த திரிதோஷங்கட்குரிய துர்க்குணங்களுடனுமிருக்கும்.

சாத்திய இராணம் :- தேக பலமும், இரத்த புஷ்டியும், ஜீரண சக்தியும் உள்ள வாலிபர்கட்கு உண்டாகும் இரணம் சுகமாக கூடியதாம்

கஷ்ட சாத்திய இரணம் :- தொடை, யோனி, சூதம், ஆண்குறி, உதடு, முதுகு, உள்வாய், தாடை, கண், கடைக்கன், பல், நாக்கு, பெருநரம்பு, சிறுநரம்பு, வயிறு, செவி, விலாப்புறம், அக்குள், கொங்கை-என்னும் இவ்விடங்களில் உண்டாகும் இரணங்கள்.

பகந்தரம் அல்லது பவுத்திரம்

வாதபித்த சுப தோஷங்களினாலும், சதா உட்கார்ந்திருத்தல், குதிரை யானை இவைகளில் அடிக்கடி சவாரி செய்தல் இவற்றினாலும்

போகத்தில் கொதிப்பேறி பிரமேகம் உண்டாவதனாலும் பீஜத்திற்கும் அபானத்திற்கும் மத்தியில் கொடியின் அடி நரம்பின் பேரிலாவது அல்லது அதன் பக்கங்களிலாவது அபானவாயிலாவது அண்டத்திலாவது தினவெடுத்து நொந்து வீங்கி, கற்போல் புடைக்கும், முளைபோலும், கழற்சிக்காய் போலும், புடைத்துச் சீழ்வடியும். இதற்கு உடனே சிகிச்சை செய்யாவிடில், குதம் பீஜமத்தி இந்த ஸ்தானங்களில் துவாரத்தை உண்டாக்கி அதன் வழியாக மலம் ஜலம் வரும்படி செய்யும்.

கண்டமாலை

சரீரத்திலுள்ள மேகநீரினால் கழுத்தின் நரம்புகளிலும், அறைகளிலும், அக்குள்களிலும் புன்னைக்காய், கழற்சிக்காய்ப் பிரமாணமாய்ச் சிறிதும் பெரிதுமான கட்டிகளுண்டாகும். கண்டத்தைச் சுற்றி யரித்து வெடித்துப் புண்ணாகும். இது கழுத்தைச் சுற்றி மாலைபோல் பிறப்பதால் கண்டமாலை எனப்படும்.

பிளவை

இது முதுகந்தண்டெலும்பின் மீது மாங்காய், எலுமிச்சம்பழ அளவில் வீங்கும். பின் கண்உண்டாகிப்புரை யோடி தாபச்சுரம், குளிர் முதலியன இருந்தால் இதற்கு இராஜப்பிளவை என்று பெயர்.

முதுகந் தண்டின் ஓரத்தில் திரண்டு வீக்கம் கண்டால் பக்கப்பிளவை யென்று பெயர்.

மார்பில் செண்டுபோல் வீக்கங்கண்டால் மார்புப் பிளவை என்பர். கட்டியின்மேல் சல்லடைக்கண்கள் போல் அநேக துவாரம் உண்டாகும். கட்டியை அழுத்தினால் தயிர்போல் உறைந்த நீர் வெளிப்படும்.

தவளைச்சொறி

சிலேஷ்ம வாதங்களினால் தாமரைக்கொடியிலுள்ள முட்களைப்போல் நொவில்லாமல் வெண்மையான சொறிகள் தேகம் முழுவதும் உண்டாம்.

கிரந்தி

அஸ்தி நரம்பு, மாமிச நரம்பு, மற்றைய நரம்பு ஆகிய இவை மேதையின் தாழவினாலும் வாத சிலேஷ்மத்தினாலும் தேகம் முழுவதும் சிறு கற்களைப்போல் கிரந்திகளை உண்டாக்கும். அவை பழுத்து உடைந்தால், தேன், நெய், கொழுப்பு என்னும் இவைகளைப் போல் சீழ்வடியும், மணலைப்போலும், உமிபோலும் உருண்டை உருண்டையாய்க் கட்டிகள் எழும்பி உடையும். உடம்பில் நமைச்சல் எரிச்சல் எடுக்கும். கறுப்பாய்த் தடித்து செம்முளைகள் தோன்றி வெடித்து நீர்வந்தால் செங்கிரந்தி யென்றும் சொல்லப்படும்.

சூலை

நரம்பின் வழி கெட்டநீர் சென்று தேகத்தில்பரவி! வீங்கிக் கைகால் பொருத்துக்களில் கரடு கட்டி உடம்பெல்லாம் தடித்துப் புண்ணாகும். வெடித்துச் சீழும் ஜலமும் வடியும், புறங்காலில் நமைச்சல் ஏற்பட்டு வீங்கிக் கொப்புளம்போல் திரண்டு உடையும். இது கைகால் பொருந்துக்களில் வீக்கம் முக்கியமாய் ஏற்பட்டு வலி உண்டாகி ஏற்படுவது.

ஆணி

பாதத்தில் முட்கள் தைத்து ஒடிந்தாலும், பருக்கைக் கற்களின்மேல் நடப்பதாலும் அரத்தைப்போலும் இருக்கின்ற முடிச்சுகள் உண்டாகும். அதுதான் ஆணியென்பது.

விப்பருதி

முதல் முதல் தோல், ரத்தம், மாமிசம், எலும்பு, சன்ன நலம்பு, கபநரம்பு என்னும் இவைகளில் பஞ்சுசேருவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து தடித்து எழும்புகின்ற வீக்கத்திற்கு விப்புருதி என்பர். அப்படி ஏற்பட்ட வீக்கமானது தேகத்தில் வெளியிலேனும் உள் பாகத்திலேனும் வேரூன்றி அதிக உக்கிரமான நோயுடன் நீண்டும், வட்ட வடிவமாகவும் புடைத்துக் கட்டியாய் ஏற்படும். கண்டவிடத்திலே இருத்தலை விப்புருதி என்றும் நரம்பின் வழியே ஓடி ஓடித் தடித்தலை

ஓடு விப்புருதி என்றும் சொல்வார். இரத்தக் கெடுதலினாலும், கன்னலான காயங்களினாலு துர் நீர்களினாலு முண்டாகும் வியாதி இது.

சேற்றுப்புண்

மழைகாலத்திலும் கெட்ட ஜலம் கெட்ட மண் இவைகளை மிதித்ததினாலும், அழுகியசேற்றை மிதித்து அதனைக் கழுவாதுவிடல் இவைகளினாலும் பாதங்களின் விரற்சந்து, காலின் ஓரங்களினாலும் பாதங்களின் விரற்சந்து, காலின் ஓரங்களினாலும் குதிகாலிலும் தினவுடன் வெளுத்த புண்ணாய்க் காணும்.

அக்கி

இது கஷ்டமான நோய். கைகால்களின் மடிப்புலும் தலை, கன்னம். கழுத்தின் மடிப்பிலும், தாடைகளிலும் காணும், முதலில் தனித்தனி சிறு கொப்புளங்களாக எழும்பும். பின் அவைகளில் அரிப்புண்டாகி அதனைச் சொரிவதால் அந்த நீர்ப்பட்ட இடமெல்லாம் சிறு கொப்புளங்களாக எழும்பி ரணத்தை உண்டாக்கும்.

நரம்புச் சிலந்தி

நூலிழைபோல் நீண்டு வெளுத்து ஒருவிதப்புழு தேகத்திலிருந்து வெளிப்படுதலை நரம்புச்சிலந்தி என்பர். புண்ணிலிருந்து புழு அறாமல் வந்து விடுவது நலம் அறுந்துவிட்டால் புண் வீக்கம் வேதனையும் அதிகம் உண்டாகி ரோகி அவஸ்தைப்படுவான். தினவெடுத்து நீர்க்கொப்புளம் போற காணும். அதனைக் கீறிவிட்டால் புழு வெளிப்படும். வேதனை நீங்கும்.

அழுகு புண்

இது மாமிசம், தோல் அழுகித் துர்மாமிசத்துடன் வளர்ந்திருக்கம், துர்நாற்றத்துடன் வடியது.

குழிப்புண்

இந்த ரணம் பளபளப்பாயும் மினுமினுப்பாயும் வெண்மையாயுமிருக்கும். இது ஆறாப்புண் என்று சொல்லப்படும். இரணத்திலிருந்து ஜலம்போல் நீர்வடியும்.

சிரங்கு

இதில் நமைச்சல் இருக்கும் இது உஷ்ணத்தால் ஏற்படும் நோய் முதலில் வேர்க்குருபோல் ஆரம்பிக்கும் அதனைச் சொறிந்துவிட்டால், தோலுரிந்து ரணமாகிவிடும். இது ஒரு சிறிய புழுவினால் உண்டாகிறது.

கோடைக்கட்டி அல்லது பரு

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் பெரியவர்கட்கும் குழந்தைகட்கும் தலை, முகம், மார்பு, தொடை முதலிய இடங்களில் சிறு கட்டிகளாக ஆரம்பித்து வீங்கிச் சிவந்து இருக்கும். சில வேளைகளில் சுரம்காயும். இதற்கு ரத்தகட்டியென்றும் பெயர்.

மேகரணம், அல்லது கொறுக்கு

நோயுடைய ஸ்திரீகளுடன் சங்கமம் செய்வதால் கெட்ட நீர் ஆண்குறியில் பற்ற இது காணும். இந்த ரணத்திற்கு மேகரணம் என்றும் பேர். இது மலருக்கு அடியிலிருக்கும் சவ்வின் மடிப்பிலாவது மலரை மூடிக்கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது ஏற்படும். ரோக ஸ்திரீயுடன் சம்போகிக்கும்போது யோனியிலுள்ள மேகரண விஷ நீர் ஆண் குறியில் எவ்விடத்தில் படுகின்றதோ அந்த இடத்தில் இரணம் உண்டாகும். ரோக ஸ்திரீயைச் சேர்ந்த நான்குநாள் முதல் ஒன்பது நாளைக்குள் ரோகம் பிறக்கும். அதாவது ரணம் உண்டாகும். இதை உடனே கவனிக்காவிடில் சீக்கிரம் தேகத்தில் பாவி மேக ஊரல், மேகச்சொறி, மேகரணம் கண்டு அந்த நீர்ப்பட்ட இடமெல்லாம் ரணம் உண்டாகும். இதின் லக்ஷணமாவது ரணத்துக்கடியில் கல்போல் இருக்கும். மிருதுவாகவுமிருக்கும். சில அழுகித் துர்மாமிசம் உண்டாக்கும்.

மரு

தோலில் இருக்கும் சிறியபருக்கள் நீளுவதால் இந்த நோய் உண்டாகின்றது. தோலுக்கு வெளியில் இருந்தால் சொறசொறவென்று இருக்கும். தோலின் மடிப்பில் இருந்தால் ஒருவித கெட்ட நீர் கசியும், அது பட்ட இடமெல்லாம் மரு உண்டாகும்.

ஸ்தனக்கட்டி அல்லது மார்புச்சிலந்தி

ஸ்தனத்தின் சுழற்சி நரம்புகள் தடித்துக் கெட்டிப்பட்டு வீக்கமாய் இது உண்டாகும். நரம்பைப்பற்றி வெளியில் ரணத்தை உண்டாக்கினால் மார்புச்சிலந்தியென்பர்.

கழலை

சரீர சௌக்கியத்தின் பேதத்தினாலாவது, சரீர சௌக்கியம் அதிகப்படுவதினாலாவது, சரீரத்தில் எவ்விடத்திலாவது வட்டமாய் அல்லது உருண்டையாய் உண்டாகும் கட்டியே கழலையென்பது. இது தேகத்தின் உறுப்புக்கு சம்பந்தமில்லாமலே பருக்கும். இது சிலந்திக்கழலை யென்றும் கொழுப்புக் கழலையென்றும் இருவகைப்படும்.

கொழுப்புக் கழலையென்பது கொழுப்பை வைத்திருக்கிற ஜவ்வு வளர்ந்து கட்டியாவது. இது தேகத்தி லெங்கேயமுண்டாகும். இது முதலில் முடிச்சுப்போல் கிளம்பி பிறகு மெதுவாய்ப் பெரிதாகும். இதில் இரத்த நரம்புகள் அதிகமிரா.

சிலந்திக் கழலையென்பது தேகத்தில் உஷ்ணமேற்படுவதால் சிறு கட்டியாய்க் கிளம்புவது. இதில் வேதனையிருக்கும். வரவரப் பருத்துப் பின் உடையும். உடையுங்கால் சீழ் வடியும். கட்டியின் மத்தியில் கம்பின் அரிசிபோல் சிறிய துர்மாமிசமிருக்கும். அதற்கு முளையென்று பெயர். இது இரத்தக் கெடுதலினாலும் கெட்ட காற்று, கெட்ட ஜலம் இவற்றை உபயோகிப்பதனாலும் உண்டாவது.

தொடைவாழை

இது வரும் ஆரம்பத்தில் அடிவயிற்றில் வேதனை ஏற்பட்டு சிரசுநோய், குளிர், சுரம் முதலியன உண்டாகும். பின் தொடையில் வேதனைகாணும். தொடையின் சந்திலிருந்து கெட்ட நீர் ஆரம்பித்துக் கீழக்கு இறங்குவதுண்டு. சில சமயங்களில் முதுகு இடுப்பு இவற்றில் வேதனை இருக்கும். தொடையில் வீக்கங்கண்டு பிகுவாய் இருக்கும்.

தொடை வெளுத்துப்பளப்பளப்பாய் இருக்கும் பழுத்துச் சீழ்க் கொள்வதும் உண்டு சில சமயங்களில் கெண்டைச் சதையில் வேதனைகண்டு முழங்கால் மடிப்பு மார்க்கமாய் மேலுக்கு ஏறுவதும் உண்டு.

வீக்கங்களுக்கும், வேதனைக்கும் அட்டைப் பிரயோகம்

கெட்ட ரத்தங்கள் சேர்ந்து வீக்கம் வலி கண்ட இடத்தை ஜலம்விட்டு நன்றாய்த் தேய்த்து அலம்பி அட்டையைக் கடிக்கவிடவேண்டும். அந்த அட்டையானது அடிவயிறு மடிப்புள்ளதாயும் தலை உருண்டையாயும். கொஞ்சம் சிவந்த நிறமுள்ளதாயும் இருக்கவேண்டும். கடிக்க விடும்போது அது கடிக்காவிடில் கடிக்க வேண்டிய இடத்தில் சர்க்கரை ஜலத்தால் அலம்பிப் பின் கடிக்கவிட்டால் கடிக்கும். அட்டை கடித்துத் தானே கீழே விழும்வரை அதை ஒன்றும் செய்யப்படாது. அப்படி அதனை அகற்ற வேண்டுமாயின் உப்புப்பொடி அல்லது புகையிலைத்தூளை அதின் வாயில்தூவ; அது விட்டுவிடும் இரத்தம் குத்தி எடுக்கவேண்டியவைகட்கெல்லாம் அட்டைப் பிரயோகம் செய்யலாம்.

இரணங்களை அறுக்கக்கூடாத திதிகள் அகஸ்தியர்

சீருள பிரதமை சேரும் பெருவிரல்
 நேர்பெறும் உள்ளங் காலது துதியை
திரிதியை முழங்கால் சேர்ந்திடு மென்க
 சதுர்த்தி பெருந்துடை தாவிய பஞ்சமி
குய்யத் திடத்தே குடியிருந்திடுமாம்
 அய்யனே சஷ்டி அயர்ந்திடும் நாபி
சத்தமி முலையில் தானிருந் திடுமே
 ஒத்திடும் அஷ்டமி யோதினோம் கரத்தில்
மெத்திடு நவமி மேவிய கழுத்தில்
 அதரந் தசமியி லாகுமவ் விடத்தே

ஏகா தசியிலிருந்திடும் நாவில்
துவா தசியில் துயின்றிடும் நெற்றி
திரியோ தசியில் சேர்ந்திடும் புருவம்
சதுர்த்தி பிடரி தானிருந் திடுமே
உதித்திடும் பூரணம் உச்சியி லுறையும்
செப்பிய வமுதம் நிலைநின் றதனால்
சத்திரம் பண்ணிடில் தானெழும் நோய்கள்
கொப்பளித் திடினும் குத்தப் படினும்
தப்பிலா அரவம் தான்கடித் திடினும்
அட்டை கடிக்கினும் அடிதடி சிலந்தியும்
வயிற்றில் பிணியெனும் மரணம் தாகுமே
காசினி தனிலே கைவிஷ தாரி
திதிகளை யறிந்து செய்திடப் பலிக்கும்
மகிழ்பெறு முனிவர் மகிழ்ந்துரைத் தனரே.

இந்தத் திதிகளில் அந்தந்த இடத்தில் அமுதம் தங்கி நிற்கும். அமுதம் இருக்கும் இடத்தில் கட்டிகள் ஏற்பட்டு அறுத்தாலும், அட்டை பாம்பு இவைகள் கடித்தாலும், கொப்பளங்கள் ஏற்பட்டாலும், அடிபட்டாலும், குத்துப்பட்டாலும் மரணம் ஏற்படும். ஆகையால் அமுதம் நிற்கும் இடத்தில் சத்திரம் செய்வது கூடாது.

நகச் சுற்று

விரல்களில் உள்ள நகத்தைச் சுற்றிலும் வலியுடன் வீக்கம் உண்டாகும். பின் எரிச்சல், சுரம் இருக்கும். இவ்விதம் ஒவ்வொரு நகங்களிலும் கட்டிகள் எழும்புவதண்டு. வேதனையைக் கொடுத்து நகங்களின் வேரைக் கெடுத்து வேறு நகம் முளைக்கும்.

கால் வெடிப்பு

சதா நடப்பதினாலும், தேகத்தில் சூடு அதிகரிப்பதினாலும் பாதத்தில் உள்ள சிலேஷ்மமானது குறைவடையும்.

தாமரை
நூலகம்